www.tamilarangam.net

# எரிமலை



P'RAYA
87 RUE DE COLOMBES
92600 ASNIERES SUR - - SEINE ; FRANCE

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

முன்னர்
எம் தாயகத்துக்கு,
ஆடைகட்டி அழகுபார்க்க வந்தசிலர்,
இருந்த கோமணத்தையும் கொண்டு போயினர்.
பின்னர்,
சத்திரசிகிச்சையே சரியெனச் சொன்னவர்கள்
கத்தரிக்கோலையே களவாடிச் சென்றனர்.
"தம்பி" மட்டும் தளராதிருந்தான்.
தன்னுயிர் தாயக விடுதலையென்றான்.
ஒன்று பத்தாக உயிர்ப்புகள் பிறந்தன.
ஒரு தலைமுறையே உணர்வுகொண்டெழுந்தது.
விடுதலைக்காக.....
சக்திக்கு மீறிய விலைகொடுத்துவிட்டோம்.
இன்னும், இன்னும் கொடுப்போம்.
வேலிகட்டிய மண்ணுக்காகவா
இந்த விலைகொடுப்பு?
இல்லை....
விலங்குகளற்று,
கைகள் வீசி நடப்பதற்கும்,
எஜமானர்களின் கட்டளையற்று;
வேலை செய்வதற்கும்,
'எழும்பு' என்று யாரும் சொல்லாது
குந்த ஒரு குடிநிலம் வேண்டும்.
அது
**தமிழீழம்.**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**எரிமலை**

கலை பண்பாட்டு
அரசியல் சமூக ஏடு

**பதினோராம் ஆண்டு**

மார்கழி 1992

# ஆட்டம் காணும் அரச கோட்டை

ஸ்ரீலங்கா அரசாங்கம் எனும் கோட்டையில், பாரிய வெடிப்புகள் விழ ஆரம்பித்து விட்டன. அவை விரிவடைந்து இறுதியில், கோட்டையைச் சிதலமாக்கும் போக்கே காணப்படுகின்றது. அரசாங்கமும், அதன் இராணுவமும் தற்காப்பு நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளன. பாரிய இராணுவ நடவடிக்கைகள், சில நிலப்பகுதிகளைக் கைப்பற்ற உதவினவாயினும், அவை பெரும் செலவீனமானவையாகவும், தாக்குப்பிடிக்க முடியாமல், விடுதலைப் புலிகளின் இடைவிடாத கெரில்லாத் தாக்குதல்களுக்கு உள்ளாபவையாகவும் இருப்பதாக அரச வட்டாரங்களில் கருத்து நிலவுகின்றது. எனவே வடபகுதியை ஏற்கனவே இழந்து விட்டதான மனநிலை அரசாங்கத்திடம் ஏற்பட்டுள்ளது. எனவே, வடபகுதியிலிருந்து பெருமளவில் துருப்புகளை எடுத்து, கிழக்குப்பகுதியையாவது காப்பாற்றுவோம் என்று எண்ணிச் செயல்படுகின்றது. ஆயினும், கிழக்குப் பகுதியில், இராணுவ ரோந்துகள் தொடர்ந்து புலிகளால் தாக்கி அழிக்கப்படுவதாலும், கிராம, காட்டுப் பகுதிகளில் இருந்து மினி முகாம்கள், இராணுவ நிலைகள் ஆகியன தாக்குதல்களுக்கு உள்ளாகியதாலும், அரசாங்கம் கரையோர நகர்ப்புறங்களிலேயே தனது ஆதிக்கத்தை செலுத்தக்கூடியதாக உள்ளது. ஆயினும், விடுதலைப் புலிகள் அங்கும் ஊடுருவி உள்ளதால், நகர்ப்புறங்கள் விடுதலைப் புலிகளால், படிப்படியாக சூழப்பட்டு வரும் உணர்வு அரசாங்கத்துக்கு ஏற்பட்டு வருகின்றது. மேலும், இரவு வேளைகளில், நகர்புறங்களிலும், விடுதலைப் புலிகளின் நடமாட்டங்கள், நகர்வுகள், நடவடிக்கைகள் அதிகரித்து வருகின்றன. எனவே, கிழக்குப் பகுதியில் அமைக்கப்பட்ட சிங்களக் குடியேற்றங்களைப் பற்றிக் கவலை கொள்ள அரசாங்கம் ஆரம்பித்துள்ளது.

தமிழீழ எல்லைகளில் அமைக்கப்பட்ட தனது குடியேற்றங்கள் மட்டுமல்ல, தனது சொந்தப் பகுதிகள் குறித்தே அரசாங்கம் அச்சம் கொள்ள ஆரம்பித்துள்ளது. "தமது எல்லைகள் தம்மை நோக்கி வருவதாக" ஓர் அரசாங்க நாடாளுமன்ற உறுப்பினர், நாடாளுமன்றத்தில் பிரலாபித்தது இங்கு குறிப்பிடத்தக்கது. எனவே, ஸ்ரீலங்காவின் எல்லைப் பகுதிகளையாவது காப்பாற்றுவோம் என்ற நோக்கில், இராணுவ பலத்தைப் பெருக்க எடுத்த முயற்சியும் தோல்வியைத் தழுவி வருகின்றது. படை அணிதிரட்டலுக்கு எவரும் முன்வருவதாக இல்லை. எல்லைக் காவல்படை என்ற விடயம் தரையைவிட்டு எழும்பவில்லை. ஊர்காவல் படைக்கோ, இராணுவத்துக்கோ ஆட்சேர்ப்புகளுக்கு சிங்கள இளைஞர்கள் முன்வருவதாக இல்லை. எனவே முஸ்லீம் இளைஞர்களை இராணுவத்தில் சேர்க்க அரசாங்கம் முயற்சிகளை எடுத்துள்ளது. அதுதவிர, இராணுவத்தைவிட்டு ஓடுவோரின் தொகையே அதிகரித்து வருகின்றது. இதுவரை 12000 பேர்வரை இராணுவத்தை விட்டு ஓடி உள்ளனர். மேஜர் ஜெனரல் டென்சில் கொப்பேகடுவ இறந்த ஆவணி மாதத்தில் மட்டும் 800 பேர்வரை ஓடித்தப்பி உள்ளனர். அரச கணிப்பின் பிரகாரம் ஆவணி, புரட்டாதி மாதங்களில் 1400 இராணுவத்தினர் விலகி உள்ளனர். அதே வேளை ஆயிரக்கணக்கான ஊர்காவல் படையினர், தமிழீழப் பகுதிகளில், செயற்படப் பயந்து, தமது சொந்தக் கிராமங்களுக்கு திரும்பியுள்ளனர். வடகிழக்குப் பகுதியில், சிங்களக் காவல்துறையினர் கடமைபுரிவதற்கு அரசாங்கம் கட்டாயத்தையும், பதவி விலக்கப்படுவதான மிரட்டல்களையும் பிரயோகிக்க வேண்டி உள்ளது. கூடிய சம்பளம், குறைந்த தகுதி போன்ற சலுகைகள் மன உறுதி குலைந்த சிங்கள ஆயுதப் படையினரைத் திருப்திப்படுத்துவதாக இல்லை.

**ஆக்கங்கள்,
அபிப்பிராயங்கள்,
மற்றும் தொடர்புகட்கு:**

**எரிமலை
தாய்மண் வெளியீடு
தமிழர் ஒருங்கிணைப்புக் குழு
c/o T. C. C - France.
341, Rue des Pyrenees,
75020 Paris.
Tel: 43 58 11 42**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மேலும், கொழும்பில் இராணுவ உயர் அதிகாரிகளுக்கே பாதுகாப்பில்லை என்ற விடயமானது அரச உயர் மட்டங்களில் தமது பாதுகாப்புக் குறித்துக் கிலியை ஏற்படுத்தி வருகின்றது. மிகுந்த பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளதான வலயங்களில்கூட புலிகள் ஊடுருவியுள்ளதாக அரசாங்கம் கருதுகின்றது. உயர் குழாத்துக்கே பாதுகாப்பு இல்லையென்றால், தமது பாதுகாப்புக்கு யார் உத்தரவாதம் என்று பொதுமக்கள் அங்கலாய்ப்பும், அரசின் மீது அவநம்பிக்கையும் கொள்ளத் தொடங்கியுள்ளனர். எனவே சிங்கள இனவாதிகள், தங்களது தலைநகரே பறிபோய்விடுமோ என்று அச்சம் கொள்ளத் தொடங்கியுள்ளனர். விடுதலைப் புலிகள் கொழும்பையே கைப்பற்றிவிடுவார்களோ என்ற அச்சம் எதிர்கட்சித் தலைவி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவினால் அண்மையில் வெளியிடப்பட்டதும் குறிப்பிடத்தக்கது. அரசாங்கம் பலவீனம் அடைய அடைய, ஸ்ரீலங்காவில், J. V. P. யின் வளர்ச்சி மீண்டும் துரிதமடைவதனைக் காணக் கூடியதாக உள்ளது. சமூகத்தின் பல்வேறு மட்டங்களிலும், பரவலாகவும், எதிர்கட்சிகளின் ஊடாகவும் இவ்வளர்ச்சி ஏற்பட்டு வருகின்றது. எனவே அரசாங்கம், J. V. P. தலைதூக்குவதையும், எதிர்க்கட்சிகளின் நடவடிக்கைகளையும் கட்டுப்படுத்த வேண்டி உள்ளது. அதனை ஆற்றுவதற்கு அரசாங்கத்திடம் உள்ள வழமையான ஆயுதம் அரச பயங்கரவாதமே. அத்தகு பயங்கரவாதத்துக்கு தகுதியானவராகவே ஸ்ரீலங்கா ஜனாதிபதி உள்ளார். அவசரகாலச் சட்டங்கள், பயங்கரவாதத் தடைச் சட்டங்கள் ஆகியவையின் துணையுடன், ஆயுதப்படையினர், கொலைக் குழுக்கள் ஆகியவற்றின் அட்டகாசம் மீண்டும் கட்டவிழ்த்துவிடப்பட்டுள்ளது. அண்மையில், தீவிலுள்ள 1 கோடி 70 இலட்சம் மக்களும், தம்மை காவல் நிலையங்களில் பதிவு செய்துகொள்ள வேண்டும் என்பதான ஜனாதிபதி காரியாலயத்தில் வெளியிடப்பட்ட அறிக்கையானது அரசாங்கத்தின் அந்தர நிலையையே காட்டுகின்றது. இவ்வடக்குமுறையானது அரசாங்கத்தை மேலும் பலவீனப்படுத்தவே உதவும். அரசாங்கம் மேலும் சர்வாதிகாரமாகச் செயற்படவோ அல்லது இராணுவ ஆட்சிக்கோ இது வழிவகுக்கலாம். இது மேலும் குழப்பத்தை ஏற்படுத்துவதோடு சர்வதேச சமூகத்தில் அரசாங்கத்தின் பெயரை மேலும் கெடுத்துவிடும். இந்த நிலையில், விடுதலைப் புலிகள் தமிழீழ அரசை உருவாக்கும் போராட்டத்தில், அரசாங்கத்தின் மீது கொடுக்கும் தொடர்ச்சியான அழுத்தங்கள், தாக்குதல்கள், நெருக்கடிகள் அரசாங்கத்தை ஆட்டங்காணச் செய்துவிடும். தனது பகுதியையாவது கைப்பற்றிக் கொள்வோம் என்ற நிலைக்குத் தள்ளிவிடும். இவ்வாறு தள்ளாடும் கோட்டைக்கு முண்டு கொடுக்க சில வெளிநாடுகள் முயன்றால் அவை வீண்முயற்சியாகவே இருக்கும். தார்மீக பலமோ, மக்கள் பலமோ, மனப்பலமோ இல்லாத அரசாங்கத்திற்கு கொடுக்கப்படும் பெருமளவு ஆயுத, பண உதவிகள் விழலுக்கு இறைத்த நீராகத்தான் இருக்கும். ▩

# திமிர்

சிறுபுழு, கறையான், நத்தை
செருப்பின் கீழ் நசிவது போல்
அறிவுடை மனிதர் நாங்கள்
அழிந்திட இணங்குவோமோ?
பொறுமைக்கும் வரம்புண்டய்யா,
போட்டிக்கும் எல்லை உண்டே,
அறமென்றும் நீதி என்றும்
அரும் பொருள் இன்னும் உண்டே.

இருட்டுக்குட் சுருட்டிவைத்தாய்,
எங்களை நொறுக்கி வைத்தாய்,
கருத்துக்கு மூடி போட்டாய்
கண்கட்டு வித்தை காட்டிப்
பொருட்களைத் தடுத்து வைத்தாய்,
புழுக்கமும் பசியில் வாடச்
சுருக்கிட்டாய், தவிக்க வைத்தாய்
சுயநலப் பிசாசம் ஆனாய்.

உனக்குப்போல் கழுத்து, கால் , கை,
உனக்குப் போல் மூக்கு, மூளை,
உனக்குப்போல் வயிறு , நெஞ்சம்,
உண்டய்யா எங்களுக்கும்!
"எனக்குத்தான் பூமி முற்றும்"
என்று நீ சொல்லலாமோ?
சினத்தை ஓர் மதம் போல் ஆக்கிச்
சிக்கிப் போய்த் திணறலாமோ?

திமிரினால் நம் மேல் ஏறிச்
செய்யலாம் சவாரி என்ற
நினைவை நீ விடுதல் வேண்டும்.
நெற்றியிற் கல்லை வீசிச்
சமரிலே கோலியாத்தைத்
தாவீது வெற்றி கொண்டான்,
எமனாகி முடிவு கண்டான்
இதனை நீ நினைக்க வேண்டும்.

கண்ணீரும் வெப்ப மூச்சும்
கதறலும் பதைப்பும் சாவும்
வெண்ணீற்றுச் சாம்பல் மேடும்
வெதும்பலும் விளைவிக்கும், நீ
மண்ணோடு மண்ணாய்ப் போவாய்
மமதையின் மதம் பிடித்த
கண்ணோட்டம் ஒழியுமட்டும்
கட்டாயம் ஓயோம், நாங்கள்

- முருகையன் -

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# மாவீரர் நினைவு மரபுகள்

அமெரிக்காவின் மத்திய பகுதியில் நிலவிய பழைமையான நாகரிகம் மாயா நாகரிகமாகும். இது அமெரிக்க இந்தியருடையதாகும். கி. மு. 2000 ஆண்டு தொடக்கம் நிலவியது இந்த நாகரிகம். இந்த நாகரிக மக்கள் போர் வீரர்களை வழிபட்டார்கள். இந்த நாகரிகத்தின் உயர் நிலையின் இறுதிக்காலத்தில் நிறுவப்பட்ட" போர்வீரர்களின் கோயில்" மிகவும் புகழ்பெற்றது. சில சுவர்கள் இடிந்த நிலையில் காணப்படும் "போர்வீரர் கோயில்" மிகவும் கவர்ச்சிகரமானது.

நாட்டுப் பாதுகாப்புப் போரில் ஈடுபட்டு இறந்த வீரர்களை மாவீரர்களாகக் கொண்டு அவர்களை மதித்துப் போற்றும் மரபு உலகெங்கும் நிலவுகிறது. தமிழர் பண்பாட்டில் சங்ககாலத்திற்கு முந்திய காலம் பெருங்கற் பண்பாட்டுக் காலம் எனப்படுகின்றது. இது இறந்தோரை அடக்கம் செய்யும் முறையை ஒட்டிய பெயரீடாகும். தென்னிந்தியாவிலும் இலங்கையிலும் பெருங்கற் பண்பாட்டு தாழிக்காடுகள் பரவலாகக் காணப்படுகின்றன. இப்பண்பாட்டிலிருந்தே சங்ககாலப் பண்பாடு உருவானதாகக் கருதப்படுகின்றது.

சங்ககாலத் தமிழகத்தில் பல இனக்குழுக்கள் காணப்பட்டன. எனினும், பேரரசு உருவாக்கும் நோக்குடன் இக்குழுக்களுக்கிடையே போர் நடைபெற்றது. ஏனைய குழுக்களிடமிருந்து மண்ணையும் பெருஞ்செல்வமாகக் கருதப்பட்ட மாடுகளையும் காக்கப் போர் நடைபெற்றது. இப்போர்களிலே பெருந் தொகையானோர்

> **நாட்டு பாதுகாப்புப் போரில் ஈடுபட்டு இறந்த வீரர்களை மாவீரர்களாகக் கொண்டு அவர்களை மதித்துப் போற்றும் மரபு உலகெங்கும் நிலவுகிறது.**

இறந்தனர். இவர்களை மக்கள் தெய்வீக நிலையில் போற்றினர். இவர்கள் உரையும், பாட்டும் உடையவர்களாக விளங்கினர். இம்மாவீரர்களின் நினைவாக நடுகற்கள் நிறுவப்பட்டன. பெருமன்னர், சிற்றரசர், குறுநிலத் தலைவர், படைத்தலைவர், போர் வீரர் முதலிய அனைவர்க்கும் நடுகற்கள் நிறுவப்பட்டன.

புறநானூறு 221 ஆம் பாடல் கோப்பெருஞ் சோழன் என்ற மன்னனுடைய நடுகல்லைக் குறிப்பிடுகிறது. மன்னனின் உயிர் நண்பரான பொத்தியார் நடுகல்லைப் பரவிய செய்தி இப்பாடலிற் கூறப்படுகிறது. அதியமான் நெடுமான் அஞ்சிக்கு நினைவு நடுகல் நாட்டி விழாக் கொண்டாடப்பட்டது. அதில் ஒளவையார் கலந்து கொண்டார். அப்போது அவனது பெருமையை நினைந்து ஒளவையார் வருந்திப் பாடிய பாடல் புறநானூற்றில் 232 ஆம் பாடலாக இடம்பெற்றுள்ளது. இவர்கள் பெருமன்னர்.

ஒரு குறுநிலப்பரப்பில் பகைவர் ஆநிரைகளைக் கவர்ந்து சென்றனர். அப்பகுதித் தலைவன் அவர்களைத் தொடர்ந்து சென்று போரிட்டு ஆநிரையை மீட்டு வந்தான். காயம் பட்ட அவன் ஊரெல்லையில் வரும்போது வீழ்ந்திறந்தான். அவ்விடத்தில் அவன் வீரச் செயலைப் பாராட்டி நடுகல் நட்டு பந்தரிட்டுப் பரவினர். இச்செய்தி புறநானூறு 260 ஆம் பாடலில் கூறப்பட்டுள்ளது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


தலைவர்களல்லாத படை வீரர்களுக்கும் நடுகல் நடப்பட்டது. அகநானூறு, ஐங்குறுநூறு முதலிய நூல்களில் பாலை நிலத்திலும் வீதிகளிலும் நடப்பட்ட பெருந்தொகையான நடுகற்களைப் பற்றிய செய்திகள் கூறப்படுகின்றன. இவை பெருந்தொகையாக இருப்பதுகொண்டே இவை சாதாரண படை மறவர்க்கான நடுகற்கள் என்பது புலனாகின்றது.

வீரர்கள் வீழ்ந்துபட்ட இடங்களில் இந்நடுகற்கள் நடப்பட்டன. இவற்றில் இறந்த வீரனது பெயரும், பீடும் எழுதப்பட்டன. இந் நடுகற்களுக்கு தெய்வங்களுக்குச் செய்யப்படும் சிறப்புக்கள் செய்யப்பட்டன. நீராட்டுதல், மாலை சூட்டுதல், படையலிடல், மயிற்பீலி சூட்டுதல், தூபமிடல், விளக்கேற்றுதல் இசைக்கருவிகளை ஒலித்தல் முதலியவற்றைச் செய்து காலைதோறும் நடுகல்லை மக்கள் கை தொழுது வழிபட்டனர்.

சங்ககால நடுகற்கள் எதுவும் இதுவரை கிடைக்கவில்லை. எனவே அவற்றில் பெயரும் பீடும் எவ்வாறு எழுதப்பட்டன என்பதை அறியமுடியவில்லை. பல்லவர் காலத்தில் நிறுவப்பட்ட (கி. பி 6-8) நடுகற்களே கிடைத்துள்ளன. இக் கற்களில் அரசன் பெயர், இறந்த வீரனின் பெயர், அவன் இறந்துபட்ட போர் பற்றிய செய்தி முதலியன நடுகற்களில் இடம் பெற்றன. செங்கம் நடுகற்களில் சாசனச் செய்தியுடன் வாளும், கேடயமும் ஏந்திப் போரிடும் வீரனின் உருவப் பொறிப்பும் இடம்பெற்றது. கேரளத்துப் புலப் பள்ளியில் கிடைத்த வீரற்கற்களில் வீரன் போரிடல், இறந்த அவனது உயிரை உயர் நிலை உலகத்து மகளிர் மாலை சூட்டி வரவேற்றல், வீரன் சிவனை இலிங்க வடிவில் வழிபடல் ஆகிய காட்சிகள் சித்திரிக்கப்பட்டுள்ளன. தென்னகத்தில் நடுகல் வழிபாட்டில் ஏற்பட்ட படிமுறை வளர்ச்சிகளை இச்செய்திகள் மூலம் அறிய முடிகிறது.

தமிழீழ விடுதலைப் போரில் மாவீரராகும் போராளிகளுக்கான மாவீரர் மயானங்கள் பெருங்கற்காலத்தையும் சங்ககாலத்தையும் ஒரு சேர நினைவூட்டுகின்றன. இங்கு மாவீரர் அனைவரையும் ஒரே இடத்தில் புதைப்பது பெருங்கற் காலத் தாழிக் காடுகளை நினைவூட்டுகிறது. நினைவுச் சின்னம் அமைத்து பெயரும் பீடும் எழுதுவதும், போற்றுவதும் சங்க கால நடுகல் மரபை நினைவூட்டுகிறது. போரில் உயிர்க்கொடை செய்த ஒவ்வொரு மாவீரனதும் வரலாற்றை உருவாக்கும் முயற்சி தமிழீழத்துக்கே தனியுரிமையானது. படங்களும், உருவச்சிலைகளும் வெளியிடலும், அமைத்தலும் செங்கம், புலப்பள்ளி நடுகல் மரபுகளை நினைவூட்டுகிறது.





1. ஈழத்தில், கதிரவெளியில் கண்டெடுக்கப்பட்ட பெருங்கற்காலத்தைச் சேர்ந்த நடுகல் ஒன்று.

2. தீருவில் திடலில் அமைந்துள்ள மாவீரர் நினைவு தூபி

'வையத்துள் வாழ்வாங்கு வாழ்வான்
வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்'

என்பது மனித தெய்வங்கள் பற்றி வள்ளுவரின் மதிப்பீடு. மாவீரர்களும் மனிதர்களே எனினும், அவர்கள் தமது ஆசாபாசங்களை ஒதுக்கி வைத்துவிட்டு நாட்டுக்காக தமது உடமை, உயர்வு, உயிர் அனைத்தையும் நல்க முன் வந்தவர்கள். இதனால்தான் மனித இனத்துக்கு நன்மை செய்ய முனைந்து உயிர்க்கொடை செய்த மாவீரர்களை அதிமானிடர்களாக மக்கள் கருதி அவர்களை மதித்துப் போற்றுகிறார்கள்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# களத்திலிருந்து ஒரு கடிதம்

## அந்நியமாகிப்போன என் அன்னைக்கு...

அம்மா,

இராணுவ முகாம் தாக்குதல் ஒன்றிற்காகப் பயிற்சி எடுத்துக் கொண்டிருக்கின்றேன்.

எனக்குக் கிடைத்த உணவு நேரத்தில் உனக்கு இந்தக் கடிதத்தினை எழுதி முடித்துவிடவேண்டும் என்ற வேகத்துடன் இக்கடிதத்தை எழுதுகின்றேன். போன செவ்வாய் கிழமை............

அரியாலைச் சந்தியில் என்னைக் கண்ட வேலாயுதம் மாமா கேட்ட கேள்வி.... இப்போதும் என் நெஞ்சில் மாறாத வலியைத் தந்து கொண்டிருக்கின்றது. "பிள்ளை, அம்மா கடிதம் போட்ட வவோ?" வேலாயுதம் மாமா கேட்கிறார். எனக்கு ஒன்றும் விளங்கவில்லை. "ஏன் எனக்கு அம்மா கடிதம் போட வேண்டும்" என்ற இனம் புரியாத உணர்வுடன் கேட்கிறேன்.

"உனக்குத் தெரியாதோ பிள்ளை? உன்னுடைய கொம்மாவும் சகோதரங்களும் கனடாவிலை இருக்கின்ற உன்ரை அப்பாட்டை போட்டினம். நான்தான் கொழும்பிலை கொண்டுபோய் அனுப்பிப்போட்டு வந்தனான். அங்கையிருந்து இப்ப எனக்கு கடிதம் வந்திருக்குது. ஊரிலை என்ன நடக்குது என்று தங்களுக்கு எழுதட்டாம். எல்லாம் வல்ல ஒட்டோவா பிள்ளையார் ஒரு குறையும் விடமாட்டார் என்று எழுதியிருக்கிறா பிள்ளை. அதுதான் கேட்டனான்.... உனக்கும் கொம்மா கடிதம் கிடிதம் போட்டிருப்பா என்று."

சொல்லியபடியே மாமா என் முகத்தைப் பாத்தார்.

என் நெஞ்சில் ஆயிரம் எரிமலைகள் வெடித்தன.... குமுறலை அடக்கிக்கொண்டு வேலாயுதம் மாமாவைப் பார்த்துச் சிரிக்கிறேன்.. ஆம்! வேறுவிதமாக எனக்குப் பதில் சொல்ல முடியவில்லை.

சிரிப்பின் பின்னால் என் விழிகளில் திரண்டு வந்த கண்ணீரை ஆதரவுடன் எனது தோளைப் பற்றிய பொறுப்பாளர் அக்காவின் கரங்கள் துடைத்துவிட்டன. ஒரு கணத்தில் என்னைச் சுதாகரித்துக் கொள்கிறேன். என்னுடைய அக்காக்களையும், அண்ணாக்களையும் நினைத்துப் பார்த்தேன். சண்டைகளிலே காயப்பட்டுப்போய் ஆஸ்பத்திரிக் கட்டிலிலே கிடக்கிற நேரத்திலே அன்போடு அரவணைக்கத் துடிக்கின்ற தேசத்தின் பெற்றோர்களை நினைத்துப் பார்த்தேன்.. பரந்த வெளிகளிலே நீரே இன்றி வரண்டுபோய்க் கிடக்கும் ஆனையிறவின் உப்புச்சேற்று வெளிகளில் நின்று சண்டை பிடிக்கும் போது, பொம்மரையோ செல்லையோ கணக்கெடுக்காது எங்களுக்கு, உணவு, நீர் தந்த எங்கள் அருமைச் சகோதரர்களை நினைத்துப் பார்த்தேன்.

நான் அனாதையில்லையம்மா.....

நான் அனாதை இல்லை, நான் இந்தத் தேசத்தின் குழந்தை.

கொக்காவில் முகாம் தாக்குதலுக்குப் போகும் போது கப்டன் உஷாக்கா சொன்ன வார்த்தையை இப்பவும் என்னால் மறக்கமுடியாயது. 'நாங்கள் இந்த மண்ணின் மைந்தர்கள். எமது வாழ்வும், சாவும் இந்த மண்ணிலே தான்' என்று அவ சொன்னபடிதான் செய்தா அம்மா. அம்மா! கொக்காவில் சண்டையில அவ காயப் பட்டுப் போனா. நெற்றியிலே பெரிய காயம். தனது உயிர் பிரியப்போகின்ற அந்த இறுதி நேரத்திலும், மண்மாதாவை முத்தமிட்டு அந்த மண்ணிலே ஒரு கீறு எடுத்து தன் நெற்றியிலே தனக்குத்தானே நெற்றித் திலகமிட்டுக் கொண்டா அம்மா. இவளைப்போல ஆயிரக்கணக்கான அக்காக்களதும் அண்ணாக்களதும் தியாகத்தால் தானம்மா எமது தேசத்தின் ஒவ்வொரு அங்குல நிலமும் மீட்கப்பட்டுக்கொண்டு வருகிறது.

வீரம் விளைந்த இந்த மண்ணில் பிறந்தவள் அம்மா நான். வீரமும், அளப்பரிய தியாகமும்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நிரம்பிய ஒப்பற்ற தலைவனின் பாசறையில் வளர்ந்த வளம்மா நான். எமக்கு எம் முன்னே சென்ற எங்கள் தோழர்களின் பாதச் சுவடுகள் வழிகாட்டி நிற்கின்றன.

அம்மா,

இந்தக் கடிதத்தை நீ படிக்கும் போது சிலவே ளைகளில் நீ பெற்றெடுத்த உனது மகள் அன்புத் தேசத்தின் அரவணைப்பில் கல்லறை ஒன்றில் துயின் றுகொண்டிருப்பாள். ஆனால் அவளது உணர்வுகளைச் சுமந்தபடி இந்தச் தேசம் திரண்டு நிற்கும். இந்த ஆத்மீக உறவினை உனக்கு எப்படியம்மா விளங்கப்ப டுத்த முடியும்?

என்றாலும்... எப்படியேனும் உங்களது உயிர் களை மட்டும் பாதுகாத்திடவேண்டும், வசதியாக வாழ வேண்டும் என்று அவசர அவசரமாக எனக்குச் சொல்லிக் கொண்டு போகக்கூட நேரமில்லாமல் போன உனக்கு, தாக்குதலுக்கு அணிவகுத்து நிற்கின்ற இந்நிலையிலும் சில விடயங்களைச் சொல்லிவைக்க வேண்டும் என்ற துடிப்புடன் இக்கடிதத்தை எழுதுகி றேன். தமிழீழம். இது எங்கள் பாரம்பரிய நிலமம்மா. இங்கையே நாம் வாழ்வதற்குரிய உரிமை சிறீலங்கா அரசால் மறுக் கப்படுகின்றது என்றால், அன்னிய மண் எவ்வளவு நாளைக்கு ஆத ரவுதரும் என்று நினைக்கிறாய் அம்மா.

"அகதி" என்ற போர்வைக் குள் உங்களுக்கு அடைக்கலம் தந்த நாடுகள் எல்லாம் நீங்கள் உணர்வுகளை அடக்கி ஆமைக ளாக இருக்குமட்டும், தனது சொந்த இலாபங்களைக் கணக் கில் எடுத்து உங்களைத் தாங்கிக் கொள்ளும். எப்பொழுதாவது உங் களிடம் 'மனிதம்' தலை தூக்கும் போது நீங்கள் உரிமை கேட்டுப் போராடுவீர்கள். அப்பொழுது உங்கள் உரிமைகள் மட்டுமல்ல, உயிர்க ளும் விலைபேசப்படும். அப்போது என்னம்மா செய்யப் போகிறீர்கள்? உங்களுடன் தமிழனது வரலாற்றை அழித்துக்கொள்ளப் போகிறீர்களா?

அம்மா,

என்னதான் அன்னை என்ற உறவில் இருந்து நீ அன்னியப்பட்டுப்போய் நின்றாலும்,

எனது தேசத்தின் புதல்வர் களில் நீயும் ஒருத்தி என்பதை என்னால் மறுப்பதற்கில்லை. இந்நிலையை நீயும், உன்னைப் போன்றவர்களும் புரிந்துகொள்ள வேண்டுமம்மா.

உதிரத்தால் எம் மண்ணின் வரலாறு எழுதப்பட் டுக் கொண்டிருக்கும் போது நீங்கள் ஒட்டோவாவி லுள்ள பிள்ளையாரைக் கேட்டு என்ன பலன்?

தமிழனது பண்பாட்டை, அவனது தனித்து வத்தை அழித்துவிடவேண்டும் என்பதில் ஒரே குறி யாய் நிற்கும் சிங்கள அரசு கோயில்களை மட்டுமல்ல பாடசாலைகள், வைத்தியசாலைகள் அனைத்தை யுமே குண்டுவீசித் தகர்க்கிறது.

தென் தமிழீழத்தின் தெருக்களிலே நடமாட முடியாத அளவிற்கு இராணுவ அடாவடித்தனங்க ளும், துரோகக் கும்பல்களின் அட்டூழியங்களும்....

இத்தனைக்கும் மத்தியில் தான் இன்று எமது போராட்டம் நடந்து கொண்டிருக்கின்றது. எந்தத் தடைகள் வரினும் தகர்த்தெறிந்து, போராடுகின்ற அந்த மனோவலிமைதனை எம்முள் தலைவன் வளர்த்திருக்கிறான். இந்த மனோவலிமையுடன் தான் நாம் பாரதத்திற்கு பாடம் படிப்பித்தோம். சிறிலங்கா அரசிற்கு சிம்ம சொப்பனமாக இருக்கி றோம்.

இது எங்களது உரிமைப் போராட்டம் அம்மா!

இது நாங்கள் வாழ்வதற்காக மேற்கொள்ளு கின்ற போராட்டம் அம்மா. 'வேலை இல்லாதது கள், கஸ்டப்பட்டதுகள் அதுகள் போய்ச்சாகலாம், எங்களுக்கு என்ன தலைவிதியா' என்று உன்னைப் போல் அவசர அவசரமாக ஓடி வந்தவர்களுக்கும் இதை ஒருதரம் சொல்லிவை அம்மா.

எங்களது எல்லைகள் மீட்கப் படும் வரை எங்கள் மண்ணிலே புலிக்கொடி உயர்ந்து, எழுந்து நின்று ஆடும் வரை எங்களின் போராட்டம் தொடரும். இந்தப் போராட்டத்தில் நாளை நானும்... என் தோழர்களும் இம்மண்ணில் விடுதலைக்காக விதையாய் போயிருப்போம்.

அப்போது...

நீ உனது மகளை பற்றித் தெரிந்து கொண்டதிலும் பார்க்க, எனது தேசம் உனது மகளைப்பற்றி கூடுதலாக அறிந்திருக்கும். அவர்களிடம் கேட்டு உன்னால் என்னை, என் தோழர்களைப் புரிந்துகொள்ள முடியாது.

நானும், எனது தோழர்களும் துயில்கின்ற 'அங்கே' செல்வாயா....

உன்னால் விளங்கிக்கொள்ள முடியாமல் போன அத்தனை விடயங்களையும் அங்கே வீசு கின்ற காற்று உன் காதில் அறைந்து சொல்லும்.

மண்டியிட்டு என் கல்லறை முன் அழுது என் உணர்வைக் காயப்படுத்தி விடாதே.

உன்னிடமிருந்து கேட்டுக் கொள்வதல்லாம் ஒன்று தான்.

நாளை எமது தேசத்தின் சுதந்திர விடியலில் உன்னை, எனது அப்பாவை, என் சகோதரர்களை வரவேற்க என் மண் காத்து நிற்கும். அப் போது.....

என் உடன் பிறந்தவர்களுக்குச் சொல்லி வை இதுதான் எங்களின் தேசம் என்று.

**உனதுமகள் ஆண்டாள்.**

**நாளை எமது தேசத்தின் சுதந்திர விடியலில் உன்னை, எனது அப்பாவை, என் சகோதரர்களை வரவேற்க என் மண் காத்து நிற்கும். அப்போது.....**

**என் உடன் பிறந்தவர்களுக் குச் சொல்லி வை, இதுதான் எங்களின் தேசம் என்று.**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




# நெய்தல் ஒரு மதிப்பீடு

பேராசிரியர் அ. சண்முகதாஸ்

ஒன்பது பாடல் கொண்ட 'நெய்தல்' ஒலிப்பதிவு நாடா விடுதலைப் புலிகளின் கலை, பண்பாட்டுக் கழகத்தினால் வெளியிடப் பட்டுள்ளது.

கடலும் கடல் சார்ந்த இடமும் பண்டைத் தமிழ் இலக்கியங்களிலே 'நெய்தல்' என்ற பெயராலே அழைக்கப்பட்டது. இங்கு மதிப்பீட்டுக்கு எடுக்கப்பட்டுள்ள இசை நாடாவிலே அமைந்துள்ள பாடல்கள் யாவும் கடற் கரைப் பிரதேசத்தையும், அப்பிரதேசத்து மக்கள் வாழ்வினையும் வெளிக்காட்டுவனவாக அமைந்துள்ளன.

சங்க இலக்கியங்களிலே நெய்தல் பாடல்களைப் படிப்பவர்கள் இரண்டு வகையான உணர்வுகளை அவற்றின் மூலம் இனம் கண்டு கொள்வர். ஒன்று, கடலிலே மீன்பிடிக்கச் செல்பவர், கப்பல் ஓட்டுபவர் ஆகியோருடைய வீரம். மற்றையது, நெய்தல் நிலப்பிரதேசத்து மக்களுடைய இரங்கத்தக்க வாழ்வு. இவ் ஒலிப்பதிவு நாடாவிலே அமைந்துள்ள பாடல்களிலே இவ்விரு உணர்வுகளும் புலப்படுத்தப்பட்டுள்ளன.

'ஆழக் கடலெங்கும் சோழ மகராஜன்
ஆட்சி புரிந்தானே அன்று - தமிழ்
ஈழக் கடலெங்கும் எங்கள் கரிகாலன்
ஏறி நடக்கிறான் இன்று
காலை விடிந்ததென்று பாடு - சங்க
காலம் திரும்பியது ஆடு

என்று ஒலிப்பதிவு நாடாவின் முதற்பாடலே விறு விறுப்புடன் வீர உணர்வு பொங்கிட அமைந்து விடுகின்றது. கடற் காவியப் பாடல்களுக்கு இது நுழைவாயிலாகின்றது.

இதே போன்று 'கடலதை நாங்கள் வெல்லுவோம்' என்ற பாடலும் வீரஉணர்வு புலப்படும் பாடலாக அமைகின்றது.

இன்னொரு புறத்தில், நெய்தல் நிலத்துக்கேயுரிய சோக உணர்வும் சில பாடல்களாலே புலப்படுத்தப்படுகின்றது. நெய்தல் நில மகளிர் மிகவும் பரிதாபத்துக்குரியவர்.

'கரை மேல் பிறக்க வைத்தான் எங்களை கண்ணீரில் மிதக்க வைத்தான்' என்பது அவர்களது அனுபவ உணர்வு. இன்று மாலை படகுகளிலே கடலுக்குச் செல்லும் மீனவர், அடுத்த நாள் திரும்பி வரும் வரை என்ன நடக்குமோ என்று வீட்டிலுள்ள மகளிர் ஏங்குவது இயற்கை வாழ்வு, இவ்வித இயற்கையான சோக வாழ்வுடன், தங்கள் இளங் குருத்துக்களின் கடல் வீரத்தின் மத்தியிலும் ஏற்படும் சிறு சோகங்களும் கலக்கும்போது ஏற்படும் இரங்கு நிலையைநாம் வார்த்தைகளாலே வடித்துவிட முடியாது. இதற்காகத்தான், வார்த்தைகளுடன் இசையினையும் சேர்த்து நெய்தல் நில மக்களின் இரங்குணர்வை இவ்வொலிப்பதிவு நாடா மூலமாகப் புலப்படுத்துகின்றனர். 'வெள்ளி நிலா விளக்கேற்றும் நேரம்' என்னும் பாடல் இதற்கு நல்லதொரு எடுத்துக்காட்டாகும்.

இசை என்றுமே உயிர்த் துடிப்பும் இனிமையுமுடையது. உயர் இசை மெல்லிசை என்பவற்றுடன் நாட்டார் இசை சேருமிடத்து அக்கலவை புதிய தன்மை உடைய இசையினை எமக்கு நல்கும். அது மிகுந்த கவர்ச்சி ஆற்றலுடையதாக அமையும்.

'முந்தி எங்கள் பரம்பரையின் கடலம்மா - கரை
முற்றும் நாங்கள் குடியிருந்த மடியம்மா'

என்ற பாடல் அத்தகைய கவர்ச்சி ஆற்றலுடையதாக அமைகின்றது. அப்பாடலின் இன்னொரு பகுதி,

'அமுது கொண்டும் தொழுது கொண்டும்
இன்னும் வாழ்வதோ - எங்கள்
அப்பு ஆச்சி வாழ்ந்த மண்ணை
எதிரி ஆள்வதோ'

என அமைகின்ற அம்பாப் பாடலோசையும் கப்பற் பாட்டிசையும் நன்கு பொருந்த, பாடலைப் பாடிய ஆண்குரலும் நன்கு இசைவுறப் பாடல் அமைகின்றது.

கடல், கடலலை, கடற்கரை வாழ் மக்கள், தமிழர் கடல் வீரவரலாறு இவற்றையெல்லாம் இன்றைய கடற் போராளிகளுடைய அனுபவ உணர்வுகளுடன் இணைத்துப் பாடல்கள் புனையப்பட்டுள்ளன.

அப்பாடல்கள் புலப்படுத்தும் உணர்வுகளுக்கேற்ற இசை வழங்கப்பட்டுள்ளது.

இப்பாடல்களைக் கேட்பவர்கள் நிச்சயமாக உள்ளம் உருகுவார்கள்.

புதிய வீறுநடை உணர்வு பெறுவார்கள். பாடல்களைப் புனைந்த கவிஞர்களும் இசை வழங்கிய இசை வல்லாளனும் பாராட்டுக்குரியவர்கள்.

'காலை விடிந்ததென்று பாடு - சங்க
காலம் திரும்பியது என்றாடு'

என்ற பூரிப்புணர்வை 'நெய்தல்' ஒலிப்பதிவு நாடா நமக்கு வழங்குகின்றது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




"இந்துஜா... இது யாரம்மா...?"

"மாமா......"

"இது...?"

"அம்மாச்சி"

"இது....?"

"........"

இந்துஜா மௌனமாக இருந்தாள். துண்டிக்கப்பட்ட தன் கையையும் புகைப்படத்தையும் மாறி மாறிப் பார்த்தாள்.

"இந்து... இது யாரம்மா..?" திரும்பவும் அதே படத்தைக் காட்டி, கேள்வியில் அழுத்தம் கொடுத்துக் கேட்டேன்.

இமைக்க மறந்து எங்கேயோ வெறித்து நோக்கினாள்.

எட்டுவயது நிறையவில்லை, அவளது எதிர்காலம்.....? முடிந்து போன அந்தக் கொலை கண்ணில் அப்படியே தெரிந்தது.

வற்றாப்பளை அம்மன் கோயிலின் கோபுரங்களும், மாடங்களும், குண்டுவீச்சில் இடிந்து கிடந்தன.

ஆனால் மக்கள் அவள் மீது இன்னும் அசையாத நம்பிக்கை கொண்டிருந்தனர். அதன் பிரதிபலிப்பே இவ்வருடமும் பொங்கல்........

தடைப் பிரதேசம். மனித நடமாட்டம் கண்டால் முல்லைத் தீவு சிங்களப்படை முகாமிலிருந்து செல் வந்து விழும். ஆனாலும் பொங்கல் இவ்வருடமும் தொடங்கியது. பாழடைந்த இடிபாடுகள் மனதில் ஒருவித பய உணர்வை கொடுத்தாலும் பொங்கல் ஆரவாரத்தில் அதை எல்லோரும் மறந்திருந்தனர். "விளக்கெரிக்கேக்க தீர்த்தம் எடுக்கேக்க செல் அடிச்சவன் ஏன் பொங்கலுக்கு அடிக்க மாட்டான்" "வருசா வருசம் பொங்கலெண்டு அவனுக்கு தெரியும் தான், அவன் அடிக்க மாட்டான்."

"பேக்கதையல்ல கதைக்கிறியள். உதெல்லாம் அவன் இப்ப பாக்கிறேல்ல. ஏன் இந்தமுறை பொங்கல் கொண்டாடாட்டா என்ன வந்தது?"

"இல்லைப் பாரும், செஞ்சிலுவைச் சங்கம் பொங்கலுக்கு அனுமதி எடுத்ததாம்."

"அனுமதி எடுத்தா அடிக்க மாட்டான் தானே"

இப்படிப் பலர் பலவிதமாகப் பேசிக்கொண்டார்கள். எனது மனம் செல்லடிப்பான் என்றே கூறியது. ஆனாலும் போன வருடமும் பொங்கலுக்குப் போகாதது மனதைக் குடைந்தது. அதனால் அதிகாலையிலேயே குளித்துவிட்டு மனைவி பிள்ளைகளுடன் கோயிலுக்குப் புறப்பட்டேன். கோயிலடிக்கு சென்றதும் மனதில் ஒரு திருப்தியேற்பட்டது. ஒரு புறத்தில் இலங்கை செஞ்சிலுவைச் சங்க வாகனமொன்று கொடியைப் பறக்கவிட்டவாறு நின்றது. காவடிகள் கூட்டம் கூட்டமாக ஆடி கோயிலை வலம் வந்து கொண்டிருந்தன. நந்திக் கடலின் மறு கரையில் சிங்களப்படை முகாமின் காப்பரண்கள் தெளிவாகத் தெரிந்தன. வேகமாகச் சென்று அம்பாளைத் தரிசித்துவிட்டு கோயிலுக்கு சற்றுத் தொலைவில் மர நிழலில் வந்து அமர்ந்தேன்.

"அப்பா கடலைக்கொட்டை வாங்கிக்கொண்டு வரவேணும் காசு தாருங்கோ" பிள்ளைகள் தொல்லை கொடுத்தார்கள். காசினைக் கொடுத்து அவர்களை அனுப்பும் போது , "செல் அடிச்சா ஓடாமல் விழுந்து படுத்திட வேணும்" என அவர்களிடம் வலியுறுத்தினேன். சில நிமிடங்களில் கடலையுடன் அவர்கள் திரும்பினர்.

கடலை வாங்குவதும், அம்மம்மாக் குழல் வாங்குவதும், ஐஸ்பழம் குடிப்பதும் தானே அவர்களின் பொங்கல்! உழவு யந்திரத்தில் தூக்குக்காவடியொன்று வந்து கொண்டிருந்தது. தூக்குக் காவடியின் துலாவில் இருவர் நின்று காவடியை ஆட்டிக்கொண்டு நின்றார்கள். காவடிக்குப் பின்னே பெருந்திரளான பக்தர்கள் வந்து கொண்டிருந்தார்கள். காவடிகள்..... கற்பூரச்சட்டிகள்... மேளங்களின் அகோர அடி...

நேரம் அதிகமாக அதிகமாக மக்கள் வரும் தொகையும் அதிகரிக்கத் தொடங்கியது.

திடீரென ஒரு முழக்கம்.

மக்கள் திசைமாறி ஓடினார்கள். பெரும் மக்கள் கூட்டம் செஞ்சிலுவைச் சங்க வாகனத்தைச் சுற்றிக் கூடியது. இரண்டாவது செல் வாகனத்தை அண்டியதாக வீழ்ந்து வெடித்தது. எங்கும் ஒரே அவலக்குரல். செஞ்சிலுவைச் சங்க வாகனத்தின் ரயர்கள் செல் துண்டுகளால் சிதறியது. அதிலிருந்தவர்களது கதியைப் பார்க்க யாருக்கும் நேரமில்லை. அடுத்த செல் விழுவதற்குள் ஓடித்தப்ப வேண்டும் என்ற எண்ணம். ஓடி

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

னார்கள். ஐந்நூறு யார் தூரம் அனைவரும் ஓடியிருப்பார்கள். அடுத்த செல் மக்கள் சென்ற திசையில் சரியாக வீழ்ந்து வெடித்தது. அழுகைக் குரல் வானைப்பிளந்தது. சில நிமிடங்களில் ஆலயப் பிரதேசத்தில் எவரும் இல்லை. தூக்குக் காவடியின் செடில் முள்ளில் சதை மட்டும் தூங்கிக் கொண்டிருந்தது. காவடியின்றி செடிலோடு ஓடியவர்கள் ஒருபுறம், காவடிகள் ஒருபுறம். குழந்தைகளை விட்டு ஓடிய தாய்மார் ஒருபுறம், ஆலயவீதி எங்கும் சிதறிக்கிடந்த உடல்கள்... அனாதையாய்க் கிடந்த குழந்தைகள். எழுதமுடியாத, சொல்லில் விளக்கமுடியாத கோர நிகழ்வு. துணிந்த சிலர் வாகனங்களுடன் ஆலயவீதிக்கு விரைந்து வந்தனர். யாரைத் தூக்குவது... யாரை விடுவது .... அங்கே சைக்கிளின் அருகில் ... ஆம் மனைவி கணவன்.. மனைவி பிள்ளைகள்...

ஒருவர் மேல் ஒருவர் வீழ்ந்து...

இந்துஜாவும், தாயும் உயிருக்காகப் போராடிக்கொண்டிருந்தனர். அவளது தங்கையும், தந்தையும் இரத்த வெள்ளத்தில் அங்கப்பிரதட்சணை செய்து முடித்துக் கிடந்தனர். கால்கள் சிதறிய நிலையில் சதையும் தோலும் தொங்கப் பலரை தூக்கி ஏற்றிக்கொண்டிருந்தனர் வேறு சிலர்.

இருபதுக்கு மேல் சிதறிய உடல்கள்.....
நாற்பதுக்கு மேல் உணர்வற்ற உயிர்கள்.
கொலை...

சிங்கள அரசின் திட்டமிட்ட படுகொலை. கடவுள் சந்நிதானத்தை மறந்த கொலை. புத்த தர்மம் புதைகுழியில் புதைக்கப்பட்ட கொலை.


தந்தையும், தாயும் நின்ற அந்தப் புகைப்படத்தை இந்துஜாவுக்கு திரும்பவும் காட்டி "இது யாரம்மா?"

"......"

அவளின் பிஞ்சு உதடுகள் அசைந்தன. ஆனால் வார்த்தைகள் வெளிவரவில்லை. அகல விரிந்த கண்முன்னே கட்டுப்போட்ட தன் மொட்டைக் கையைத் தூக்கிப் பார்த்துக் கொண்டே இருந்தாள்.

பெருமூச்சுடன் அந்தப் புகைப்பட சேர்ப்புப் புத்தகத்தை மூடினேன்...

— ஆக்கம் —
மணலாறு. விஜயன்



# பயன் அற்றுப்போன நாட்கள்

- பாப்பாப்பா -

சில மாதங்களுக்கு முன்பு ஒரு இளம் போராளியுடன் நெருங்கிப் பழகும் வாய்ப்புக் கிடைத்தது. அவன் வவுனியாவில் பிறந்தவன். அங்கேயே நீண்டகாலம் களத்தில் போராடியவன். காலில் பலத்த காயம்பட்டு சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் வந்திருந்தான். சுகமடைந்த பின்பும் சிறிது ஓய்வெடுக்க வேண்டும் எனப் பொறுப்பாளர் சொன்னதால், வீண்பொழுது போக்காமல், ஆங்கிலம் படித்துக்கொண்டிருந்தான். அன்பாக, பண்பாகப் பணிவாகப் பேசுவான். அவனுடன் பேசிக்கொண்டிருப்பதில் மகிழ்ச்சியும் மனநிறைவும் தோன்றும்.

"இப்படியே இருக்க சோம்பலாய் இருக்கு; நான் போகப்போறன்" என்றான் ஒருநாள்.

"ஏன் தம்பி இங்க இருக்கப் பிடிக்கவில்லையா? என்று கேட்டேன்.

"இங்க இருக்க வீண் பொழுது போகுது ஐயா... வன்னிப் பகுதியில் எங்களுக்குக் கன வேலை இருக்கு. அங்கதான் பெருமளவில் மண்ணை ஆக்கிரமிக்கிறான்கள்.... இப்படி ஓய்வெடுத்துக்கொண்டிருந்தால் எப்பதான் போராட்டம் முடியிறது.. ஆயுதம் பிடித்த கை இது... சும்மா இருக்கச் சினமாய் இருக்கு" என்று பதிலளித்தான் அவன்.

என் கண்கள் பனித்தன.

விழுப்புண் படாத நாட்களையெல்லாம் பயனற்றுப் போன நாட்களாக எண்ணிக் கழிப்பவன் வீரன் என்று 2000 ஆண்டுகளுக்கு முன்பு சொன்ன செந்நாப் புலவரை நினைத்து வியந்தேன்.

அவர் அன்று எழுதிய குறள் இது.

"விழுப்புண் படாத நாள் எல்லாம் வழுக்கினுள் வைக்குந்தன் நாளை எடுத்து".

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



"மங்கும் பொழுதளவும்
வாடித்தொழில் புரியும்
மக்களெல்லாம்
இறைவன் வடிவல்லவா"

**எ**ங்கள் தேசத்தின் தொழிலாளிகளில் இவனும் ஒருவன். தன் காலில், தன் உழைப்புத் திறனோடு போர் புரியும் மண்ணில்....

குண்டு விழுகின்றது. கூரை சிதைந்து குந்தியிருக்கும் குடிலும் அழிகின்றது. எனினும் தள்ளி ஒரு குடிலமைத்து மீண்டும் தொடங்கும் மிடுக்கிருக்கே; அது எம் தாய் மண்ணுக்கே சொந்தம்.

இவன் தேசத்தின் துயர்ப் போர்வை கிழிக்கும் செயலில் தோள் கொடுத்து, கை கொடுத்து, துயர்நீக்கி, தூக்கி நிமிர்த்தி இப்படி பல குணங்களின் வடிவாக இருக்கின்றான்.

இவர்கள் மண்ணுக்கு வாய்த்தவர்கள். இவன் மனையில் மகிழ்வாடும். குடும்பம் சிறக்கும். மண் கொழிக்கும்.

இவன் வேலை முடிந்து வீடு திரும்பும் போதும் கையில் எவ்வளவு உழைத்தாய் என்று கணக்குப்பார்க்கின்ற மனையாளில்லை.

ஊரில் எல்லோரும் மாவீரர் பணியில் ஈடுபட்டிருக்கின்றனர். "நீங்களும் போய் ஒரு கை கொடுங்கோ!" என்று வழியனுப்புபவளே அவளும்.

மனம் களைக்கவில்லை. பிரிவுத் துயரில்லை. அடிமை என்றொரு வாழ்வில்லை. கைகட்டி சேவகம் செய்யும் நாளில்லை.... அவன் தாய்த்தேசத்தில் அவன் நிற்பதே பெரும் துயர் கலைக்கும் பேருழைப்பு. அதுவே பெருவாழ்வு என நிமிர்ந்து நிற்கிறான்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



எம் மக்கள் மனங்களில் மகுடமிட்டு அரசோச்சும் மாவீரரும் அவர் தம் வாழ்வும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அன்றைய நாள் தமிழீழத்திற்குத் துயரம் தரும் நாளாய் விடிந்தது. அன்று காலைதான் ராஜன் எம்மை விட்டுப் பிரிந்தான்.

முதல்நாள் மாலை, பண்டத்த ரிப்பில் நின்ற போராளிகளைப் பார்க்க வந்த ராஜனிடம், எதிரியின் சிறியபடையணி ஒன்றின் மீதான சிறிய தாக்குதல் திட்டம் ஒன்றைக் கூறினர் கோபியும் தோழர்களும்.

எதிரியின் புதிய நில ஆக்கிர மிப்புக் கண்டு குமுறிக்கொண்டிருந்த ராஜன், உடனடியாக ஒப்புதல் தந்து விட, சிறிதாய்த் திட்டமிடப் பட்டி ருந்த அந்தத் தாக்குதலுக்கான ஒழுங்குகள் இரவோடிரவாக நடந்து முடிந்தன.



அனுப்பி, நின்று அடிபட்டு.... அவன் வரவில்லை.

கணேஸ், கிங்ஸ்லி என்று எட் டுப் பேருடன் ஒன்பதாவது ஆளாய் ராஜனும் வரவில்லை.

ராஜன் இல்லை என்ற செய்தி மெல்லப் பரவ அதிர்ந்து துடித்தது தமிழீழம்.

அவன் மீது கொள்ளை அன்பை வைத்திருந்த தலைவர், உயிராய்ப் பழகிய நண்பர்கள், அவனால் உரு வான போராளிகள், அவனைக் காத்த மக்கள் என்று தமிழீழம் அழுது துடித்தது.

ராஜன் ரோமியோ நவம்பர். எம் போராளிகள் மனதில் நிறைந்து விட்ட இனியபுயல், இறுகிய பாறை.

# உறுதியின் உறைவிடம்


திட்டம் மிகவும் சிறிய தாகவும், சுலபமானதாகவும் எதிர்பார்க்கப்பட்டதால், திட் டம் பற்றி அதில் நின்றவர்க ளைத் தவிர வேறு எவருக் குமே, எதுவுமே தெரியாது போய்விட்டது.

திட்டத்தின் வெற்றிபற்றிய வோக்கிச் செய்தியை எதிர் பார்த்தபடி காத்திருந்தான் ராஜன்.

கிளைமோர் சத்தம் கேட் டவுடன் கோபி... கோபி...... என்று கூப்பிட்டும் தொடர்பில் லாமல் போக,

'ராஜன் வழமையான ராஜனாய்' மாறிப்போனான். தலையில் காயத்துடன் கோபியைக் கண்டதும் அவன் வழமையான ராஜனாய் மாறிப் போனான்.

என்ன நடந்ததோ? இரவு கிளைமோர் வைத்தவர்கள் கவனமின்றி நிற்க எதிரி கண் டானோ? இல்லை எம்மவர் ஏதேனும் வோக்கியில் மாறிக் கதைத்து விட்டனரோ? வேவு



பார்த்தோர் தவறோ? வேறு பிழை களோ?

கோபியின் அணியைச்சூழ்ந்து எதிரிகள். - தனி ஆளாய் உள்ளே புகுந்த ராஜன், எல்லோரையும் பின்னுக்கு

அடிக்கடி ரவைகளால் தைக்கப்பட்டு, பிய்பட்டு, ரத் தம் கொட்டி, தழும்புகளால் நிறைந்த தேகம்.

அவனது மனம் மட்டும் தளரவில்லை; அது இறுகிப் பாறையாய் உருவாகியிருந்தது.

1987 இன் ஆரம்ப ஆண்டு, ஓர் இருண்டபொழுது. யாழ். பொலிஸ் விடுதியும், தொலைத்தொடர்புக் கட்டிடமும் கோட்டைக்குத் துணையாய் நிமிர்ந்து நின்றன.

அதைநோக்கி இருளோடு
இருளாய் நகரும்
புலிவீரர்கள்.
அதில் ஒருவனாய் ராஜன்.
தன்கை ஆயுதத்தைத் தான்
பார்க்கமுடியாத காரிருள்.
பின்னால் நிற்பவரின் மூச்
சும் சுடும்.
வியர்வையால் குளிக்கும்
தேகம்.
தாகம் தண்ணீருக்காய் மட்
டுமல்ல, அதற்கும்
மேலாய், உயர்வாய்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தாகம் தணிக்க உயிர்கொடுக்கத் தயங்காத
வேகம், உறுதி.
இது எம் தாயகம். எங்கள் பூமி.
இங்கு அந்நியனுக்கு என்ன வேலை?
இன்று வெல்வோம்.
அந்நியன் பாடம்படிப்பான்.

அக்காலத்தில் அவன் காரைநகர் கடற்படைக் காவலரண் பொறுப்பாளன். அதற்கு முந்தைய சண்டையிலெல்லாம் தன் முத்திரையை ஆழமாய்ப் பதித்திருந்தான். கிட்டண்ணை அவனைக் கவனித்து வைத்திருந்தார். இந்தச் சண்டைக்கென ராஜன் கிட்டண்ணையால் விசேடமாக அழைக்கப்பட்டிருந்தான். ராதா அண்ணை தலைமையில் உள் நுழைந்த குழுவில் ராஜனும்.

உள் நுழைவோருக்கு குறுகியதாயும் வெளியில் நிற்போருக்கு நீண்டதாகவும் அமைந்த இரவு விடிந்த போது.....

தனது படை வீரர்களை "யாழ்ப்பாணக் காடுகளில்" தேடிக் கொண்டிருந்தது ஸ்ரீலங்கா அரசு.

யாழ்ப்பாணத்தில் காடுகளைத் தேடிக் கொண்டிருந்தது உலகு.

தன் நண்பர்கள் சிலரையும், தன் கைவிரல்களில் இரண்டையும் இழந்தபின், மருத்துவமனையில் இருந்து, அந்தச் சண்டையில் தனது அனுபவத்தை மீட்டுக் கொண்டிருந்தான் ராஜன்.

இந்திய இராணுவக் காலம், அந்த இரும்பை உருக்காக உருவாக்கிய நாட்கள்.

இந்தியக் காலத்தில் ராஜனின் நாட்கள் வீரம் செறிந்த நாட்கள். அவன் நின்றுபிடித்தது வெறும் அதிர்ஷ்டத்தினால் மட்டுமல்ல. வீரம், விவேகம், அவதானம், அன்புக்கினிய எம்மக்களின் பாசம் இவைதான் அவனைக் காப்பாற்றிய கவசங்கள். தொடர்ச்சியான முற்றுகைகள், தொடர்ந்து தூக்கமற்ற இரவுகள்.

முற்றுகை ஒன்றிலிருந்து பாய்ந்தோடித் தப்பிவந்த நாளின் மறுநாட்காலை, ஒரு வாரக் கசகசப்புத் தீரக் குளித்துவிட்டு நொண்டிக் கொண்டு வந்தான். அன்புத் தோழனின் மடியில் ஈரம் ஊறிய காலை முள்ளெடுக்கக் கொடுத்துவிட்டு இருந்தவன் அப்படியே தூங்கிப் போனான், பாவம்.

எத்தகு நெருக்கடிகள் மத்தியிலும் உறுதி தளராத இரும்பு மனம், அதிகம் பேசாதவன். போர்க்களத்தில் பேசுவான் - உறுதியாய், தன்னம்பிக்கையுடன், சக போராளிகளை இலகு நிலையில் வைத்திருக்கும் நகைச்சுவையுடன்.

முன்னாள் யாழ். மாவட்டத் தளபதியும், சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணியின் சிறப்புத் தளபதியும், தற்போதைய 'அதிகாரிகள் பயிற்சிக் கல்லூரி'ப் பொறுப்பாளருமான

**லெப். கேணல் ராஜன்**
**(சோமசுந்தரம் சற்குணம்)**

பிறப்பு: 14-02-1966
வீரச்சாவு:27-08-1992

இந்தியச் சண்டையின் ஆரம்ப நாட்கள். எமது பொன்னாலைப் பனை வெளிகள் ஊடாக அந்நியப் பாதங்கள். அனுபவம் குறைந்த எமது வீரன் ஒருவனிடம் இயந்திரத் துப்பாக்கி. அவனது சூடுகள் உயர்ந்து மேலாய், மிக மேலாய், வீணாகிப் போயின. இதைக்கண்ட ராஜன் "டேய் தம்பி! ஆமி இன்னமும் பனையிலை ஏறேல்லை. கொண்டா ஜி. பி. எம். ஜியை." ஆயுதம் கைமாற அந்நியர் தறிகெட்டு ஓடுகிறார்கள். அந்தச் சண்டையும் ராஜனின் தொடையில் ஆழமாய் ஓர் சூட்டுத் தழும்பினைப் பதித்து வைக்கின்றது.

பொன்னாலையில் கால் கிழிந்து, இந்தியாவில் காயம் ஒழுங்காக மாறமுதல், நாட்டுக்கு என்று துடிதுடித்துப் புறப்பட்டு, மீன்பிடிப்படகில் தீவுக்கு வந்து, இங்காலே வந்தால், எங்கும் இந்தியத் தலைகள், தடைகள்.

"எங்கட ஆட்கள் எங்கே?" என்று எல்லாச் சனத்தையும் கேட்டுத் திரிந்து சந்தித்தான்.

யாழ்ப்பாணத்தில் எங்கும் இராணுவ முகாம்கள் நிறைந்திருந்த காலத்தில் ராஜன் வந்து சேர்ந்ததும், இந்தியர்கள் பிரச்சினையை வேறுவிதமாகச் சந்தித்தார்கள். அவனது உறுதி இந்தியர்களைத் திணறவைத்தது.

அரைத்தூக்கம் கலையாத அதிகாலைப் பொழுது, ஊரில் உள்ள நாய்கள் எல்லாம் குரைக்கத் தொடங்க, உடலில் உள்ள இரத்தம் எல்லாம் ஒன்றாகிச் சூடாகிப் பாயும்.

"டேய் தும்பன், வெற்றி, எழும்புங்கோடா!"
"ரங்கன்"
"அண்ணை நான் முழிப்புத்தான்"
"வெளிக்கிடுங்கோ...."

சிரிப்புத்தான் வரும். என்னத்தை வெளிக்கிடுவது? ஜீன்ஸ் போட்டபடி, கோல்சர் கட்டியபடி வெறு நிலத்தில் படுக்கை, தலைமாட்டில் ஆயுதம் வைக்கவென விரித்திருக்கும் சாரத்தை எடுத்துச் சுருட்டி இடுப்பில் கட்டினால் சரி.

"சரி வெளிக்கிட்டாச்சு"

நாய்கள் குரைக்கும் சத்தம் நகர-நகர, அது இராணுவத்தின் நகர்வை நிழலாய்க் காட்டும்.

முன்படலை பிசகென்று பின் வேலியால் பாய, காலில் நெருஞ்சி குத்தும், முந்தநாள் வாங்கிய செருப்பு நேற்றைய ரவுண்டப்பில் தவறிப்போனது நினைவுக்கு வரும்.

விரைவாய் சத்தமின்றி, சத்தமின்றி விரைவாய் அல்லது உள்ளே, ரவுண்டப்புக்கு உள்ளே.

ராஜன் அருகில் இருந்தால் அனைவருக்கும் நம்பிக்கை - எப்படியும் ரவுண்டப்பை உடைக்கலாம்.

"கட்டாயம் உடைக்கலாம், ஒருத்தரும் பயப்படாதேங்கோ"

"டேய் தும்பன் நீ முன்னுக்குப்போய் எத்தனை வாகனம் நிற்குதெண்டு பார். கண்டிட்டான் எண்டால் அடியாமல் வராத"

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## கழிகின்ற பொழுதுகள்
### களிப்பதற்காகவல்ல, விழிப்பதற்கே!

இற்றைக்கு 400 ஆண்டுகளுக்கு முன் இழந்துபோன எமது மண்ணை மீட்க, எமது தேசியத்தைக் காக்க போராடிக் கொண்டிருக்கிறோம். கழிந்து செல்கின்ற ஒவ்வொரு நிமிடமுமே இந்த மண் எம்மிடமிருந்து பெரிய வரலாற்றுக் கடமையை எதிர்பார்த்து நிற்கின்றது.

எமது ஒவ்வொரு செயற்பாடும் அர்த்தமுடையதாய், மண்ணின் விடிவை நோக்கியதாய் இருக்க வேண்டும். பாடசாலை படிப்பு மற்றும் இலக்கிய கலைப்படைப்புகள் சமூகத்தைப் பார்க்க வேண்டும். உற்பத்தி இத்தேசத்தைக் கட்டியெழுப்ப வேண்டும். அரிதாக கிடைக்கும் வாய்ப்புகள் அனைத்தையும் தேச நிர்மாணிப்பிற்கே பயன்படுத்த வேண்டும். காலத்தின் கடமைகளைப் புறக்கணித்து பொழுதை வீணே கழிப்பது தவிர்க்கப்பட வேண்டும். தேசம் எம்மிடம் வேண்டி நிற்கும் கடமையை நிறைவேற்றப் புறப்படுவோம்.

"ரங்கனும் வெற்றியும் அங் காலபோய் அடுத்த சந்தியைப் பாருங்கோ. டேய் ரங்கன் ஜி - 3 ரவுண்ஸ் தட்டுப்பாடு சும்மா அடிக் காதை"

தம்பி நீங்கள் என்ன கிறனைட்டோ வைத்திருக்கிறியள். பயப்படாதேங்கோ. என்னோடை நில்லுங்கோ. நான் சொல்லேக்கை கிறனைட் அடிக்க வேணும். "

"அம்மா! எல்லோரும் இதில குவிஞ்சு நிண்டால்தான் கட்டாயம் காணுவான். நீங்கள் பிள்ளைகளைக் கூட்டிக்கொண்டு உள்ளுக்குப் போங்கோ, இந்தாங்கோ கோப்பையையும் கொண்டு போங்கோ. "

கொஞ்ச நேரத்தின் பின் கேட்டு வெடிச் சத்தங்கள் ஓயும் போது, தேத்தண்ணீர் கொடுத்த அம்மா "ஆர் பெத்த பிள்ளையளோ முருகா காப்பாத்து" என வேண்டிக் கொண்டிருக்கும்போது,

இரண்டு றோட்டுக் கடந்து நின்று; வரும் ஆட்களிடம் சைக்கிள் கேட்டுக் கொண்டிருப்பார்கள் ராஜனும் அவனின் ஆட்களும்.

கிறனைட்டுடன் வந்த சின்னப்பொடியன் "ராஜண்ணை நான் உண்மையாய் பயந்திட்டன்; இனிப் பயப்படமாட்டன். நான் அடிச்ச கிறனைட்டில் ஆமி செத்திருப் பானோ?" என்று கேட்டுக் கொண்டிருப்பான்.

அவர்களின் அநேகமான நாட்கள் இப்படித்தான் விடியும்.

இன்னொரு காலைவேளை, படுத்திருந்த வீட்டு ஒழுங்கையால் தெருவுக்குவர முன்னால் இராணுவ அணி. மற்றவர்கள் காண முதல் ராஜன் கண்டுவிட்டான். "இண்டைக்குப் பொழுது சூடாத் தான் விடிஞ்சிருக்கு. நான் இதில வச்சுத் தொடங்கிறன், நீங்கள் இரண்டுபேரும் மற்றப்பக்கத்தாலை வாருங்கோ. " இராணுவம் நிற்கும் செய்தியை அலாதியாய்ச் சொல்வதுடன், அந்தக்கணத்திலேயே திட்டமும், தாக்குதலும், எத்தகு சூழ்நிலைகள் மத்தியிலும் ஆபத்தை எதிர்கொள்ளக் கொஞ்சமும் தயங்காத செயலுறுதி-பல கட்டங்களில் ராஜன் சாவின் விளிம்பில் ஏறி நடந்து வந்துள்ளான்.

எமது மண்ணில் அந்நியன் சுதந்திரமாய்த் திரிவதா? நிம்மதியாய் வாழ்வதா? என்று குமுறுவான். அவன் அடிக்கடி கூறும் வார்த்தைகள் "மச்சான் உவங்களை இப்படியே விடக்கூடாது. இண்டைக்கு ரெண்டு ஆமியையெண்டாலும் கொல்ல வேணும். "

ஒருநாள் பண்டத்தரிப்பு முகாம். "என்ன வெடிச்சத்தம்?" என இந்தியர்கள் சனத்தை விசாரித்துக்கொண்டிருக்கையில் ராஜனும், தும்பனும் தங்கள் பிஸ்டலை இடுப்பில் வைத்த பின்னர், இறந்த இராணுவத்தின் துப்பாக்கிகளை ஆளுக்கொன்றாய் எடுத்தபடி சைக்கிளில்....

சுழிபுரம் சந்தி முகாம் அருகே, இந்திய இராணுவம் ஜீப்புடன் செத்தபடி கிடக்க....

எம் போராளி காசிமை இழந்த பின்னர், நடு நெஞ்சில் துப்பாக்கி துளைத்த ராஜனைத் தூக்கிக்கொண்டு வந்தனர், தும்பனுடன் நகுலனும், நித்தியும்.

இந்திய அடிவருடிகள் முகாமிட்டிருந்த சுன்னாகம். இரு புறமும் இராணுவக் காவல். அதனுள்ளே கும்மாளமிட்டனர் எம் மினத்தின் அவமானச் சின்னங்கள். திட்டமிட்ட பெரிய தாக்குதல். அதிக ஆட்கள். முதல்நாள் ரோட்டு கடக்க முடியாமல் ஒத்திவைத்த தாக்குதல். அடுத்த நாள் முயற்சி செய்தபோது,

இரவு ரோந்து இராணுவத்தை எதிர்கொள்ள, எல்லாமே பாழ்.

ராஜனை இருட்டுக்குள்ளால் இழுத்து வந்து குப்பியைக் கழட்ட, வந்தது நூல் மட்டுமே.

"மச்சான் சுபாஸ் பிறண்அடி கொழுவியிட்டுது. எனக்குப் பெரிய காயம்.... இந்தமுறை சரிவராது.... எல்லோரும் சாகாமல் இவர்கள் இரண்டு பேரையும் கொண்டு போங்கோ. "

சொன்னவன் பின்னர் கரைச்சல் தராமல் மயங்கிப் போனான்.

"ஐயோ ராஜண்ணை.. " என்று, சூட்டும். ரங்கனுமாய் வாய்க்குள் விரலைவிட்டுத் தோண்டி,

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தேங்காய் எண்ணெய் பருக்கி, தேங்காய் உடைத்து பால் பிழிந்து பருக்கி,

காரில் வைத்து ஸ்ராட் இல்லை என்று,

கத்தி தேடி, வேலிவெட்டி, பாதை செய்து,

தள்ளு தள்ளு என்று, தள்ளிக்கொண்டு போய்,

உள் ஒழுங்கை வீட்டில் வைத்து, நீர்வேலிச் சனத்தைக் காவலுக்கு விட்டு,

அந்தநாள் விட்டு அடுத்த நாள் வாதரவத்தைக்குப் போய்ச் சேர, ராஜனும், முரளியும் மயக்கம் தெளிய, லோலோ மயங்கிப் போய், பின்னர் போய்விட்டான்..... எம்மைவிட்டுப் போயே விட்டான்.

அவனது தோழர்களது இழப்புக்கள் ஒவ்வொன்றின் போதும், அவன் அமைதியாய் குமுறுவான். கண்கள் வெறிக்க அவன் பாறையாய் இறுகுவான்.

ராஜனது இளமைக்கால நண்பன் தெய்வா, பாடசாலைக் காலத்திலிருந்து ஒன்றாய் கடலுக்குத் தொழிலுக்குப் போய்வந்து... படித்துப் பந்து விளையாடி..., இயக்கத்திற்கு வந்து...., ஒரே படகில் இந்தியா போய்..., கழுதை கலைத்து..., பணிஸ் மன்ற் வாங்கி..., பயிற்சி முடித்து..., கரைக்கு வந்து...., எல்லாம் வரை ஒன்றாய் இருந்த தெய்வா பிரிந்து விட்டான். கடலில் ஓட்டியாய் போனவன் வரவில்லை, அவன் வரவில்லை என்று மாதகல் அழுதது; ராஜன் அழவில்லை, அந்தப் பாறை இறுகியது.

ராஜனும், தும்பனும் பிரிந்தது கிடையாது. ராஜன் என்றால் தும்பன்; தும்பன் என்றால் ராஜன்.

துப்பாக்கிகள் பங்கிடும் போது "தும்பனுக்கு கையேலாது எம் - 16 தான் வேணுமம்மான்" - ராஜன் சொல்ல சூடுபட்டு உடைந்து வளைந்த கையை தும்பன் மேலும் வளைத்து வந்து வாங்கிவிட்டு மறைவாய்ப் போய் பெரிதாய்ச் சிரித்தார்கள்.

ஒன்றாய்ச் சாப்பிட்டு, அடிபட்டு, கலைபட்டு ராஜனின் உயிருடன் இணைந்த நட்பு.

சுன்னாகத்தில் காலில் இரண்டு வெடிபட்டு - காயம் மாறி இந்தியாவில் இருந்து வந்தபோது, தும்பன் இல்லை! என்ற செய்தி அவனுக்கு தெரிந்துதான் இருந்தது.

இராணுவத்தின் சூடுதானா? விபத்தா? என எல்லோரையும் ஓடிஓடிக் கேட்டு ஓய்ந்திருந்த வேளையில், தும்பன் இல்லாத ஏழாலைக் கிணற்றுக்கட்டு, வாழைத்தோட்டங்கள், பனங் கூடல்கள், கலைபட்டுப் பாய்ந்த வேலிகள், துரையண்ணை வீட்டு ஊஞ்சல் என்று எல்லாமே வெறுமையாய்த் தெரிய ரங்கன் அழுவான்; ராஜன் அழமாட்டான் - அந்தப்பாறை இறுகியது.

ரங்கன் சைக்கிள் உழக்க 'பாரில்' ராஜன். சுட்டுவிரல் விசைவில்லையொட்டியபடி, கொஞ்சம் அழுத்தினால் ரவை பாயும். எங்கும் போகும் சைக்கிள்; சடசட என்று வெடி கேட்கும், சைக்கிள் ஒன்றுடன் கொஞ்சம் ரவையும் செலவாகும்.

"தப்பியது ரங்கனால்" என்பான் ராஜன்; "ராஜண்ணை இல்லை என்றால் நான் இல்லை" என்பான் ரங்கன்.

மாவிட்டபுரத்தில் வைத்து வரிசையாய் வந்த மொட்டை ஜீப்புக்கு அடிக்க, நல்லாய் நடந்த சண்டை நெடுமாறன் இறந்து ரங்கன் காயப்பட, திசைமாறியது.

திருச்சியில், "ராஜண்ணை.. ராஜண்ணை" என்று ரங்கன் உரத்துக் கூவி, மெல்ல முனகி அழுது துடித்து, மௌனித்த போதும், யாழ்ப்பாணத்தில் நின்ற ராஜன் அழவில்லை - பாறை இறுகியது.

மாதகலில் தன்னுடன் நின்ற ஏழு பேரை வைத்து பெரும் கூட்டமாய் வந்த இந்தியக் கைக் கூலிகளை அடித்துக் கொன்று,

## வீரப் புதல்வி பிரீதி

இத்தகைய மாது சிரோன்மணியை இழந்த தந்தை சித்தம் கலங்கினார். மெய்மறந்தார். வீரத்தாய் மட்டிலும் மகளின் இணையற்ற தியாகத்தினால் பெருமிதம் கொண்டாள். "என்மகள் தேசத்திற்காக தன் உயிரை அர்ப்பணம் செய்தாள்." என்று கூறி பெருமையடைந்தாள். பிரீதி உயிர் துறந்த பின் அக் குடும்பத்தினர் அளவிலா அவதிப் பட்டனர். தாயார் மருத்துவத் தொழிலை மேற்கொண்டு கஸ்டத்தை ஒருவாறு சமாளித்து வந்தாள்

பிரீதியோ அல்லது அவளுடைய வீரத் தியாகத்தையோ சிட்டகாங் மக்கள் ஒரு போதும் மறந்ததில்லை." தேசத்திற்காக உயிர்த்தியாகம் செய்த முதலாவது பெண் மணியின் தந்தை" என்பதாக அங்கு போகின்றவர்களிடத்தில் அவரை அறிமுகப்படுத்துவதின் மூலம் தந்தையைப் பெருமைப் படுத்துகிறார்கள் சிட்டகாங் மக்கள்

சிட்டாகங் வீரர்கள், நூலில் கல்பனாத்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கலைத்து, பெரும் தொகையாய் ஆயுதம் அள்ளி வந்த போது,

எல்லா நாளும் ராஜனுடன் திரிந்த வெற்றி திரும்பி வர வில்லை.

ஆயுதங்கள் எல்லாம் அப் படியே குவிந்து கிடக்க, காயப் பட்ட தம்பியையும், வெற்றியின் உடலையும் குப்பிளானில் நின்ற கிளியிடம் அனுப்பிவிட்டு, ஆயுதங் களுக்குக் காவலாய் நின்ற போதும் ராஜன் அழவில்லை. அந் தப் பாறைதான் இறுகியது.

இந்தியா போனது. தமிழீழ வீடெங்கும் மகிழ்ச்சிக் குரல்கள்; தெருவெங்கும் புலிவீரர். மிச்சமாய் இருந்தன இந்திய எச்சங்கள். புலனாய்வுப் பணியில் ராஜன்.

அவனது மனம் விடுதலைப் போரையும் அதனுடன் இணைந் தவற்றையும்தவிர வேறொன்றைப் பற்றியும் எண்ணியதே கிடையாது.

இப்படித்தான் ஒருநாள், அவனுடன் பாடசாலையில் படித் தவள், அவனது இயக்கத் தொடர் பிலும் மீண்டும் அறிமுகமாகிப் பழகி கடிதமொன்றில் என்னவோ எழுதி அவனிடம் அனுப்பிவிட்டுக் காத்திருந்தாள்; பாவம்.

கடிதத்தைப் பார்த்தவன் பக்கத்தில் நின்றவனுடன் நேரே போய்க் கடிதத்தைக் கிழித்துக் கொடுத்துவிட்டு "போராட்டம் தவிர வேறொன்றும் நான் நினை யேன்" என்றான்.

தன் ஆசை மகன் போகும் வாகனத்தையென்றாலும் பார்ப் போமென்று தாய்க் கிழவி றோட் டில் கால்கடுக்கக் காத்த நிற்க, இவன் மாதகலில் தான் போன வேலையை முடித்துத் திரும்பி வருவான்.

சிறீலங்காவுடன் சண்டை தொடங்கியது. ராஜன் ஓய்வின்றிச் சுழன்றான். அடிக்கடி அண் ணையைச் சந்தித்தான். எல்லா இடமும் திரிந்தான். ஒவ்வொரு பங்கருக்கும் ஒவ்வொரு மண்மூ டைக்கும் இடம் சொன்னான்.

மயிலிட்டியில் பெரும் சமர், ராஜன் ஊண் உறக்கமின்றி நின்று வழிநடத்தினான். மழையாய்ப் பொழியும் செல்கள் - ரவைகள். மயிலிட்டிச் சண்டையில் மட்டும் இரண்டு தடவைகள் குண்டுச் சிதல்கள் அவனைத் துளைத்துச் சென்றன. ஓய்வில்லை - அங்கு நடந்துகொண்டிருந்த யுத்தத்தில் இருந்து அவனால் ஒதுங்கியிருக்க முடியவில்லை.

கோட்டை முற்றுகை இறுக இறுக, எங்கள் தளபதிகளின் தூக் கமற்ற இரவுகள் பெருகிக் கொண் டிருந்தன. மணியந் தோட்டத்தில் இருந்து பொன்னாலை வரை நின்ற இளம் போராளிகள் ராஜ னைக் கண்டு சிரிப்பர். இர வில்லை, பகலில்லை, ஓய் வில்லை, உணவில்லை தன்னைப் பிழிந்து முற்றுகைக்கு உரம் கொடுத்தான். பானுவின் உற்ற துணையாய் முற்றுகைக்குத் துணையாய் நின்றான்.

எம்மால் உள்ளிறங்க முடி யாது போய்விட்ட இரண்டாவது கோட்டை உட்புகல் நடவடிக்கை முடிந்து விடிந்தபோது,

"றோமியோ நவம்பர், றோமியோ நவம்பர்" என்ற பானு வின் வோக்கி கூப்பிட்ட போதும், பதிலில்லை.

மானிப்பாய் மருத்துவமனை யில் பேச்சு மூச்சின்றி கிளி, ஜவான் ஆகியோருக்கு இடையில் கந்தல் துணிபோல் சுருண்டு கிடந் தான்.

காயம் மாறி கொஞ்சம் தேறி எழும்பி வந்தவன், இப்போ சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படைய ணியில்.

இந்தக்காலம் ராஜனை ஒரு சிறந்த நிர்வாகியாக உருவாக்கி யது. பால்ராஜின் துணைவனாய் நின்று, படைப்பிரிவை உருவாக் குவதில் பெரும் பங்காற்றினான். சகல போராளிகளுடனும் அன்பு டனும் - கண்டிப்புடனும் கடுமை யான பயிற்சிக் காலம்.


தமிழீழத்தின் எல்லா இடங் களில் இருந்தும் வந்திருந்த போராளிகள் .

குடும்பத்தைப் பிரிந்து வந் தவர்குத் தாயாக, தந்தையாக, நண்பனாக, ஆசானாக.

தமிழேந்தி அண்ணையிடம் நின்று, நின்று தூங்கி, சண்டை பிடித்துக் காசு வாங்கி, இல்லை யென்றால் ஊரில் கடன் வாங்கி, அதுவும் முடியாவிட்டால் வீட்டுக் போய் அதை - இதைத்தூக்கி, தமையன் வியாபாரத்துக்கு வைத் திருக்கும் சாமான்களை அள்ளி வாகனத்தில் ஏற்றி....

எப்படியோ போராளிகளை தனது பிள்ளைகளாய் - உயிராய்ப் பார்த்தான்; பராமரித்தான்.

வன்னி யுத்தக்களம். எங் கள் வன்னிக் காடுகளை - எதிரி யின் பல்லாயிரம் படைகள் - ஊட றுத்துவர முற்பட்ட 'வன்னிவிக்கி ரம'; பெரும் படைகொண்டு ராஜன் மோத எதிரிப்படை திணறியது. சுட்டு வீழ்த்திய கெலிகொப்டர் துண்டுகளை அள்ளி எடுத்து அனுப்பிய பின்னரும், தொடர்ந்து சண்டை.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

எல்லாப் பக்கங்களாலும் பூவரசங்குளம் சந்திக்கு வந்து ஏறிய எதிரிகளை எதிர்கொண்டனர் எம் வீரர்கள். கடும் சண்டை. ஆகாயத்தை நோக்கி நின்றவைகளும் நிலம் நோக்க, சகல ஆயுதங்களையும் ஏந்திய கரங்கள் உறுதியாய் நிற்க, ஓடினான் எதிரி.

கொஞ்சநாள் இடைவெளியில் எதிரியின் இன்னொரு முயற்சி. வவுனியாவால் நகர்ந்து தோற்ற எதிரி, இம்முறை மன்னார்ப் பக்கமாய்....

இம்முறை சண்டை கொஞ்சம் கடுமையாய்... எமது வீரர்களை இருபுறமும் சூழ்ந்தபடி எதிரி. ராஜனை உணர்ச்சி வசப்படவைக்கும் கடும் சண்டை.

எதைப்பற்றியும் யோசிக்காது எதிரியின் முகம் தெரியும் தூரத்தில் நின்று - மோதிய, ராஜனின் விரல் இல்லாத உள்ளங்கையை உடைத்தபடி ஒரு ரவை; இன்னொரு ரவை அதே கையில் நடுவில்.

மிக அருகில் எதிரியின் துப்பாக்கி சட சடக்க உறுதியாய் எதிர்த்து நின்றனர் தோழர்கள்.

உள்ள ஆயுதங்கள் எல்லாம் கொண்டுபோய், அடி அடியென்று அடித்து ஆமியைக் கலைத்துவிட்டு மயங்கியபடி கிடந்தவனை, இழுத்து வந்து சேர்த்தான் ரூபராஜ்.

அன்று ராஜன் திரும்பி வந்தது நம்பமுடியாத அதிசயம். அவன் மயங்கி வீழ்ந்து கிடந்த பொழுது, எதிரிக்கு அருகில், மிக அருகிலேயே நின்றிருந்தான்.

ஆனையிறவுப் பெரும் போர்க்களம். ஓய்வின்றி பம்பரமாய் ராஜன்.

சென்றி நிற்கும் பங்கருக்குள், பசீலன் பொயின்ரில், சமையல் கொட்டிலில், சந்தியில் இருந்த மெடிக்ஸ் வீட்டில், எங்கும் நின்றான் - எல்லா நேரமும் நின்றான்.

கட்டைக்காட்டில் ஆமியின் கவசவாகனம் நகர்ந்தாலும் ஆர். - பி. ஜி. க்கு றோமியோ நவம்பர்-

புல்லாவெளியில் ஆட்டிலறி செல் விழுந்து இரண்டு பேர் செத்து ஐந்து பேர் காயம் என்றால், மெடிக்ஸ் வானுக்கு றோமியோ நவம்பர்-

மெடிக்ஸ் வானைப் போக விடாமல் மேலே கெலி நின்றால் கலிபர் அனுப்பமும் றோமியோ நவம்பர்-

குணாவின் குறூப்புக்கு அனுப்பிய சாக்குகளுக்கு சாக்கு ஊசி வேண்டும் என்றால், றோமியோ நவம்பர்-

வீரர் வீழ்ந்து - வியூகம் உடைந்து - எதிரிப்படை முன்னேறும் வேளையில், தனித்த வீரரை ஒன்றாய்ச் சேர்த்து எதிரியைத் தடுக்கு வேலைக்கும், றோமியோ நவம்பர்-

எல்லாவற்றிக்கும் நின்றான். எல்லாப் பாத்திரத்தையும் தானாய்ச் சுமந்தான்.

எப்படிப் பட்டவனை நாம் இழந்து விட்டோம். மறைந்த போது - அனுபவம் மிக்க போர்த் தளபதியாய் ராஜன் நின்றபோதும் - அவன் யுத்த களத்தில் இருந்து தள்ளியே வைக்கப்பட்டிருந்தான். எங்கள் தலைவனின் பெருங்கனவுகளின் உறைவிடமாக ராஜன் இருந்தான். யாழ்ப்பாணச் சண்டையில் ஈடுபட்டிருந்த குழுக்களுக்கு உணவு விநியோகம் செய்யும் வேலையை அவனிடம் வலிந்து கொடுத்திருந்ததன் காரணம் - அவனை யுத்தக்களத்தின் முன் முனையிலிருந்து எட்ட நிற்கவைப்பதற்கன்றி வேறில்லை.

அனுபவம் மிக்க வீரன்.

அவனது அனுபவங்கள் மெய்சிலிர்க்க வைக்கும் கதைகள்.

ஓய்வில்லாக் கடும் உழைப்பாளி.

அவன் மறையும் போது தலைவரின் பெருங்கனவில் உருவான அதிகாரிகள் பயிற்சிக் கல்லூரிப் பொறுப்பாளன். சிறந்த போர் அனுபவங்களை முன்னரே பெற்றிருந்த அவன், இங்கு எல்லா இடமும் இருந்து பொறுக்கி எடுத்த வீரர்களைப் பயிற்றுவித்தான். தன் அனுபவங்களைப் பிழிந்தெடுத்துக் கொடுத்தான். போர்க்கலை நுட்பங்களைக் கற்றான்; கற்பித்தான். நேர்த்தியான வேலைத்திட்ட ஒழுங்கமைப்பை, கண்டிப்பை, அன்பை, கடும்பயிற்சியை-

வியூகங்கள், விநியோகங்கள், வரைபடம்... என்று எல்

**உலகமே வியக்கும் தலைவனைப் பெற்றோம்**
**உயிரினை கொடுக்கும் வீரரைப் பெற்றோம்**
**கலக்கமா உனக்கு? இனி எதற்கு? - வா**
**களத்தினில் ஆடுவோம் எடு துவக்கு.**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

லாவற்றையும் கற்றான், கற்பித்தான்.

ராஜன் அமைதியானவன். தன் செயல்களினால் மட்டும் தன்னை அடையாளம் காட்டியவன் - ஆம், செயல்களினால் மட்டும்.

எந்த வேலையாக இருந்தாலும் ராஜன் அதிகம் பேசுபவனல்ல. ஏதாவது ராணுவத் திட்டம் தீட்டப்படும் சந்தர்ப்பத்தில், பேசாது பார்த்தபடி - கேட்டபடி இருக்கும் ராஜன், திட்டம் தீட்டப்படுவது பூர்த்தியாவதற்கு முன்னுள்ள இடைவெளியில் பேசுவான். குறிப்பிட்ட திட்டம் செயல்வடிவம் பெறும் போது, அவனது யுக்தியின் பெறுமதி தெரியும்.

தனது கடமையை பூரணமாகச் செய்வதில் தன்னை வெளிப்படுத்துவான். எந்தச் சந்தர்ப்பத்திலும் மற்றைய ஒருவரைக் குறைசொல்வது காண்பது அரிது. ‘கடைமையைச் செய்; பயனை எதிர் பாராதே’ என்பதற்கு - உதாரணமான கர்ம வீரனாக விளங்கினான்.

அவனது வரலாறு முழுமையாக எழுதப்பட்டால், அது பெரும் காவியமாகும். இராணுவ வல்லுனர்களால் மட்டுமல்ல, மருத்துவ வல்லுனர்களாலும் நம்பமுடியாத அதிசமாய் அவன் வரலாறு திகழும்.

எண்ணற்ற தாக்குதல்கள்; எண்ணற்ற தோழர்கள்; எண்ணி முடியாதவை, எழுத்தில் அடங்காதவை. அவற்றின் கதை சொல்ல சில தோழர்களும் - பல ஆயுதங்களும், இன்னும் விடுதலைப் போரில்.....

அது மட்டுமல்ல, எங்கள் மக்களும், தமிழீழ மண்ணும், மரம் செடிகொடிகளும் அவனைச் சொல்லும். அந்த உறுதியின் உறைவிடம் உலாவிய பூமி எங்களது என்பதைத், தமிழீழம் தலைநிமிர்ந்து சொல்லும்.

பொட்டு.



இந்தப் புகைப்படத்தைப் பார்க்கும் உங்கள் உள்ளங்களில் உரசும் உணர்வுகளை எவ் இலக்கியவடிவிலாயினும் எமக்கு ஒரு பக்கத்திற்கு மேற்படாமல் எழுதி அனுப்பி வையுங்கள். சிறந்தன பிரசுரிக்கப்படும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




கவிஞரான எவ். ரீ. மறிநெற்றி என்பவர் 1909 ஆம் ஆண்டு மரபை மீறிய தற்குறிப்பேற்றக் கலைக்குரிய அறிக்கையை பாரீஸ் நகர புதினப் பத்திரிகையொன்றின் முதற் பக்கத்தில் வெளியிட்டதைத் தொடர்ந்து புதியதொரு ஓவிய கலைப்பாணிக்கு வித்திட்டார். மரபை மீறிய தற்குறிப்பேற்றக் கலை என்ற பதம் உலகின் எல்லாக் கலைஞர்களையும் கவர்ந்தது. இத்தாலியில் ஒன்றுகூடிய ஆர்வமுடைய கலைஞர்கள் ஓவியத்தில் இதனை எவ்வாறு செயற்படுத்தலாம் என ஆராய்ந்தனர். இறுதியில் 1910 ல் ஓவியர்களுக்கான மரபை மீறிய தற்குறிப்பேற்ற அறிக்கை தயாரிக்கப்பட்டு வெளியிடப்பட்டது.

மரபைமீறிய தற்குறிப்பேற்ற கலை அறிக்கையை அடியொற்றி கார்லோகாரா, உமேட்டோ போசியோனி, லூசிரூஸ்லோ என்ற மூவரும் புதிய ஓவிய மரபினைத் தொடக்கி வைத்தனர். இம்மூவரினதும் ஓவியப் படைப்புக்கள் இக்காலத்தில் புரட்சிகர மாற்றத்தைச் சுட்டி நின்றன.

ஓவியத்தில் கியூபிசத்தின் பக்கவிளைவே மரபைமீறிய தற்குறிப்பேற்றக் கலை என்றதொரு தவறான அபிப்பிராயம் நீண்டகாலமாக கலை விமர்சகர்களிடத்தே காணப்பட்டது. கியூபிசத்தின் அடிப்படை இலட்சியத்திலிருந்து வேறுபட்டதொரு கருத்தை முன்வைத்தவர்களாகவே மரபை மீறிய தற்குறிப்பேற்றக் கலைஞர்கள் காணப்படுகின்றனர். ஒரு வகையில் வெளிப்பாட்டுவாத ஓவியக் கருத்துக்களின் சாயல் இவர்களிடம் உண்டெனலாம். மரபைமீறிய தற்குறிப்பேற்ற ஓவியர்களான கார்லோகாரா, போசியோனி போன்றோர் தொடக்கத்தில் கியூபிசத்துடன் பரிச்சயமுடையவர்களாக இருந்தமையும், கியூபிசபாணி ஓவியங்களை தீட்டியமையுமே மேற்படி தவறான அபிப்பிராயம் தோன்றக் காரணமாயிற்று எனலாம். கார்லோகாரா தனது பாணி, கியூபிசத்திலிருந்து முற்றிலும் வேறுபட்டதென பிற்காலக் கட்டுரையொன்றில் குறிப்பிட்டமையை இதற்கு உதாரணமாகச் சுட்டலாம்.

மரபைமீறிய தற்குறிப்பேற்ற ஓவியர்களின் பெரியளவிலான கண்காட்சி 1911 ஏப்பிரலில் மிலானில் நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து காலத்திற்குக் காலம் ஐரோப்பாவின் பிரதான மையங்கள் எல்லாவற்றிலும் கண்காட்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டதுடன் அக்கால ஐரோப்பியக் கலைஞர்கள் பலரினதும் கவனத்தைத் தன்பால் ஈர்த்தனர்.

1912 ல் மறிநெட்டி "கட்டற்ற சொற்கள்" என்ற கவிதைக் கொள்கையை வெளியிட்டார். இதிலிருந்து தற்குறிப்பேற்ற ஓவியர்கள் தமது ஓவியங்களில் சொற்களையும் பயன்படுத்தினர். ஓவிய வெளிப்பாட்டிற்கு மேலதிக நுகர்வோரிடம் அழுத்தத்தைத் தருவதற்காக இச்சொற்கள் ஓவியத்தில் இடம்பெற்றன. இதே காலப்பகுதியில் இசை, புகைப்படம் என்பவற்றிலும் மரபைமீறிய தற்குறிப்பேற்ற முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு அறிக்கைகள் வெளியிடப்பெற்றன. 1916 ல் திரைப்படத்திற்கான மரபைமீறிய தற்குறிப்பேற்ற அறிக்கையொன்று தயாரிக்கப்பட்டு, அதனடிப்படையில் "Perfido qucanto" என்ற திரைப்படமும் தயாரிக்கப்பட்டது.

தற்குறிப்பேற்றவாதிகள் தமது கலைக்கொள்கை, இயக்கவியற் தன்மையுடையதென்றும், அதன் உள்ளுணர்வை முதன்மைப்படுத்தி புலன் அனுபவத்திலிருந்து பெறப்படுவதை அழுத்தமாகத் தருவதாகும் எனக் கூறினர்.

மறிநெட்டியின் மரபைமீறிய தற்குறிப்பேற்ற அறிக்கையில் (1908) காணப்படும் பின்வரும் வசனங்கள் மேற்படி கலைக்கொள்கையை நன்கு விளக்குகிறதெனலாம்.

1. பகுத்தறிவிலிருந்து விடுவித்துக்கொள்க.
2. அபாயத்தை விரும்பி வரவேற்போம்.
3. துணிவு, துடுக்கு, புரட்சி என்பனவே கவிதையின் அடிப்படைகள்.
4. வேகம் என்ற புதிய அழகினால் உலகு வளம் பெற்றுள்ளது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

5. போராட்டத்தைத் தவிர அழகென எதுவுமில்லை.
6. போரைப் போற்றுவோம்.
7. ஒழுக்கம், பெண்மைத்தனம், கோழைத்தனம் என்பனவற்றிற்கு எதிராகப் போராடுவோம். காட்சியங்களை அழிப்போம். அரும்பொருட் காட்சிச் சாலைகள் சவக் காலைகளாகும்.

1916 ஏப்பிரலில் வெளிவந்த பிறிதொரு அறிக்கையில் மறிநெட்டியின் கவிதைக்கொள்கையை ஓவியத்திற்கும் உரியதாக்கும் வகையில் பின்வரும் கருத்துக்கள் காணப்படுகின்றன.

1. உண்மையைத் தேடும் ஆர்வமுடையவர்களான எமக்கு ஓவிய வடிவம், வர்ணங்கள் பற்றிய எமது காலத்தவர்களின் கருத்துக்கள் திருப்தியளிப்பனவல்ல.
2. உலகமும், அதிலுள்ள எல்லாப் பொருட்களும் விரைவாக இயங்கி மாறிக்கொண்டிருப்பதால் ஓவியமும் மாறுகின்ற இயக்கத்தைப் பற்றியதாயிருத்தல் வேண்டும்.
3. ஓடும் குதிரைக்கு நான்கு கால்கள் இருப்பதில்லை. மாறாக அதற்கு இருபது கால்கள் உண்டு.
4. ஓவியத்தில் நேற்று உண்மை என உணரப்பட்டது இன்று பொய்யாய்விடுகிறது. எனவே பூரண உண்மை என ஒன்றில்லை.
5. நுகர்வோரே ஓவியத்தின் மையம். வெளியென ஒன்றில்லை. எக்ஸ்ரே போல் ஓவியங்கள் ஊடுருவிக் காட்டுதல் வேண்டும்.

மரபை மீறிய தற்குறிப்பேற்றக் கலை ஓவியத்தின் புதிய அழகை உணரவேண்டின் நுகர்வோரின் ஆன்மா தூயதாயிருத்தல் வேண்டும். அவனது கண்கள் பழக்கமான பார்வையிலிருந்து விடுபட்டிருத்தல் வேண்டும். இயற்கையை நோக்குதல் வேண்டும். இதுவே ஓவிய ரசனைக்குரிய இன்றியமையாத நிபந்தனைகளாகும் எனக் கூறுகின்ற இவர்கள் ஓவியப்பாணி வேறுபாடுகள் தம்மிடையே முரண்பட்டவை அல்ல; மாறாக பதிலீடுகளேயாகும் எனக் கூறுகின்றனர்.

ஓவியத்தில் பார்த்து வரைதலை நிராகரித்த மரபை மீறிய தற்குறிப்பேற்றக் கலைவாதிகளைக் கலை விமர்சகர்கள் கலையாக்கத்திற்கு தீங்கு விளைவிப்பவர்கள் என்கிறார்கள். இவர்கள் ஆக்க அசைவு, நற்சுவை போன்ற பதங்களைப் பயன்படுத்தி சர்வாதிகார முறையில் கலை விமர்சனம் செய்கிறார்கள். எனவே கலைஞர்கள் விமர்சகர்களுக்கெதிராகப் புரட்சி செய்தல் வேண்டும் என வற்புறுத்துகின்றனர். கவிதை சுயாதீனமாக இருப்பது போல, இசையில் பல்லியம் அனுமதிக்கப்படுவது போல ஓவியத்தில் பல வழிமுறைகளையும் அனுமதித்தல் வேண்டும்.

பிரபஞ்ச இயக்கம் புலவையுணர்வு இயக்கமாக ஓவியத்தில் சித்தரிக்கப்படல் வேண்டும் எனக் கூறும் தற்குறிப்பேற்ற வாதிகள் ஓவிய மரபில் நூட் என்ற நிர்வாண வரைதலை நிராகரிக்கிறார்கள். நூட்டை நிராகரிப்பதற்கு இவர்கள் கூறும் நியாயம் அது ஒழுக்கத்திற்கு எதிரானது என்பதல்ல. மாறாக நூட்டில் ஒரே தன்மையே மீண்டும் மீண்டும் வருகிறது. எனவே ஒரு பத்தாண்டு காலத்திற்காயினும் நூட் வரைதல் தடைசெய்யப்படவேண்டும் என்கிறார்கள்.

1922 ல் நடைபெற்ற கண்காட்சியின் பொழுது பார்வையாளர்களிற்கு தற்குறிப்பேற்றவாதிகளினால் விநியோகிக்கப்பட்ட துண்டுப் பிரசுரத்தில் பின்வரும் கருத்துக்கள் காணப்படுகின்றன. பிக்காஸோ, டோறன், லியோன், பிறாக்கோ போன்ற நவீன ஓவியர்களின் மேதமையை நாம் மதிக்கின்ற பொழுதும் அவர்களின் கலைக்கொள்கைக்கு நாம் எதிரானவர்கள். இயக்கமில்லாத உறைநிலையையே இவர்களது ஓவியங்கள் காட்சிப்படுத்துகிறன.

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகத்தால் மேற்கொள்ளப்பட்ட மரம் நடுகை வாரத்தில் பல பகுதிகளிலும் மக்கள் ஆர்வத்துடன் கலந்து கொண்டனர். பொது இடங்களிலும். வீதிகளிலும் பெருமளவிலான மரக்கன்றுகள் நடப்பட்டதுடன் அவற்றிற்கான பாதுகாப்புக் கூடுகளும் அமைக்கப் பட்டுள்ளன. மண்ணின் வளங்கள் பாதுகாக்கப்படுதலும், சூழல் மாசடைவதைத் தடுக்கவும் தமிழீழமெங்கும் மரநடுகை மேலும் பரவலாக்கப் பட்டு வருகின்றது.

மரங்களை பாதுகாத்தல், நடுதல் என்பவற்றின் அவசியம், பங்கு குறித்து பொது ஸ்தாபனங்கள், சமூக அமைப்புகள், மக்கள் மத்தியில் விளக்கப்படுவதுடன் அவற்றிற்கான சிந்தனையைத் தூண்டும் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன.

ஆனால் நாமோ எதிர்காலத்திற்காக இயக்க நிலையையே எமது பாணியாகப் பின்பற்றுகின்றோம். பண்டைய கலை மேதைகளின் ஓவியப் பாணியிலிருந்து மாறுபட்டு புதிய விதிகளைப் பின்பற்றும் எமது மரபு முற்றிலும் புதியதொரு பாணியாகும். இது ஆக்க அமைவிற்கு எதிரானது.

போசியோனி 1916 ல் இறந்ததன் பின்னர் ஒழுங்கமைக்கப்பட்ட குழுவாக மரபை மீறிய தற்குறிப்பேற்றவாதிகளால் இயங்க முடியவில்லை. முதலாம் உலக மகா யுத்தத்துடன் இவ்வியக்கம் செயலிழந்து போய்விட்டதெனினும், கலையை உள்ளடக்கிய பண்பாடு பற்றிய கருத்தாக்கத்தில் மாற்றம், வளர்ச்சி என்ற எண்ணக் கருக்களிற்கு ஆக்கபூர்வமான விளக்கம் கொடுத்தவர்கள் என்ற வகையில் மரபை மீறிய தற்குறிப்பேற்றக் கலையின் தோற்றம் எமது கவனத்திற்குரியது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## இதயக் கோயிலில் பூசிக்கப்பட வேண்டியவர்கள்.

எமது வீர விடுதலை வரலாறு இந்த மாவீரர்களின் இரத்தத்தால் எழுதப்பட்டிருக்கின்றது. இவர்களது இறப்புக்கள் அர்த்தமற்ற இழப்புக்கள் அல்ல. இந்த வீரர்களின் சாவுகள் சரித்திரத்தையே இயக்கும் உந்து சக்தியாக, எமது போரட்டத்தின் உயிர் மூச்சாக, எமது போரளிகளின் உறுதிக்கு ஊக்கு சக்தியாக அமைந்து விட்டன. இந்த மாவீரர்கள் காலத்தால் சாகாதவர்கள். சுதந்திரச் சிற்பிகள். எமது மண்ணிலே ஒரு மாபெரும் விடுதலை எழுச்சிக்கு வித்திட்டுச் சென்ற வீரமறவர்கள். எமது இனத்தின் சுதந்திரத்திற்காக, கௌரவத்திற்காக பாதுகாப்பிற்காக தமது இன்னுயிரை ஈந்துள்ள இந்த மகத்தான தற்கொடையாளர்கள் காலம் காலமாக எமது இதயக் கோயிலில் பூசிக்கப்பட வேண்டியவர்கள்.

ஒரு விடுதலை வீரன் சாதாரண வாழ்க்கையை வாழும் ஒரு சாதாரண மனிதப்பிறவியல்ல. அவன் ஒரு இலட்சியவாதி. ஓர் உயரிய இலட்சியத்துக்காக வாழ்பவன். தனக்காக வாழாமல் மற்றவர்களுக்காக வாழ்பவன். மற்றவர்களின் விடிவிற்காக, விமோசனத்திற்காக வாழ்பவன். சுயநலமற்ற, பற்றற்ற அவனது வாழ்க்கை உன்னதமானது. அர்த்தமுள்ளது. சுதந்திரம் என்ற உன்னத இலட்சியத்திற்காக அவன் தனது உயிரையும் அர்ப்பணிக்கத் துணிகிறான். எனவே விடுதலை வீரர்கள் அபூர்வமான மனிதப் பிறவிகள். அசாதாரணமான பிறவிகள்.

வே. பிரபாகரன்.
தலைவர்
தமிழீழ விடுதலைப் புலிகள்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடுகள்



மாவீரர்
வழி வழி எழும்
எம் தேசம்
நிமிரும்!
அவர் நினைவு சுமந்து
எம் தேசம் வாழும்
மாவீரரும் அவர்தம் வாழ்வும்
மகுடமிட்டு
எம் மனங்களில்



# மாவீரர் நாள் 1992

வாழையடி
வாழை என
மாவீரர்
வழிவந்தோம்!

விழ விழ
எழுந்து நம்
தமிழீழ மண்
மீட்போம்!!

www.tamilarangam.net

அரசோச்சுக!!





www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சென்ற இதழ்த் தொடர்ச்சி




சிவனே.... இவனிட்டைத் தப்பினது பெருந்தப்பு. ஒரு அடி தான்.... விறைச்சுப் போனன்.... நல்ல காலம் உதோட விட்டான். இல்லாட்டி ஏதோ பண்ணிப் போடுவாரே.....? உவையள் போக வரச் சொல்லுவினம். நெடுகப் பார்த்துக் கொண்டிருக்க ஏலுமே.... அது சரி நான் இனி என்னண்டு ரியூசனுக்குப் போறது. இந்தப் பாதையால போறதென்டா இனி நடவாத காரியம்..... சரி யான கறள் வைச்சுக் கொண்டு தான் இருப்பான்..... நல்லா இருக்கட்டும். நான் ரியூசனுக்குப் போகாம விடுவன். சுமதிக்கு இனி ரியூசனுக்குப் போகாததை நினைக்க அழுகை அழுகையாக வந்தது. பாமினியை நினைக்க ஆத்திரம் ஆத்திரமாக வந்தது.

என்ன இருந்தாலும் அவள் தன்ரை குணத்தைக் காட்டிப் போட்டாள். பயம் எண்டா கொஞ்சம் தள்ளிப்போய் எண்டாலும் நிண்டிருக்கலாம்தானே. தப்பினம் பிழைச்சம் எண்டு ஓடிவிட்டா ளவை. சீ..... அவளவையிலை யும் பிழை சொல்ல இயலாது. உந்த இடத்தில இருந்தா ஒரு வேளை நானும் அதைத்தான் செய்வன்.

ஒழுங்கைக்குள் சுமதியைக் கண்டவர்கள் ஊடுருவல் பார்வையுடன் ஒரு மாதிரியாகப் பார்த்துக் கொண்டு சென்றார்கள்.

ஒரு வேளை இவைக்குத் தெரிஞ்சிட்டுதோ.... சீ என்னண்டு தெரியும் அதுக்கிடேல. தெரிஞ்சாத் தெரியட்டும். அதுக்கு இவைக்கு என்ன. அங்க.... அய்யா வாறார் பாவம். இந்த வெய்யிலுக்கை எங்கை போறாரோ தெரியேல்ல. மணியத்தாரின்ர வட்டிக் காசு குடுக்க வேணுமாக்கும். அதுக்குத் தானோ தெரியேல்ல.

அவனவன் பரம்பரைக் காசை வட்டிக்குக் குடுத்துட்டு பொடியளையும் வெளிநாட்டுக்கு அனுப்பிப் போட்டு மகாராசா மாதிரி வீட்டிலை இருக்கிறாங்கள். நாங்கள் நாள் முழுக்க உழைச்சு அதையும் அவையளிட்டைக் குடுத்துப்போட்டு இப்படியே சாகவேண்டியதுதான்.

சைக்கிளைச் சிலோ பண்ணுறார். ஏதும் கேக்கப் போறாரோ..... சீ..... அங்கை விலத்திறார். எதுக்கும் எங்கை போறார் என்று கேப்பம்.

"ஐயா.....! எங்கை போறியள்.....?"

'ஐயான்ரை முன் பல்லு அண்டைக்கு விழுந்தது. முகத்தைப் பார்க்க என்னவோ போல் கிடக்கு....... கொடுப்புப் பல்லு விளேக்கை அவ்வளவு தெரியேல்லை.'

"நான்.... உங்கை சங்கத்திலை உரம் வந்திருக்காம். அது தான் ஒருக்கா பதிஞ்சு போட்டு வருவம் எண்டு வெளிக்கிட்டனான். இண்டைக்கு சனிக்கிழமை அவங்கள் இரண்டு மணி எண்டால் பூட்டிப் போடுவாங்கள்."

"உனக்கு ரியூசன் முடிஞ்சுதே...."

"ஓ.... நான் இனிமேல் ரியூசனுக்குப் போகேல்லை."

சுமதியின் குரல் தளதளத்தது. கண்களில் இருந்து மளமள வென்று கண்ணீர் வடிந்தது. "ஏன் பிள்ளை.... ஏன் என்ன நடந்தது...... ஐயோ என்ன நடந்தது எண்டு சொல்லன்" தந்தையின் பதைபதைப்பைக் கண்ட சுமதி தன்னைக் கட்டுப்படுத்த முயன்றாள்.

"இண்டைக்கும் அந்தக் கண்ணாடிக்காரன் காம்படியாலை வரேக்கை ஓடியந்து சைக்கிளைப் பிடிச்சிழுத்து நிப்பாட்டிப் போட்டான். பேரைச் சொல்லிக் கூப்பிடுறான். பார்க்கிற சனம் நினைக்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கும் அவளும் விட்டுட்டுத்தானே நிக்கிறாளெண்டு."

"அழாதை, அழுது இப்ப என்னைத்தைச் செய்யிறது. கொம்மா விடியவும் சொன்னவ அவளைக் கொண்டே கொஞ்ச நாளைக்கு மானிப்பாயில் விடுங்கோ எண்டு. அவனை நீ ஒண்டும் பேசேல்லையே......?"

"எனக்குக் கோபம் வந்திட்டுது. எடடா எண்டு பேசிப் போட்டன். நடு ரோட்டிலை விட்டு..... என்னை அடிச்சுப் போட்டான். நான் இனி அந்தப் பக்கம் போக மாட்டன்."

"சரி...... சரி.... அழாதை.... கவனமாக வீட்டை போ எல்லாத்துக்கும் நான் வாறன்."

"ஐயா நீங்கள் அவங்கடை காம்படிப்பக்கம் போயிடாதைங்கோ. என்னிலை இருக்கிற ஆத்திரத்தில உங்களை ஏதும் செய்தாலும் செய்து போடுவாங்கள்."

"ஓமோம் நீ...... கவனமாப் போ....."

சுமதி கண்களைத் தேய்த்துத் துடைத்தாள்..... அவளின் உணர்வு வேகத்தையும் மீறிக்

**கஸ்தூரி**

கொண்டு அந்த நிகழ்ச்சி நினைவுக்கு வந்தது. கண்ணீர் வருவதற்கு ஆயத்தமாக கண்கள் எரிந்தது. கண்களை இறுக மூடி கண்ணீரைக் கட்டுப்படுத்தினாள். நினைவுகளை விழுங்கிக் கொண்டு சைக்கிளைச் செலுத்தினாள்.

திடுக்குற்று விழித்த சுமதிக்கு தான் மேசையிலே தூங்கி விட்டதை நினைக்க வேதனையாக இருந்தது. விரித்துக் கிடந்த புத்தகத்தின் மீதே படுத்து விட்டதால் அதன் பக்கங்கள் சில கசங்கி மடிந்து கிடந்தன. மேசை சிறிதாக இருந்ததால் இரண்டு பேர் ஒரே நேரத்தில் உட்கார்ந்து படிக்க முடியாது. ஒரே ஒரு கதிரைதான் இருந்தது. சுமதியின் தம்பி ரூபன் ஒரு பெரிய மரப் பெட்டியின் மேல் புத்தகங்களைப் பரப்பி வைத்துவிட்டு ஏதோ எழுதிக் கொண்டிருந்தான். அவன் உட்கார்ந்திருந்த அந்தப் பழைய ஸ்டூலில் ஒரு காலின் கீழ்ப்பகுதி உடைந்திருந்ததால் ஆட்டங்காட்டிக் கொண்டிருந்தது. அடிக்கடி விழப்போனான்.

தங்கை சுகந்தி ஒரு பாயில் படுத்திருந்தபடி எதையோ பாடம் பண்ணிக் கொண்டிருந்தாள். இடைக்கிடையே தலையைச் சரித்து இவளைப் பார்த்தாள். இவள் சிரித்த போதிலும் அவள் சிரிக்கவில்லை. வெறுமனே பார்த்துக் கொண்டிருந்தாள். பின் மீண்டும் புத்தகத்தைப் பார்த்தாள்.

படிப்பதிலே கண்ணாய் இருப்பதால் சூழல் அசைவுகள் அவளைப் பாதிக்கவில்லை என்று சுமதி எண்ணிக் கொண்டாள்.

கணித பாடத்தில் ஏதோ கேள்வி கேட்டு வந்த தம்பியை ஏசவும் மனமில்லாமல் ஏதோ சாக்குச் சொல்லித் திருப்பி அனுப்பினாள்.

தானும் வெறுமனே புத்தகத்தைத் திறந்து வைத்திருந்தாளே யொழிய அவளாள் படிக்க முடியவில்லை. இனிமேல் படிப்பு எவ்வளவு தூரம் சாத்தியப்படுமென்பதை அவளால் ஜீரணிக்க முடியவில்லை.

'சிக்.... இதிலை இருந்து கொட்டாவி விடுறதைவிட பேசாமல் போய்ப் படுக்கலாம்...... இன்னும் எட்டு மணியே ஆகேல்ல. படுத்தா ஐயா என்ன நினைப்பார்? அம்மாக்கென்ன..... அவா சுகமாகச் சொல்லிப் போட்டா மானிப்பாயில் போய் நிக்கச் சொல்லி. இஞ்ச ரியூசனுக்குப் போகாததால நான் படுகிற பாடு அவவுக்கு விளங்குமோ.....'

இவ்வளவுக்கும் காரணம் அந்தக் கும்பல் என்பதை நினைக்கவே சுமதிக்குக் கோபம் கொதித்துக் கொண்டு வந்தது.

'எளியவங்கள் எத்தனை பேற்றை படிப்பை நாசமாக்கிறாங்கள்.... படிப்பென்ன வாழ்க்கையே நாசந்தானே.... உவங்கள் கடத்திக் கொண்டு போய் கலியாணங் கட்டினதுகளின்ர கெதி என்ன..... நாளைக்கு இந்தியாக்காரன் போக அவங்களும் ஓடி ஒளிச்சிடுவாங்கள். அதுகள் ஆத்தலைய வேண்டியதுதான்.'

"ஏன் பிள்ளை ஏதும் தலையிடி சுகமில்லை எண்டாப் போய் படன். பிறகேன் உதிலை இருந்து யோசிச்சுக் கொண்டிருக்கிறாய்?"

'இவ்வளவு நேரமும் அம்மா என்னைக் கவனிச்சுக் கொண்டிருக்கிறா. அம்மாவும் பாவம். என்னை படிப்பிக்க வேணும் எண்டு எவ்வளவு ஆசைப்பட்டவா. என்னைவிட அவாதான் இப்ப கூட கவலைப்படுவா.'

"வா பிள்ளை வா. வந்து சாப்பிட்டுட்டு காலைமை எழும்பி படிக்கலாம். ரூபனையும், சாந்தியையும் வரச் சொல்லு."

அய்யா சாப்பிடும்போதே சுமதிக்கு கருவாட்டுக் குழம்பு வாசனை மூக்கைப் பிய்த்துக் கொண்டிருந்தது. சுமதியும், ரூபனும் சாப்பிடுவதற்காக போய் உட்கார்ந்தார்கள். அய்யா சாப்பிட்டு விட்ட கையை அலம்பிக் கொண்டு வெளியே வந்தார். சுமதி அய்யாவின் முகத்தை நிமிர்ந்து பார்த்தாள். அவர் தீவிரமாக எதையோ சிந்தித்து வேதனைப்படுவது தெரிந்தது. ஐயா தன்னைப் பற்றித்தான் சிந்திப்பதாக சுமதிக்கு பட்டது.

சீ..... மனிதனுக்கு இந்த நாட்டிலை நிம்மதியில்லாமல் போச்சு.

"என்ன பிள்ளை யோசிச்சுக் கொண்டிருக்கிறாய்? சாப்பிடு சாப்பிடு. எதற்கும் கொஞ்ச நாளைக்கு மாமி வீட்டை போய் நில்லு பார்ப்பம், அதற்குப் பிறகு அவங்கள் என்னேயப் போறாங்கள் எண்டு"

என்ன அம்மா.... நீ.... அங்கே போய் நிண்டு கொண்டு என்னன்றுதான் படிக்கிறது? சோதனைக்கு இன்னும் மூன்று மாதந்தானே கிடக்கு.

அதற்கு என்ன மோன செய்யிறது? ஆரோ நினைச்சிருந்தவையா? இந்தப் பத்தி எரிவான்கள் திரும்பவும் அள்ளுப்பட்டு வருவான்கள் எண்டு? வடக்கையான்களிடம் வேண்டித் திண்டு

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

அவங்கள் விளை விளை எண்டு விளைஞ்சுபோய் இருக்கிறாங்கள். தங்கடை தமிழ்ச் சனம் எண்டு பார்க்கிறாங்களா? ஆமிக்காரனை விட உவங்கடை அநியாயந்தானே தாங்கேலாமல் கிடக்கு.

அம்மா, ஒழுங்கைக்க கார் ஒண்டு வந்து நிற்குதணை! சுகந்தியின் கதையைக் கேட்ட சுமதிக்கு என்னென்று தெரியாமலே மனம் திக்கெண்டது. இதென்ன கோதாரி. இந்த நேரத்தில் இங்கை யார் வரப் போகினம்? அதுகும் காரிலை என்றபடி அம்மா எழுந்து நின்று முந்தானையை உதறிச் சரி செய்தாள்.

எல்லோரும் இஞ்சை நிக்கிறியள் அங்கை வெளியாலை ஆர்? கொய்யா தனியவடா ரூபன் நீ போடா கொப்பரடிக்கு.... என்று கூறியபடி வெளியே வர இருந்த அம்மாவை சுமதி தடுத்து நிறுத்தினாள்.

அய்யோ அம்மா நீ இரு. நீ வெளியாலை வராதை. நான் வாறன் என்னண்டு பார்த்துக் கொண்டு.

"அது கார் இல்லையம்மா, வான். துவக்கோடு நிறையப் பேர் வந்திருக்கினம் அப்பாவைப் பிடிச்சிருக்கினம்." சுமதி மீண்டும் பதட்டத்தோடு ஓடிவந்து மூச்சு வாங்கக் கூறினாள்.

'ஐயோ அவங்கள்தானோ தெரியாது. இண்டைக்குப் பேசின ஆத்திரத்திலை வெளிக்கிட்டு வந்திட்டாங்களாக்கும். உப்பிடி இரவுகளிலை போய் பெட்டையளைப் பிடிச்சுக் கொண்டு போறவங்கள் எண்டு சனங் கதைக்கிறது. கடவுளே இண்டைக்கு என்ன நடக்கப் போகுதோ தெரியாது.'

சுமதிக்கு கால் நடுக்கமெடுத்தது. நிற்கவும் திராணியற்றது போல் இருந்தது. இதயம் நின்று விடுவதுபோல் வேகமாக அடித்தது. மெதுவாக நடந்து வந்து குசினிப் பின்கதவைத் திறந்தாள். வெளியே ஒரே இருட்டாக இருந்தது. மெதுவாக இறங்கி கிணற்றடிப்பக்கமாக சத்தமின்றி ஓடினாள். வேலிப் பொட்டுக்கால் ஒழுங்கை நீட்டுக்கு ஓடினாள்.....

www.tamilarangam.net

தனபாலு மாமா வீட்டை போவதற்காக.

'கடவுளே நான் இஞ்சை வந்திட்டன் அங்க என்ன நடக்குதோ தெரியாது. உங்கை 2, 3 இடத்திலை தேப்பனைத்தானே கொண்டே அடிச்சுப் போட்டவங்கள். கடவுளே அப்பாக்கு மட்டும் அப்படி ஒண்டும் நடக்கக் கூடாது. அதைவிட நான் போய்ச் சாகலாம்'

"ஏன் பிள்ளை ஏன்..... என்ன நடந்தது? ஆருக்கும் வருத்தமே? ஏன் இப்பிடி இளைக்க இளைக்க ஓடிவந்தனி?

சுமதி பெரிய சத்தத்தோடு அழுதாள். குடும்பம் முழுவதுமே வாசலில் கூடிவிட்டது. சுமதியை உள்ளே கூட்டிப் போனார்கள். சுமதி அழுகையினூடே விசயத்தைக் கூறி முடித்தாள்.

ஐயோ! உந்தப் பத்தி எரிவார் அள்ளுப்பட்டு வந்தாங்கள்.... ஒரு பொம்பிளைப் பிள்ளை மானம் மரியாதையோட வீட்டில இருக்க வழி இல்லை. துலைவார் எப்பதான் துலைஞ்சு போவான்களோ? பிள்ளையார் அப்புவே நீதான் உவங்களைக் கேக்கவேணும்."



"இழப்புக்களும், அழிவுகளும் ஒரு விடுதலைப் போராட்டத்தில் சர்வசாதாரண நிகழ்வுகள். நாம் எத்தனையோ இழப்புக்களையும், அழிவுகளையும் சந்தித்துள்ளோம்; சந்தித்து வருகின்றோம். ஆனால் இந்த இழப்புகளும் அழிவுகளும் எமது ஆன்ம உறுதிக்கு உரமாக அமைந்து விட்டால், உலகத்தில் எந்த ஒரு சக்தியாலும் எம்மை அடக்கிவிட முடியாது."

தலைவர் வே.பிரபாகரன்

மாமி தன் இயலாமையைச் சொல்லிக் கத்தினாள்.

"நீ..... நீ..... நீ...... இப்பேன் உதில இருந்து ஓலம் பாடுறாய்..... அவள் சாப்பிட்டாளோ தெரியாது. கேட்டுக் கூட்டிக் கொண்டே சாப்பாட்டைக் குடு. பிள்ளை சுமதி நீ இஞ்சை இருந்து கொள். சும்மா ஒண்டுக்கும் யோசிக்காத. நான் ஒருக்கா வீட்டுப் பக்கமாய் என்ன நடக்குதெண்டு பார்த்துக் கொண்டு வாறன் என்ன?

"இஞ்சை நீங்கள் என்னத் துக்கப்பா இப்ப அவசரப்பட்டு அங்கை ஓடுறியள். வந்தவங்கள் போயிட்டாங்களோ தெரியாது. எப்பனுக்கு நிண்டு பார்த்துப் போங்கோவன்."

"சும்மா கத்தாமக் கிட நான் இப்ப வந்திடுவன்" மாமா மாமியை அடக்கி விட்டு புறப்பட்டார்.

"இஞ்சை மாமா, ஏதும் பிரச்சனை எண்டா உடனே வந்து சொல்லுங்கோ" "ஓமோம் அதெல்லாம் நான் பார்க்கிறேன். நீ ஒண்டுக்கும் யோசிக்காதை"

அன்றிரவு முழுவதும் சுமதி தூங்கவே இல்லை. முகத்தைத் தொங்கப் போட்டபடி மாமா வந்து கூறினார்: "அப்பாவை ஏத்திக் கொண்டு போட்டாங்கள்" என்று. அவ்வளவுதான் சுமதி இரவு முழுவதும் அழுது கொண்டே இருந்தாள். வீட்டிற்குப்போக மாமா விடவில்லை சிலவேளை அந்தக் கும்பல் இரவிலும் வரலாம் என்பதால்.

விடிந்ததும் சுமதி வீட்டிற்குப் போனாள். கூடவே மாமாவும் போனார்...... வீட்டிலே எல்லோருடைய முகத்தையும் பார்த்ததும் சுமதிக்கு விளங்கியது. இரவு முழுவதும் ஒருவரும் தூங்கவில்லை அழுதிருக்கிறார்கள் என்று. அம்மா சுமதியைக் கண்டதும் பெரிதாக அழுதாள்.

"ஐயோ அந்தாளைக் கொண்டு போயிட்டாங்கள். இனி எல்லோரும் என்னேயப் போறியள்.......? நாங்கள் ஆருக்கு என்ன அநியாயம் செய்தநாங்கள்.... கடவுளே நீ ஏன் இப்படி

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

எங்களை சோதிக்கிறாய்?" அம்மா சுமதியைப் பிடித்துக் கொண்டு அழுதாள். சுமதியும் அழுதாள்.

சுமதி நடந்த விசயங்களை அம்மாவைக் கேட்டாள். அம்மா சொன்னாள்:

வந்தவங்களில் ஒருவன் கண்ணாடி போட்டவன். தாடி வளர்த்தவன். அப்பாவிடம் கேட்டிருக்கிறான். சுமதியைத் தான் விரும்புவதாகவும் தனக்கு அவளைக் கலியாணம் செய்து தரும்படியும். அப்பா சம்மதிக்கவில்லை. சுடுவன் என்று கூறி மிரட்டிப் பார்த்திருக்கிறார்கள். ஊஹூம்..... அப்பா இசையவே இல்லை. நீங்கள் என்னைச் சுட்டாலும் பரவாயில்லை, அப்படியான ஒரு மோசமான ஒரு வேலையை நான் கடைசிவரைக்கும் செய்ய மாட்டேன் என்று பிடிவாதமாக மறுத்து விட்டார். அவ்வளவுதான். அப்பாவை அடித்து வானில் ஏற்றி விட்டு சுமதியை விசாரித்திருக்கிறார்கள். அவள் இங்கே இல்லை வேறு இடத்தில் என்று கூறவும், உனக்குப் புருஷன் வேணுமெண்டா நாளைக்கு மேளைக் கொண்டந்து தந்திட்டு புருஷனைக் கூட்டிக் கொண்டு போ என்று கூறி இருக்கிறார்கள்.

சுமதிக்கோ, இவ்வளவு துன்பமும் வீட்டாருக்கு தன்னால்தானே ஏற்பட்டதென்று பட்டது. சுமதி வீட்டில் அன்று காலையில் அடுப்புக்கூட மூட்டவில்லை. எல்லாம் போட்டது போட்டபடி கிடக்கு எல்லோரும் அவரவர் போக்கில் அழுதுகொண்டும் யோசித்துக் கொண்டும் திரிந்தார்கள்.

தனபாலு மாமாதான் அம்மாவையும் கூட்டிக் கொண்டு காம்புக்குப் போனார். அம்மா எவ்வளவோ அழுது குளறி மண்டாடியும் அய்யாவைப் பார்க்க விடவில்லையாம். பின்னேரம் விட்டுவிடுவதாகக் கூறியிருக்கிறார்கள்.

சோர்ந்து துவண்டு போய் அம்மா வீட்டுக்கு வந்தாள். வீடோ செத்துவிட்டது போல் சோர்ந்து சோகமாய்க் கிடந்தது. அன்று முழுவதும் யாரும் சாப்பிடவில்லை. இடையிடையே தேனீர் மட்டும் குடித்தார்கள். அம்மா அதனையும் மறுத்தாள். பின்னேரம் ஐயா வரவில்லை.... இரவு ஊஹூம் அப்போதும் வரவில்லை. அம்மா மீண்டும் அழத் தொடங்கி விட்டாள். சுமதிக்கோ அடுத்து என்ன செய்வதென்றே தெரியவில்லை.

விடிந்ததும் விடியாததுமாக மறுநாளும் அம்மா மாமாவைக் கூட்டிக் கொண்டு காம்புக்கு போனாள். நீண்ட நேரமாயிற்று. அவர்கள் வந்து சேர்ந்த போது அப்போதும் ஐயா வரவில்லை. வந்ததும் வராததுமாக ஒப்பாரி சொல்லி அம்மா அழத் தொடங்கி விட்டாள்.



# தலைவன் வாழி!

பொங்குமா கடலின் ஓரம்
பிறந்ததோர் புயலின் மையம்
தங்கமண் நெடுநாள் செய்த
தவத்தினால் உதித்த பையன்
வெங்களம் ஆட என்றே
வேங்கையாய் நிமிர்ந்த தீரன்.
எங்களின் தலைவன்; "தம்பி"
இந்தநூற் றாண்டின் வீரன்.

தூங்கிய தமிழர் நெஞ்சை
துடித்திடச் செய்தோன்; ஈழம்
வாங்குவோம் எழுக! என்றே
வாலிப மனத்தை வென்றோன்.
வேங்கைகள் சாவுக் கஞ்சா
வீரர்கள் என்றே சொல்லத்
தாங்கிய தலைவன்; எங்கள்;
தளபதி! அன்புத் தம்பி!

ஆயிரம் களங்கள் கண்ட
அண்ணனை; தமிழீழத்தின்,
பாயிரம் ஆகப் போகும்
பரணியின் தலைவன் தன்னை
ஏவிய படைகள் வந்து
என்னடா செய்யும், எங்கள்,
காவியம் களத்தில் வெல்லும்.
காலங்கள் அவன்பேர் சொல்லும்.

எத்தனை புயல்கள் வந்து
எழுந்தன; தலைவன் தன்னை;
எத்தனை படைகள் ஒன்றாய்
எதிர்த்தன, துரோகக் கும்பல்
எத்தனை விதமாய் சொல்லி
இகழ்ந்தன, இடையில் விட்டு
எத்தனை பேர்கள் சென்றார்.
இறுதியில் தலைவன் வென்றான்.

கொட்டடா! முரசு: எங்கே
கொம்பது எடுத்து ஊது.
தட்டடா! கைகள், எங்கள்
தலைவனைப் பாடு, எம்மை
முட்டிய துயரம் யாவும்
முடிந்திடும், புலிகள் சேனை
எட்டிய வரையும் பாய்ந்து
எழுந்திடும், தலைவன் வாழி!

■ புதுவை இரத்தினதுரை

*26/11/1992*
***தலைவர்***
***வே. பிரபாகரன்***
***அவர்களின்***
***39 வது***
***பிறந்த நாளுக்கு***
***எமது வாழ்த்துக்கள்***

***"எரிமலை"***

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சுமதி மாமாவிடம் ஐயாவைப் பற்றி விசாரித்தாள்.

ஐயாவை நேற்றுப் பின்னேரம் விட்டு விட்டார்களாம். மாமா சொன்னதைக் கேட்ட சுமதிக்கு தூக்கி வாரிப் போட்டது. பயம் பற்றிக் கொண்டது. ஒருவேளை..... ஒருவேளை அப்பாவை அவர்கள் அடித்தே கொன்று விட்டார்களோ! ஊரில் இப்போது அப்படித்தானே நடக்கிறது. ஐயோ.... ஓ.....ஓ.... சுமதியும் அம்மாவோடு சேர்ந்து அழுதாள். எல்லோரும் அழுதார்கள். வீடே செத்த வீடுபோல் மாறிவிட்டது.

அன்று முழுவதும் காம்பும் வீடுமாக மாமா அலைந்தார். அடுத்த நாளுந்தான் அம்மா அழுதழுது எல்லாக் காம்புக்கும் சென்று விசாரித்தார். மாமா தனக்குத் தெரிந்தவர்கள் (சந்தைக் கும்பலுக்கு ஆதரவானவர்கள்) எல்லாரையும் கூட்டிச் சென்று விசாரித்தார். எல்லா இடத்திலும் விட்டு விட்டதாகவே கூறினார்கள். அம்மா அழுதபோது அதட்டிப் பயமுறுத்தி விரட்டிவிட்டார்கள்.

சுமதிக்கோ இந்த உலகத்தில் வாழ்வதே வெறுத்தது. என்னால்தானே இவ்வளவும். இந்த நாசமாய்ப் போன உலகத்தில் இன்னும் என்ன வாழ்க்கை வேண்டிக் கிடக்கிறது. மூன்று நாட்களாக அந்த வீட்டில் செத்தவீடு நடக்கிறது. இதயம் ஏற்றுக் கொள்ளாத செத்தவீடு, ஊர்ஜிதப்படுத்தாத மரணம். உயிரோடு திரும்பக் கிடைக்க வேண்டும் என்ற அங்கலாய்ப்பு..... கிடைக்கும் என்ற அந்த நம்பிக்கை.

ஊரார் கூடிவந்து ஒப்புச் சொல்லி அழுதார்கள். அம்மாவும் அழுதாள். எல்லோரும் அழுதார்கள். ஆனால் செத்தவீடு ஒன்றைச் செய்து முடிக்க அந்த வீட்டில் ஒருவருக்கும் உடன்பாடில்லை. வீட்டில் உறவினர்களும் வந்து நின்றார்கள். வீட்டைக் கூட அவர்கள்தான் நிர்வகித்தார்கள். நான்காம் நாள் காலை அம்மா முற்றத்தில் அழுது கொண்டிருந்தாள். மாமா வாந்தார். இன்றும், மேலிடத்தோடு தொடர்பு கொள்ள வேறு யாரையோ கூட்டிக் கொண்டு போவதாகக் கூறியிருந்தார்கள். வந்தவர் கூறிய செய்தி அங்கிருந்த எல்லாரையுமே ஒரு கணம் அதிர வைத்தது. வீட்டுக்குக் கிழக்குப் புறமாக சற்றுத் தள்ளி ஒரு பாழுங்கிணறு. பெரும்பாலும் அந்தக் கிணற்றைச் சுற்றியுள்ள வீடுகளில் வசிப்பவர்கள் குப்பை கூழங்களையும் உடைந்த போத்தல், ஓடுகளையும் அங்கே தான் கொட்டுவார்கள். சிறுவர்கள் கல்லெறிந்து விளையாடுவார்கள்.

இரவு முழுவதும் துர்நாற்றம் வீசுவதைக்கண்ட அயலவர்கள் காலையில் எங்கும் பார்த்துவிட்டு இறுதியில் அந்தக் கிணற்றுக்குள் சென்று பார்த்திருக்கிறார்கள். அதற்குள் சாக்கு ஒன்றில் கட்டப்பட்ட பெரிய மூடைபோல் ஒன்று இருப்பதையும், அதற்குள்ளிருந்து துர்நாற்றம் எழுவதையும் கண்டு கொண்டு விட்டார்கள். அந்த வழியால் சென்ற வேறு சிலரும் அதனைப் போய் பார்த்து விட்டு வந்திருக்கிறார்கள். அவர்களில் ஒருவர்தான் மாமாவை வழியில் மறித்து இதனைக் கூறி இருக்கிறார்.

இதைக் கேட்டதும்தான் தாமதம் அம்மா மண்ணில் விழுந்து அடித்துப் புரண்டு குளறினாள். வீட்டில் நின்றவர்கள் பேயறைந்தது போல் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள். சிலர் அம்மாவோடு சேர்ந்து அழத் தொடங்கி விட்டார்கள். சுமதிக்கு தலை விறைத்தது. நிற்க முடியாமல் சுவரோரமாக உட்கார்ந்தாள். மாமா சிறிதும் தாமதிக்காமல் என்னவென்று பார்த்துவரப் போனார். சுமதியின் இதயத்தில் ஆயிரம் வேண்டுதல்கள். மாமா வந்து சொல்லப் போகும் முடிவு....... 'கடவுளே ஐயாவுக்கு ஒண்டுமே நடக்கக் கூடாது. ஐயாவை உயிரோட திருப்பித் தந்திடு' ஒவ்வொரு வினாடியும் அங்கிருந்தவர்களுக்கு ஒரு யுகமாகக் கழிந்தது.

கேற்றடியில் ஒரு மாட்டு வண்டி வந்து நின்றது. திடீரென்று எழுந்த துர்நாற்றம் அங்கிருந்தவர்களை திகைக்க வைத்தது. எல்லோர் இதயங்களும் திக் திக் என்று அடித்துக் கொண்டது. எல்லோரும் தம்மை மறந்தவர்களாக படலையடிக்கு ஓடினார்கள். மாமாவும் வேறு சிலரும் வண்டியிலிருந்து சாக்கு மூட்டையை இறக்கினார்கள். நாற்றம் மூக்கை பொத்தச் செய்தது. நடந்ததை எல்லோருமே ஊகித்துக் கொண்டார்கள். அந்தக் குடும்பத்தின் எதிர்பார்ப்புக்களை எல்லாம் தவிடு பொடியாக்கும் வண்ணம் அங்கே ஒரு பிணம் வந்து விட்டது. அந்த வீட்டில் இனி ஒரு செத்த வீடு நடப்பது தவிர்க்க முடியாதது.

படலையடியில் ஒரு வான் வந்து நின்றது. ஆயுதம் தாங்கிய அந்தக் கும்பல் குதித்து ஓடி வருகிறது. அதில் ஒருவன் உறுமினான். "அரை மணித்தியாலத்திற்கை அழுது ஆர்ப்பாட்டம் பண்ணாமல் பிரேதத்தைக் கொண்டே எரிச்சுப் போடோணும். இல்லாட்டி எல்லோரையும் சுட்டுத் தள்ளிப் போடுவம்."

அந்தக் கொடியவர்களை ஏற்றிக் கொண்டு அந்த வாகனம் மீண்டும் யாரைப் பலியெடுக்கலாம் என்ற எதிர்பார்ப்போடு செல்வது போல் உறுமிக் கொண்டே செல்கிறது.

(முற்றும்)

படலையடியில் ஒரு வான் வந்து நின்றது. ஆயுதம் தாங்கிய அந்தக் கும்பல் குதித்து ஓடி வருகிறது. அதில் ஒருவன் உறுமினான். "அரை" மணித்தியாலத்திற்க அழுது ஆர்ப்பாட்டம் பண்ணாமல் ஏத்திக்கொண்டே எரிச்சுப்போடணும். இல்லாட்டி எல்லோரையும் சுட்டுத் தள்ளிப் போடுவம்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தமிழர் ஒதுக்கிவைத்துள்ள அவர்தம் பண்பாட்டம்சம் ஒன்று



தமிழ் மக்கள் மத்தியிலிருந்து பறை எனும் தோல் வாத்திய இசைக் கருவிக்கு ஒரு வரலாற்று முக்கியத்துவமும், பண்பாட்டு முக்கியத்துவமும் உண்டு. திராவிடப் பண்பாட்டின் ஆதியைக் குறிக்கும் இவ்விசைக்கருவி தமிழ்ப் பண்பாட்டுக் கருவூலங்களில் ஒன்றாகும். ஆனால் "ஆரிய" கலாச்சாரத்தின் தாக்கத்தால் தமிழ்ப் பண்பாடு "சன்கிறட்டைஸ்ட்" எனப்படும் திரிபுக்கு உட்படலாயிற்று. இதனை ஒருவகை மேல்நிலைப்படுத்தல் எனத் தமிழர் கருதிக் கொள்ளலாயினர்.

குறிப்பாக ஆலயக் கிரியைகளோடு சம்பந்தப்பட்டு இந்த மாற்றம் அதிகம் நிகழ்ந்தது. இதனால் ஆலயங்களில் பறை இசைக்கப்படுவது படிப்படியாக கைவிடப்பட்டு தவில் இசைக்கப்படலாயிற்று. குறிப்பாக நகர்ப்புறங்களை அண்டி உயர்குழத்தினாரை மையமாகக் கொண்ட பெரும் கோவில்களிலேயே இம்மாற்றம் பெரிதும் ஏற்படலாயிற்று.

ஆனால் இதேவிடயம் சிங்கள மக்கள் பக்கத்தில் வேறுவிதமாய் அமைந்தது. கி.மு 1000 ஆண்டளவில் இலங்கைத்தீவில் பெருங்கற் பண்பாடு எனப்படும் திராவிடப் பண்பாடே இருந்துள்ளது. சிங்கள மக்களினதும் மூலப் பண்பாடும் இதுவேயாகும். தமிழ் மக்கள் பக்கம் ஏற்பட்டதையும் விட சிங்கள மக்கள் மத்தியில் "ஆரிய" கலாசார தாக்கம் குறைவாக ஏற்பட்டதனால், பறை எனும் இசைக்கருவியை அவர்கள் கைவிடாது சற்று திருத்தத்துடன் அரசவை இசைக்கருவியாகப் பேணிக் கொண்டனர். சிங்களவர்களது கண்டிய நடனத்தில் இவ்விசைக்கருவியே உபயோகத்தில் உண்டு. எனவே சிங்கள மக்கள் மத்தியில் பறை மேன்மைக்குரிய கருவியாக அரசவை அந்தஸ்த்தைப் பெற்று தொடர்ந்து நிலவ, தமிழ் மக்கள் மத்தியில் அது பெரிதும் கைவிடப்படும் ஒன்றாகவும் தாழ்வுக்குரியதொன்றாகவும் கருதப்படலாயிற்று.

ஆரம்ப காலத்தில் தமிழரது வழிபாட்டோடும், மங்களகரமான நிகழ்ச்சிகளோடும் பறை சம்பந்தப்பட்டதொன்றாகவே இருந்தது. இன்றும் பல கிராமிய கோவில்களில் பறை தொடர்ந்தும் இசைக்கப்படுவது இதற்கு ஒரு நல்ல சான்றாகும். இவ்விசைக்கருவி மங்களகரமான நிலையிலிருந்து நீக்கப்பட்டு அமங்கலமான மரணக் கிரியைகளுக்கே பெரிதும் உரியது என்ற நிலை உருவானது. இந்த விடயத்தில் திராவிடப் பண்பாட்டுக் கருவூலம் ஒன்றினை தமிழரைவிட சிங்களவர் அதிகம் பேணுகின்றனர் எனலாம்.

தமிழ் மக்கள் மத்தியில் மானிடவியல் ஆய்வு இன்னும் ஆரம்பிக்கப்படக் கூடவில்லை. ஆதலினால் பறையைப் பற்றியும், இதனை வாசிக்கும் கலைஞர்கள் சம்பந்தமான முக்கியத்துவத்தினைப் பற்றியும் நாம் உணரக் கூடியதாக இல்லை.

பறை இசைக்கும் கலைஞர்கள் ஒரு தனிச் சமூகமாக ஒடுக்கப்பட்ட சமூகமாக வாழ்கின்றனர். உண்மையில் "ஆரிய" கலாச்சாரத் தாக்கம் தமிழ்ச் சமூகத்தை பண்பாட்டு ரீதியாக ஒடுக்கியதன் சின்னமே இதுவாகும். பறை இசைக்கும் கலைஞர் சமூகமே தமிழர் மத்தியில் திராவிடப் பண்பாட்டை அதிகம் பேணும் மக்களாவர். மானிடவியல் ஆய்வுகளைச் சரிவரச் செய்தால் இதனை உணர்ந்து கொள்ளலாம் என நம்புகிறேன்.

பறை இசைக்கும் கலைஞர்கள் தவிர்ந்த ஏனைய கலைஞர்கள் காலத்திற்கு காலம் இந்தியாவிலிருந்து இங்கு தருவிக்கப்பட்டுள்ளனர். ஆனல் பறை இசைக்கும் கலைஞர்கள் அவ்வாறின்றி இத்தீவின் மூலவேருடன் தொடர்ந்து கிளைவிடுபவர்களாவர். ஆதலினால் கலப்பற்ற திராவிடப் பண்பாட்டம்சங்கள் இவர்களிடமே பெரிதும் தரித்தும், உயிர் வாழக் கூடியதாகவும் உள்ளது.

தமிழ் மக்களின் மூலப்பண்பாட்டுக் கூறுகளை அறிய எம்மத்தியில் உள்ள உயிர்வாழும் தரவுகளாக பறை இசைக்கும் கலைஞர் சமூகம் உள்ளது. இச்சமூகத்தவர் மத்தியிற் செயற்படும் ஆழமான மானிடவியல் ஆய்வுகள் தமிழரின் ஆதிப் பண்பாட்டுக் கோலங்களைத் தெளிவாக அடையாளங் காண உதவக் கூடியவை.

தமிழ்ச் சமூகம் தனது மேன்மைக்குரிய பண்பாட்டம்சம் ஒன்றினை ஒடுக்கி, அதற்குத் "தாழ்ந்தது" என்று முத்திரையும் இட்டு வைத்திருக்கும் விசித்திரம் ஒன்றினை இது எமக்கு பட்டதுர்த்தனமாக வெளிக்காட்டி நிற்கின்றது. கலாநிதி பொ. இரகுபதி பெருங்கற்கால யாழ்ப்பாணம் என்ற தலைப்பில் 1983ம் ஆண்டு சிறு நூல் ஒன்றை வெளியிட்டிருந்தார். அந்நூலின் பின்புற அட்டையில் பறையும் அதனை இசைக்கும் கலைஞருமான ஒரு புகைப்படம் காணப்பட்டது. இதுபற்றி நான் அவருடன் உரையாடியபோது அதற்கு அவர் அளித்த விளக்கத்தை அடிப்படையாகக் கொண்டே இக்கட்டுரையின் கருத்துக்களை நான் எழுதியுள்ளேன். மேற்படி புகைப்படத்தை பின்புற அட்டையில் பிரசுரித்து அதனை பொதுப் பண்பாட்டின் மூலக்கூறுகளில் ஒன்றென அவர் நினைவுபடுத்தியதும் முக்கியத்துவப்படுத்தியதும் அப்போது என்னை பெரிதும் கவர்ந்திருந்தது.

எமது பண்பாட்டோடு தழுவியதும், எமது தேசிய உருவாக்கம் சம்பந்தமானதுமான இவ்விடயத்துக்கு ஓர் அரசியல், பண்பாட்டு வரலாற்று முக்கியத்துவம் உண்டு.


- மு. திருநாவுக்கரசு -

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஒப்பரேசன் பலவேகய - 2 நடவடிக்கையில் வெற்றிலைக் கேணி - கட்டைக்காடு முகாமிலிருந்து சிறிலங்கா இராணுவத்தினர் ஆனையிறவு நோக்கி முன்னேற முயன்றுகொண்டிருந்தனர். முன்னேறும் நடவடிக்கையில் ஈடுபட்ட இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் எட்டாவது நாளாக தொடர்ந்து சமர் நடந்து கொண்டிருந்தது.

இயக்கச்சியில் எங்களது வாகனம் பழுதுபட்டு நின்றதால் பார்த்துவர (05. 07. 1992 ஞாயிற்றுக் கிழமை) அன்று மாலை 4. 00 மணியளவில் பளை யில் இருந்து இயக்கச்சிக்குப் போய்க் கொண்டிருந் தோம். புதுக்காட்டுச் சந்திக்கருகில் சென்றுகொண் டிருக்கும்பொழுது இயக்கச்சிப் பகுதியில் உலங்கு வானூர்தி ஒன்று வட்டமிட்டு வேட்டுக்களைத் தீர்த் துக் கொண்டிருந்தது.



# சங்காரமாகிய "வை 8" ஒரு வரலாற்றுப்பதிவு

மேலே உலங்கு வானூர்தி சுட்டுக் கொண்டிருக்கும் பொழுது தரையிலிருந்து எறிகணைத் தாக் குதலின் வெடியோசைகளும், துப் பாக்கி வேட்டொலிகளும் கேட்டுக் கொண்டிருந்தன; அப்பிரதேசம் அதிர்ந்து கொண்டிருந்தது.

நானும் என்னுடன் கூட வந்த சின்னமணி என்பவரும் தொடர்ந்து சைக்கிளில் போய்க் கொண்டிருந்தோம். சன நடமாட் டம் மிகக்குறைவு. இயக்கச்சி - கொம்படி வழிப் பயணிகளின் போக்குவரத்து பலவேகய - 2 நட வடிக்கையால் தடைப்பட்டிருந் தது. சண்டை(பலவேகய - 2 நட வடிக்கை) ஆரம்பமாவதற்கு முதல் 25-6-92 அன்றே இயக்கச்சியில் குடியிருப்புகள் மீது குண்டு வீச்சும் எறிகணைத் தாக்குதலும் தொடங் கியதால் மக்கள் (சண்டை வலுப் பெற்று) தாக்குதல் கடுமையாகிய தும் மெல்ல மெல்ல வெளியேறி சண்டை நடக்காத இடங்களுக்குப் போகத் தொடங்கியிருந்தனர். ஆனாலும் இடையிடை பொதுமக் கள் இருந்தனர். நாங்கள் செல் லும் போது புதுக்காட்டுச் சந்தியி லிருந்து வீதியில் இருபக்கமும் உள்ள தென்னந் தோட்டங்களில் விமானங்கள் வீசிய குண்டுகளி னால் தென்னைகள் முறிந்து, சிதைந்து கிடந்தன. மனதைத் துயர் வருத்தியது. இந்த மரங் களை வளர்க்க எவ்வளவு உழைப்பு உழைத்திருப்பார்கள். பல இடங்களில் குண்டுகள் வீசப் பட்டதன் அழிவுகள் தெரிந்தன. திடீரெனச் சின்னமணி மூக்கைப் பொத்தினார். எங்கிருந்தோ நாற்ற வாடை அடித்தது. குண்டு வீச் சினால் ஊரவர்களின் ஆடோ, மாடோ பலியாகியிருக்கக் கூடும். முறிந்த தென்னைகளினதும், வெடி மருந்தினதும் ஒரு வகை நெடி அடித்தது. சிங்கள இராணுவத் திற்கு தமிழரின் மந்தைகள் என் றால் என்ன? மரங்கள் என்றால் என்ன? வீடுகள் என்றால் என்ன? எல்லாம் விரோதம் தானே. தமி ழரே எதிரிகளாக அவர்களுத் தெரியும் வரை தமிழருடையவை அந்தப் பார்வையிலிருந்து தவ றுமா? 'மருண்டவன் கண்ணுக்குத் தெரிவதெல்லாம். . . . '

நாங்கள் கரந்தாய்க் குளத் தைக் கடந்து இயக்கச்சிக்கு அண் மையாகச் செல்லும் போது "ச கடை வருகிறது" என்று சின்ன மணி சொன்னார்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கிளிநொச்சிப் பக்கத்திலிருந்து (தெற்கிலிந்து வடக்கு நோக்கி) Y-8 விமானம் வந்து கொண்டிருந்தது. சுற்றிக் கொண்டிருந்த உலங்கு வானூர்தி இப்பொழுது ஆனையிறவு முகாமில் தரையிறங்கி விட்டது. சகடை வந்தவுடனேயே குண்டுகளைப் போடத் தொடங்கியது. 'சியாமாச் செட்டி' குண்டு வீச்சு விமானங்கள் வட்டமிட்டுப் பதிந்தே குண்டுகளை வீசும். 'அவ்ரோ' விமானமும் அப்படித்தான். ஆனால் Y-8 விமானம் அப்படியல்ல. விமானம் வான்வெளிப் பிரதேசத்தில் ஒரு சீராகப் பறந்து கொண்டிருக்கையில் இலக்கை நோக்கி குண்டுகளை வீசும்.

முதலாவது குண்டு எவ்விடத்தில் விழுகிறது என அவதானித்து, நாம் தற்காப்பு எடுத்துக் கொண்டோம். இயக்கச்சி - சங்கத்தார் வயல்ப் பகுதியில் குண்டு விழுவதாக நாம் அனுமானித்துக் கொண்டோம். நாங்கள் நின்ற இடத்திற்கு அருகில் சில பொது மக்களும் இருந்தனர். இருந்தவர்களின் மனதில் பயத்தின் மிரட்சி முகங்களிலும், அவர்களின் பதட்டத்திலும் தெரிந்தது. நாங்கள் பயப்பிடாதீர்கள், பயந்து என்ன ஆகப்போகிறது என அவர்களை உற்சாகப்படுத்தி விமானத்தை அவதானித்துக் கொண்டிருந்தோம். எட்டாவது நாளாக சண்டை நடைபெறுவதால் இடைவிடாத விமானத் தாக்குதலில் எவ்வளவோ அழிவுகள் அந்தப் பகுதியில் தெரிந்தன. 'லக்ஷபான' மின்கோபுரம், கடைக்கட்டிடங்கள், வீடுகள், சந்தை, பாடசாலை, தேவாலயம், மற்றும் மரங்கள் செடிகள் எல்லாமே இடிந்தும், சிதைந்தும், அழிந்தும் காணப்பட்டன. ஊழி தாண்டவமாடிய தடயங்கள் துயரத்தின் வடுக்களாக நெஞ்சைப் பிழிந்தன. "ஒவ்வொரு நாள்த் தாக்குதலுக்குள்ளும் இந்தச் சனங்களும் இந்தப் பொடியளும் (போராளிகளும்) எவ்வளவு பாடுபட்டிருக்குதுகள்" எனச் சின்னமணி என்னிடம் ஆதங்கத்துடன் கூறினார். உண்மையில் இவையெல்லாம் உணர்வைப் பிழியும் நிகழ்வுகள்தான். எம்முடன் இரண்டு ஆசிரியர்களும் நின்றார்கள். எல்லோருமாக பத்துப்பேர் வரையில் தான் அங்கு நின்றோம்.

போராளிகள் நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தனர். விமானத்தை நோக்கி சுடும் ஒலி கேட்டது. காயப்படும் போராளிகளை எடுத்துச் செல்வதற்காக வாகனங்களும், சாரதிகளும், துணையாகவும் பராமரிக்கவும் வேறுசிலரும் அங்கங்கே நின்றனர். தண்ணீர் நிரப்பிய கொள்கலனை இரண்டு போராளிகள் தடியில் கொழுவி சிரமப்பட்டுத் தூக்கி வந்தனர். சின்னமணியும் நானும் அவர்களிடமிருந்து கொள்கலனை வாங்கி சைக்கிளில் கொண்டு செல்லவேண்டிய இடத்திற்குக் கொடுக்கச் சென்றோம்.

விமானம் தொடர்ந்து குண்டுகளை வீசிக் கொண்டிருந்தது. கீழேயிருந்து விமானத்தை நோக்கிப் புலிகள் சுட்டுக் கொண்டிருந்தனர். தண்ணீர்க்கலனை உரிய இடத்தில் கொடுத்து விட்டுத் திரும்பினோம். இன்னும் விமானம் தாக்குதலில் ஈடுபட்டுக் கொண்டேயிருந்தது. இப்போது நாங்கள் முன்னர் நின்ற இடத்திற்கு வந்து விட்டோம். அருகில் நின்ற பெண் ஒருவர் திட்டிக் கொண்டிருந்தார்.

"இந்தக் கொடுமை செய்வாங்கள் ஏனிப்பிடி அநியாயம் செய்கிறாங்கள்? இப்படியும் ஒரு அரசாங்கமோ? எத்தனை பிள்ளைகள் இதில் அகப்படுமோ?" என ஆதங்கப்பட்டார்.

இன்னொரு விமானம் குண்டினைப் போட்டுவிட்டு ஆழியவளைக் கடற்கரையை நோக்கி சென்று திரும்பி மறுபடியும் முதல் வீசப்பட்ட இலக்குக்கு குண்டினைப் போட்டுவிட்டு பரந்தன் பக்கமாகச் சென்று திரும்பி... (வடக்குத் தெற்குத் திசையில் எட்டு வடிவில் பாதையமைத்து) மீண்டும் ஒரு குண்டு போட்டு..... அரை மணித்தியாலம் அகோரத் தாண்டவம் ஆடிக்கொண்டிருந்தது. விமானம் யுத்தப் பிரதேசத்திற்கு நேராக வரும் பொழுது புலிகள் தரையிலிருந்து துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்த்துக் கொண்டே

## நான் ஏன் எழுதுகிறேன்?

'எழுத்துலகில் எனது பெயர் பொறிக்கப்பட வேண்டும் என்பதற்காக நான் எழுதவில்லை. மனச்சுத்தியுடன் எழுத்தை மட்டும் பார்த்து விமர்சிக்கின்ற ஒரு நேர்மையான விமர்சகனால் என் எழுத்துக்கள் பாராட்டப்பட்ட பொழுதுகளில் என் ஆத்மா சந்தோசப்பட்டதுண்டு. அதேபோல் அவர்கள் சுட்டிக்காட்டும் திருத்தங்களை ஏற்கும் மனப்பக்குவமும் எனக்குண்டு. என் எழுத்துக்கள், நான் வாழும் இந்தச் சமூகத்தில் ஒரு சின்னத் துடிப்பை ஏற்படுத்தினால், அதுவே என் எழுத்தின் வெற்றியென நான் உணர்கிறேன்.'

-மேஜர் பாரதி-

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

யிருந்தனர். ஒவ்வொரு குண்டும் போடப்படும் போதும் நாங்கள் அவதானித்துக் கொண்டேயிருந்தோம். ஒரு ஊமல் அளவில், சிறியதாக, கறுப்பாக குண்டு விமானத்திலிருந்து கீழே வந்து கொண்டிருக்கும். விமானத்திலிருந்து தள்ளப்பட்ட ஒரு நிமிடத்திற்குள்ளாக குண்டு பெரும் அதிர்வுடன் வெடிக்கும். இவ்வாறு ஏழு குண்டுகள் போடப்பட்டு விட்டன.

வடதிசையிலிருந்து திரும்பி எட்டாவது குண்டும் போடப்பட்டாயிற்று. நாங்கள் விமானத்தில் கண் பதித்திருந்தோம். புலிகளின் துப்பாக்கிகள் முழங்கிக் கொண்டேயிருந்தன. திரும்பி வந்து கொண்டிருந்த விமானம் அந்தரத்தில், வான் வெளியில் தீப்பற்றியது. தீயும் புகையும் தெரிந்த சமவேளையில் பெரும் அதிர்வுடன் வெடித்தது. வெடியா அது? அதன் அதிர்வு மரம், செடி, நிலம் எல்லாவற்றையும் ஒரு கணம் ஆட்டி வைத்தது. இருதயமும், செவியும் இயல்பு மீறித் தொழிற்பட்டன. (இந்தச் சத்தமும் அதிர்வும் பளை, எழுதுமட்டுவாள் வரை இருந்ததாக அப்பகுதி மக்கள் கூறினார்கள்)

எல்லாம் ஒரு நிமிடத்துள் முடிந்தது. பேய்கள் சங்காரமாகின. எங்களுடன் நின்றவர்கள் மகிழ்ச்சியில் சத்தமிட்டனர். ஆரவாரித்தனர். எல்லையற்ற சந்தோசம் அது.

விமானம் வானத்தில் வெடித்துச் சிதறியதும் கறுப்பாக ஒரு பொருள் மெல்ல மெல்ல கீழே வந்து கொண்டிருந்தது. அப்பொருள் விழும்போது அதன் பின்னால் (மேலிருந்து கீழாக) புகைக் கோடு அப்பொருளுடன் தொடர்வது தெரிந்தது. (ஜெட் விமானம் செல்கையில் புகைக்கோடு தெரியுமே.... அது வெண்ணிறமாகத் தெரியும், இது கரும்புகையாகத் தெரிந்தது.)

விமானம் அழிந்ததில் எல்லோருக்கும் அளவு கடந்த மகிழ்ச்சி. "தொலைவார் தொலைஞ்சு போனாங்கள். எங்கட பொடியள் கெட்டிக்காரர் தான்" என்று அருகில் சொல்லிக் கேட்டது.

சிதைவுகள் கீழே விழுந்த பின் தூரத்தில் காட்டுத் தீ மூண்டெரியும் போது எவ்வாறு கரும் புகையாகத் தெரியுமோ அவ்வாறே புகைமண்டலமாகத் தெரிந்தது. நீண்டநேரமாக புகை மேற்கிளம்பியபடியே இருந்தது. மாலைச் சூரியன் மறைந்து இருள் பரவும் வரையில் புகைப்படலம் காற்றில் எழுந்து கொண்டேயிருந்தது.

பொழுது இருட்டி விட்டதால் அப்பாலே செல்ல முடியாமல் நாங்கள் பளைக்குத் திரும்பினோம். பளைக்கு அண்மையில் வரும்போது வழிநெடுக மக்களின் மகிழ்ச்சி ஆரவாரம்; வாகனச் சாரதிகளின் சந்தோசப் பிரவாகம். சிறு பிள்ளைகளின் ஆனந்தத்திற்கு அளவே இல்லாமல் இருந்தது.

சன்னதமாடிய பேய்கள் அழிவதில் யாருக்குத்தான் மகிழ்ச்சி இருக்காது.

Y - 8 விமானம் புலிகளால் சுட்டு வீழ்த்தப்பட்டது மட்டுமல்லாமல் விமானியின் சடலத்தையும், விமானத்தின் சிதைவுகளையும் புலிகள் மீட்டெடுத்தனர். மறு நாள் (திங்கள்) காலை 7.00 மணியளவில் நான் யாழ்ப்பாணம் வந்தபோது கோண்டாவில் பகுதியில் அவை பொதுமக்களின் பார்வைக்கு வைக்கப்பட்டிருந்தன.

புலிகளின் வேகத்தையும், செயற்திறனையும் நினைத்து வியந்தேன். -முதல் நாள், இராணுவ நடவடிக்கை தீவிரமாக நடந்து கொண்டிருக்கும் போது, அப்பகுதியிலிருந்து மாலை நேரம் சுட்டு வீழ்த்தப்பட்ட விமானத்தின் சிதைவுகளையும், விமானியின் சடலத்தையும் இவ்வளவு துரித கதியில் இரவிரவாக மீட்டெடுத்துள்ளனர். புலிகள் புலிகள்தான்.

வரலாற்றுச் சக்கரத்தைப் புரட்டக் கூடிய திறன் படைத்தவர்கள் 'விடுதலைப் புலிகள்' என்பதற்கு இந்தச் சம்பவம் மேலும் ஒரு சான்று.

கருணாகரன்

## மாணவர் அறிவியல் கழகம்

உலகம் இன்று விஞ்ஞான, தொழில்நுட்ப ரீதியாக பலமடங்கு வளர்ச்சியடைந்து செல்கின்றது. நாம் வளர்ச்சியடையவில்லை. குறிப்பாக தமிழீழ மாணவர்களின் கல்வித்தரம், விஞ்ஞான, தொழில் நுட்ப அறிவு அதிக வளர்ச்சியடையவில்லை. எனவே அறிவியல் துறையில் ஆர்வம்கொண்ட மாணவர்களை வளர்ப்பதற்கு மாணவர் அறிவியல் கழகம் தொழிற்படும்.

வளர்ந்து வரும் இளம் மாணவர்களை விஞ்ஞான, தொழில்நுட்ப அறிவு உடையவர்களாக வளர்க்க வேண்டும் என்பது எமது தேசியத் தலைவரின் பெருவிருப்பமாகும். இதனடிப்படையில் "மாணவர் அறிவியல் கழகம்" விடுதலைப் புலிகளின் மாணவர் அமைப்பின் துணை அமைப்பாக உருவெடுக்கப்படுகின்றது.

இவ் அடிப்படையில் கழகத்தின் அங்குரார்பணக் கூட்டம் அண்மையில் முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரி உப அதிபரின் தலைமையில் இடம்பெற்றது. விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் திரு. வே. அரவிந்தன் அவர்கள் மாணவர் அறிவியல் கழகத்தினை ஆரம்பித்து வைத்தார்.

மேலும் முள்ளிவளை, வற்றாப்பளை றோ. க. த., குமுழமுனை அ. த. க. க, செம்மலை மகாவித்தியாலயம், புதுக்குடியிருப்பு மகாவித்தியாலயம், முல்லைத்தீவு மகாவித்தியாலயம், நெடுங்கேணி மகாவித்தியாலயம் போன்ற பாடசாலைகளிலும் மாணவர் அறிவியல் கழகம் அமைக்கப்பட்டுள்ளது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# மாவீரர் நாளில் உறுதி எடுப்போம்

போராட்டக்களத்தில் உயிர் துறந்த வீரர்கள் வீராங்கனைகள் ஆகியோரை நினைவு கூர்ந்து, அவர்களது வீரச் செயல்களை நினைவில் மீட்டி, அவர்கள் விட்டுச் சென்ற பணியை தொடர்ந்து செய்வதற்கு உறுதி எடுக்கும் நோக்குடன் 'மாவீரர் தினம்' நினைவுகூரப்படுகின்றது. நாங்கள் ஒரே மக்கள், ஒரே தாயின் மக்கள், தமிழ் மக்கள், தமிழீழ மக்கள் என்ற உண்மையை ஆணித்தரமாக வெளிப்படுத்தவும் இம் மாவீரர் தினம் கொண்டாடப்படுகின்றது. யார் இந்த மாவீரர்கள்? அவர்கள் தங்கள் உயிரினும் மேலாக தங்கள் தாய் நாட்டை நேசித்தவர்கள். தங்கள் உயிரினும் மேலாக தங்கள் மக்களை நேசித்தவர்கள். எனவேதான் உயர்வான தங்கள் உயிரை, தாய் நாட்டின் விடுதலைக்காக விட்டு விடத் துணிந்தார்கள். எனவேதான் அவர்களை மாவீரர்கள் என்று அழைக்கிறோம்.

அவர்களுடைய வாழ்க்கையில், அவர்களுடைய செயல்களில், அவர்களுடைய மரணங்களில் மிகுந்த அர்த்தம் இருக்கிறது. ஆழ்ந்த பொருள் இருக்கிறது. அவர்கள் சாதாரண மனிதர்கள் அல்ல. அவர்களது போராட்ட வாழ்விலும், வீரமரணத்திலும் ஓர் ஆன்மீகம் உள்ளது. அவர்கள் தங்களைத் துறந்தவர்களாக இருந்துள்ளனர். தங்கள் சுயத்தை அழித்தவர்கள். தங்கள் ஆன்மாவை தமிழீழ தேசிய ஆன்மாவோடு இணைத்துக் கொண்டவர்கள். இவ்வாறு தமது ஆன்மாவை அகண்ட தமது மக்கள் சமூகத்தோடு, அதன் பரந்த ஆன்மாவோடு பிணைத்துக் கொண்டவர்கள். இத்தகு முக்தி நிலையில், தமிழ் அன்னை மீது கொண்ட பக்தி நிலையில், தமிழன்னைக்கு உயிர் கொடுப்பதற்காக தங்கள் இன்னுயிரைக் கொடுக்க முன்வந்தவர்களாக இம்மாவீரர்கள்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மாவீரர் இறுதி ஊர்வலம்

உள்ளனர். அவர்களது தற்கொடையினால் தமிழீழ வரலாறு எழுதப்படுகின்றது. அவர்களது உயிர்க் கொடை தமிழீழ வரலாற்றைச் செழுமை பெறச் செய்கின்றது. தற்கொடையாளர்களது வாழ்க்கை, தமிழீழ வரலாற்றோடு சங்கமம் ஆகின்றது. எனவே மாவீரர்களின் வரலாறு, தமிழீழ வரலாற்றின் வளர்ச்சியோடும், தொடர்ச்சியோடும் நீடிக்கிறது. தமிழீழ மண்ணைப்போல் சாகாவரம் பெற்றதாகின்றது.

எனவேதான் மாவீரர்களை சிரஞ்சீவிகள் என்கிறோம். அவர்களுக்கு அழிவில்லை. அவர்கள் இறந்த பின்னும் உயிர் வாழ்கிறார்கள். அவர்களுக்கு இருப்பும், இறப்பும் ஒன்றாக இருக்கின்றது. அவர்கள் மக்களின் மனங்களில் வாழ்கிறார்கள். எங்கள் மண்ணின் ஒவ்வொரு அணுத்துணிக்கையிலும் வாழ்கிறார்கள். எங்கள் காற்றில் வாழுகிறார்கள். சுழன்றடிக்கும் சண்டமாருதத்தில் வாழுகின்றார்கள். எங்கள் மண்ணிலே எறிக்கின்ற சூரியனின் ஒளிக் கற்றைகளில், பொழியும் பால் நிலவில், ஆர்ப்பரிக்கும் கடல் அலைகளில் வாழ்கின்றார்கள். எம்மண்ணில் சிவப்பாய் பூக்கும் மலர்களும் அவர்களே. அவர்களது தார்மீக கோபமும், வேகமும், சத்திய ஆவேசமும் நெருப்பாக உமிழ்கின்றது. அவர்கள் ஏற்றி வைத்த நெருப்பு, அவர்கள் தங்கள் உயிரினால் ஒளி கொடுத்த தீபம் எங்கள் மனங்களில் ஒளியைப் பாய்ச்ச வேண்டும். எங்கள் உணர்வுகளில் தீயைப் பற்றவைக்க வேண்டும். எங்களைத் தேசப்பற்று மிக்கவர்களாக மாற்ற வேண்டும். எங்களை நாங்களே உணர்ந்து கொண்டு, போராட்டம் என்னும் நெருப்பு மழையில் நனைபவர்களாக வேண்டும்.

இம் மாவீரர்கள், இம் மாமனிதர்கள் எப்பொழுது தோன்றுகிறார்கள்? ஒரு புரட்சிகர காலகட்டத்தில்தான் தோற்றம் தருகிறார்கள்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இப்போது எங்கள் வரலாற்றில் இது ஒரு போர்க் காலமாக உள்ளது. சகல துறைகளிலும் பெரும் மாற்றங்களை விளைவிக்கின்ற புரட்சிகரக் கால மாக உள்ளது. எமது வரலாற்றின் சக்கரம் மிக வும் வேகமாகச் சுழல்கின்ற காலம். வரலாற்றின் நியதிகள், விதிகள் வேகமாக இயங்குகின்ற காலம். இப் போராட்டக் காலத்தில்தான் உயர்ந்த மாமனிதர்கள் தோன்றுகிறார்கள். அதி மானிடர் கள் தோன்றுகிறார்கள். மனிதர்கள் தெய்வங்கள் ஆகின்றார்கள், தெய்வங்கள் மனிதர்களாகப் பிறக்கிறார்கள். இத்தகு கண்கண்ட தெய்வங்கள் தான் எமது மாவீரர்கள். இத்தகு மாவீரர் நாளில், அம் மாவீரர்களை நினைவு கூர்ந்து நாம் ஒரு பிரதிக்னை எடுத்துக் கொள்வோம். அடிமை என்றோ, அகதி என்றோ அடையா ளங்கள் எமக்கு உரியவையல்ல. சுதந்திரமான தமிழர்கள் நாம் என்பதை எங்கள் மனங்களில் ஏற்றுவோம். அந்த நிதர்சனத்தை நிலைநிறுத் துவதற்கு, அந்த உண்மையை உறுதிப்படுத்து வதற்கு நாம் உழைப்போம்; போராடுவோம் என்று சத்தியம் செய்து கொள்வோம்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**அன்புடன் எரிமலை ஆசிரியர் குழுவிற்கு,**

எரிமலை இதழை தொடர்ந்து வாசித்து வரும் வாசகர்களில் நானும் ஒருவன். எரிமலையின் ஒவ்வொரு இதழும், தமிழீழத்தின் செய்திகளுடன், புதிய மெருகுடன் வெளி வருவதையிட்டு ஆனந்தமடைகிறேன். கார்த்திகை மாத எரிமலை கண்டேன். கஸ்தூரி அவர்களின் மக்களைப் பிரிந்த துப்பாக்கிகள் என்ற சிறுகதை என் உள்ளத்தை நெருடியது. நமது தேசியத் தலைவர் பிரபாகரனை நேரில் காணவேண்டுமென தமிழீழ மூதாட்டி ஒருவர் எழுதிய கவிதையும் என் மனதை தொட்டு சென்றது. எரிமலை மென்மேலும் பல சிறப்பம்சங்களுடன் வெளிவர வேண்டுகிறேன்.

ச. சற்குணநாதன். ஜேர்மனி.

**அன்புடன் எரிமலை ஆசிரியர் குழுவிற்கு,**

என்னை மாற்றி எனது சிந்தனையை மாற்றி, எனக்கு நல்வழி கூறி, என்னை மெய்மறக்கச் செய்து மிகவும் எளிதாக என்னை தமிழீழம் இழுத்துச்சென்ற எரிமலையே, உன்னை எப்படி வாழ்த்துவதென்று எனக்குத் தெரியவில்லை. ஒவ்வொரு மாதமும் நீ என் கண்முன்னே வரும் போது நான் எவ்வளவு சந்தோசமாக எடுத்துப்படிப்பேன். உன்னில் எனக்கு ஏற்பட்ட பாசத்தினாலும் நீ கூறும் மாவீரர்களின் வரலாறுகளினாலும் எத்தனை இரவுகள் என் கண் அழுதிருக்கும்.

எளிதாக எடுத்தியம்பும் எரிமலையே
ஏடு புதுப்பிக்கும் எரிமலையே
எனக்கு நெஞ்சில் இருக்கும் பாரமோ
சற்றுக் குறை......
ஏக்கத்தால் நிறைந்த எனக்கு பாசமூட்ட
நீ இருக்கின்றாய்
சந்தோசம் மிகவும் சந்தோசம் எரிமலையே..
எரிமலையே நாங்களும் நாளை எரிமலையே
புதுயுகம் படைக்கும் எமது புலிகளை வாழ்த்துகின்றேன்.

ஞா. அனுசா, பிரான்ஸ்.

**எரிமலை ஆசிரியருக்கு!**

மாதம் தோறும் தளிர்விடும் எரிமலைக்கு எனது மனமாந்த நன்றிகள். இது போன்ற இன்னும் பல தீப்பொறிகளை தமிழ் மக்கள் மத்தியில் எழுதி தேச உணர்வையும் மண்ணின் மகிமையையும் விளக்கி நாம் தமிழர்கள் தான் அதிலும் தமிழீழத் தமிழர்கள்தான் எனும் உண்மையை பறை சாற்றவும்.

தனபாலசிங்கம். சதீஷ், பிரான்ஸ்.

**எரிமலை ஆசிரியருக்கு!**

கடல் கடந்து வாழ்வோர் மத்தியில் குறிப்பாக ஐரோப்பாவில் பல சஞ்சிகைகள் மூலம் எமது போராட்டத்திற்கு களங்கத்தை விளைவிக்கும் வகையில் பொய்களையும், பித்தலாட்டங்களையும் பரப்பி வரும் வேளைகளில் எரிமலையைப் படிக்கும் போது ஓர் அமைதியே ஏற்படுகின்றது.

பொன். குமார், ஜேர்மனி.

**கனம் ஆசிரியருக்கு!**

தங்களின் வெளியீடான எரிமலைப் பத்திரிகை கண்டு என் இதயம் குளிர்கின்றது. தங்களின் கார்த்திகை வெளியீட்டில் வெளியான 'ஒரு தோழனின் நினைவலைகளில் இவன்' என்னைக் கவர்ந்தது. அத்துடன் 'நினைவில் சில நிகழ்வுகள்' என் இதயத்தில் பதித்த வரலாறு. தொடர்ந்தும் தங்களின் எரிமலை வெளியீடு வெளிவர எனது வாழ்த்துக்கள்.

சு. ஞானேஸ்வரன், ஜேர்மனி




**ஆசிரியருக்கு!**

அந்நிய மண்ணில் இருக்கும் எங்களுக்கு சொந்த மண்ணையும் சுதந்திரத்தையும் எண்ணவைக்கும் எரிமலையே நீ நீடு வாழ்க.

குகன், இத்தாலி.

**அன்புடன் ஆசிரியர் குழுவுக்கு,**

வணக்கம், தங்கள் எரிமலை ஏட்டின் வாசகர்களில் நானும் ஒருவன். எரிமலையின் சிறப்புத் தன்மையைக் கண்டு மனம் மகிழ்கின்றேன்.

எங்கள் தமிழ்
தமிழே எங்கள் உயிரே
தரணியில் எவரழிப்பார் உனை
சிரம் அறுத்து பகை அழிப்போம்.
தாய் இட்ட கடமை மறவாது
போரிட்டு வெல்வோம் புலியாய்
புண்பட்டு நம்முடல் விடுப்பினும்
புதுத்தெம்போடு வருவார் இளையோர்.

ம. வரதன், ஜேர்மனி.

**அன்புடன் ஆசிரியருக்கு!**

சுதந்திரம் பிறக்குது என்றொரு சொல் வந்தென்
காதில் ஒலிக்குதடா
மலர்ந்திடும் ஈழத்தை மனக் கண்ணில் பார்க்கையில்
கண்கள் பனிக்குதடா
கனவுகள் பலிக்குது
கவலையை இனி விடு கைகள் இருக்குதடா
ஒரு தலைமுறை எழுந்தது தமிழினம் நிமிர்ந்தது
தடைகள் உடைந்ததடா விலங்குகள் தெறிக்குது
விடுதலை பிறக்குது
புலி எனப் புறப்படடா
விதை ஒன்று போட்டது
விருட்சமாய் ஆனது
இனி கனி கொய்யும் காலமடா.

ஜெகதீஸ்வரி இராஜரட்ணம்.

**எரிமலை ஆசிரியருக்கு!**

போராட்டத்தின் நிதர்சனங்களை அதன்பரிணாம வளர்ச்சியை வெளிநாடு வாழ் தமிழ் மக்களின் கண்முன்னே நிறுத்தும் எரிமலையே மென்மேலும் சிறப்புற வாழ்த்துகிறேன்.

சந்திரன், பாரிஸ்.

**அன்புடன் எரிமலை வாசகர்கட்கு!**

நீங்கள் காட்டி வரும் அக்கறையும், உளப்பூர்வமான ஆதரவும் உங்கள் ஆக்கபூர்வமான விமர்சனமும் எங்களை மென்மேலும் உற்சாகப்படுத்துகின்றன. வாசகர்கள், வாசகர்கள் என்ற நிலையில் இருந்து விடுபட்டு படைப்பாளிகளாக உருவாகி வருவதையும் காணமுடிகின்றது. இந்நிகழ்வு மிகவும் ஆரோக்கியமானதே. மேலும் எரிமலையின் வளர்ச்சியிலும் உங்கள் ஆத்ம வளர்ச்சியிலும் அக்கறை கொள்வீர்களாக.

மேலும் எரிமலை பற்றிய ஒன்றுகூடல் பாரிஸ் நகரில் எதிர்வரும் 6-12-1992 அன்று நடைபெற உள்ளது. இவ் ஒன்றுகூடலில் ஆர்வமுள்ள எரிமலை வாசகர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு வேண்டுகிறோம்.

தொடர்புகட்கு:- 43 58 11 42

- ஆசிரியர் குழு -

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பண்டைத்தமிழரின் வீர வாழ்க்கை

**போர் எனில் பூரிக்கும் தோள் வலிமை,
போர்க்களத்தில் எதிரியைக் காண்பதில் மகிழ்ச்சி,
எதிரியை எதிர்த்து வீரச்சாவை அடைவதில் பெருவிருப்பு,
தம் மண்ணுக்காக தம்மையே ஈகம் செய்யும் மனப்பாங்கு**

விலங்குகள், காட்டுவாசிகள், பண்பாடடைந்த மக்கள் என்ற பல் வேறுபட்டநிலைகளின் வளர்ச்சிப் போக்கில் காலத்திற்குக் காலம் போர்கள் வேறுபட்ட வடிவங்களில் இடம்பெற்றே வந்துள்ளன. மக்களின் பண்பாட்டு வளர்ச்சிக்கேற்ப போர்க்கருவிகளும், போர் முறைகளும் போரின் குறிக்கோள்களும் மாற்றம் பெற்றே வரலாயின. மக்களாட்சி பெரிதும் இடம் பெறுகின்ற இக்காலகட்டத்திலே போர்கருவி உற்பத்தியும் போர்களும் வேண்டப்படாதனவாக இருந்தபோதிலும், இவ்விருசெயல்களும் தொடர்ந்து கொண்டே இருக்கின்றன. பண்டைய அரசியல் அமைப்பு முறையில் போர்கள் தவிர்க்க முடியாதனவாகவும், களிப்புத்தரும் மறச்செயல்களாகவும் அமையலாயின. அக்கால நிலையில், அரச ஆணைக்குட்பட்டனவாகவும் மக்கள் நிலையாக வாழ்வதற்கு இன்றியமையாத ஒரு நடைமுறயாகவும் போர்கள் காணப்பட்டன.

போரினால் பெற்ற சாதனைகளே ஒரு நாட்டின் அரசியல் பலத்தையும் பண்பாட்டு வளர்ச்சியையும் உணர்ந்து கொள்வதற்குரிய அளவுகோல்களாக அமைந்து விடுகின்றன. இன்றைய காலகட்டத்தில் உலகில் எந்த நாடுபெருமளவு அணுக்குண்டுகளையும் போர்விமானங்களையும் கொண்டுள்ளதோ அந்நாடு உலக அரசியல் அரங்கில் முதன்மையான இடத்தைப் பெறுகின்றமையைக் காண்கின்றோம். போர் அனைவராலும் வெறுக்கப்பட்ட போதிலும் உலகில் எந்த அரசும் இராணுவ அமைப்பின்றித் தம் அரசியலை, நடத்தியதே இல்லை. அன்றியும் அனைத்து நாடுகளினது தேசிய தின விழாக்களிலே முதன்மை நிகழ்ச்சியாக அவ்வந் நாட்டுப்படைப்பலத்தை வெளிக்காட்டும் அணிவகுப்புகள் இடம் பெறுதல் கண்கூடு. எனவே போர் என்பது மனித பண்பாட்டு வரலாற்றிலே இடம்பெற்றுவந்த மிக இன்றியமையாத ஒரு நிகழ்ச்சி என்பது உறுதியாகின்றது.

பண்டைத் தமிழர் பண்பாட்டிலே இடம் பெற்ற போர்முறைகள், போர்முறைக் கோட்பாடுகள், போர்க் கருவிகள், காவல் அரண்கள், கோட்டைகள் முதலியன பற்றி ஆராயும்போது, அதனூடாக அக்கால மக்களின் பண்பாட்டுக் கோலங்களும் துலங்கவே செய்கின்றன.

சேரன் செங்குட்டுவன், சோழன் திருமாவளவன், இமயவரம்பன் நெடுஞ்செழியன் என்னும் மூன்று மன்னர்களும் தமிழ் நாட்டினின்று வடக்கே இமயம்வரை படை எடுத்துச் சென்று, பகைமன்னரை வென்று வெற்றியோடு திரும்பிய செய்திகளைப் பதிற்றுப்பத்து, சிலப்பதிகாரம் ஏன்பன கூறுகின்றன. இது போன்றே கடல்பிறக் கோட்டிய செங்குட்டுவன் தன் கடற்படை மூலம் பகைவரது கடற்படைகளைத் தோல்வியுறச் செய்த வீரச் செய்திகளும் பதிற்றுப்பத்திற் காணப்படுகின்றன. இவ்விரு செய்திகளும் அக்கால மக்களின் படை வலிமையையும் பொருளாதார மேம்பாட்டையும் உணர்த்துகின்றன.

சங்ககாலத் தமிழ் மன்னர்கள் தம் நாட்டின் எல்லையுட் பகைவர் எளிதில் நுழைந்திடாவண்ணம் காவல் அரண்களை அமைத்திருதனர். அவை இயற்கை அரண்களாகவும், செயற்கை அரண்களாகவும் அமையலாயின. தமிழகத்தைப் பொறுத்தவரையில் வடக்கே விந்தியமலை அரண்களும் ஏனைய மூன்றுபகுதிகளும் கடல் அரண்களையும் கொண்டிருந்தமையால் வெளிநாட்டுப்படை எடுப்புக்களால் பெரிதும் பாதிப்படையவில்லை. முடியுடை மூவேந்தர் காலத்தில் சேர, சோழ பாண்டியரில் ஒருவர் தலைமை அரசனாக மேலாண்மை செலுத்த முற்பட்ட காலங்களில் இவர்களிடையே பெரும் போர்கள் நடைபெற்றிருக்கின்றன. இதனால் ஒவ்வொரு மன்னர்களும் தன்னாட்டெல்லைகளிலும், நாட்டினுள்ளும் காவல் அரண்களைப் பலப்படுத்தி வைத்திருந்தனர் என்பதற்கு இலக்கிய சான்றுகளுள. அரண்கள் தோறும் தற்காப்புப் படைகளும் பாசறைகளில் போர்க்களம் செல்லும் படையணிகளும் அவர்களிடம் இருந்தன.

இப்படைகள் காலாட்படை, குதிரைப்படை, யானைப்படை, தேர்ப்படை என நான்கு பிரிவினராக அமைக்கப்பட்டிருந்தன.

தமிழத் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நாற்படையுடன் படை எடுத்து வரும் அரசனை மாற்றரசன் தானும் அவ்வாறே நாற்படைகளுடன் சென்று எதிர்த்துப் போரிட வேண்டிய நிலையைத் தொல்காப்பியம் புறத்திணையில் விளக்குகிறது. காலாட்படைப் பிரிவில் வேற்படை, விற்படை, வாட்படை என்ற மூன்று பிரிவுகள் இருந்தன. மற்போர் புரிவோரும் இருந்தனர் என்பதை புறநானூறு 80 ஆம் செய்யுள் சான்று படுத்துகின்றது.

போர்வீரர்கள் மழவர், மறவர், பொருளர், பெரும்செய் ஆடவர், வில்லோர், எயினர், கணையோர் என்னும் சிறப்புப் பெயர்களால் வழங்கப்படலாயினர்.

போர் எனில் பூரிக்கும் தோள்வலிமை கொண்டவர்களாகவும், போர்களத்தில் எதிரியைக் காண்பதில் மகிழ்சி கொண்டவர்களாகவும், சங்ககால மறவர்கள் காணப்பட்டனர். எதிரிக்குப் பயந்து ஓடுவதைவிட்டு, எதிர்த்து நின்று போரிட்டு வீரச்சாவை அடைவதையே விரும்பினர். பகை மன்னனின் படைகளை அழித்து, வெற்றியுடன் திரும்புதலே தமது கடமை என்ற உணர்வுடன் அக்கால மறவர்கள் திகழ்ந்தனர், என்பதை, "ஒளிறுவாள் அருஞ்சமம் முருக்கிக் களிறு எறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே" என சாந்தையார் பாடுகிறார். தம் மண்ணுக்காகத் தம்மையே ஈகம் செய்யும் மனப்பாங்கும், வீரம் செறிந்தமான உணர்வும், அஞ்சா நெஞ்சமும் நாட்டின் புகழ் கருதி தம் உயிரையே தற் கொடை புரியும் உறுதியும் கொண்டவர்களாக அக்காலத் தமிழ் மறவர்கள் திகழ்ந்தார்கள் என்பதைப் புறநானூறு கூறுகிறது. மேலும் தம் நாட்டுக்குப் பேரிடர் அல்லது பழி ஏற்படக் கூடிய செய்கைகளுக்கு உடந்தையாக இருப்பதால் பெரும் பேறு கிடைப்பினும், இழி செயல்களை கனவிலும் நினைத்துப் பார்க்காத செயல் மறவர்களாக சங்ககால வீரர்கள் வாழ்ந்திருக்கிறார்கள். இதனை இளம்வழுதி என்ற புலவர் பின்வரும் வரிகளில் புலப்படுத்துவார்.

"துஞ்சலும் இலர்பிறர் அஞ்சுவது அஞ்சிப் புகழ் எனின் உயிருங் கொடுக்குவர் பழியெனின் உலகுடன் பெறினும் கொள்ளலர்".
(புறம்-182. 4. 6)

பண்டைத் தமிழரின் படை அணிகளில் யானைப் படை சிறப்பு இயல்பு கொண்டதாகும். யானைப்படை அணியில் யானை எண்ணிக்கையைப் பெருக்கிக் கொள்வதில் அரசர்கள் அக்கறை கொண்டிருந்தனர். பல்யானை வேல் கெழுகுட்டுவன் என்ற சேர மன்னன் பெரும் யானைப்படை வைத்திருந்தான் எனப் பதிற்றுப் பத்து என்ற நூல் செப்புகிறது. இன்றைய தரைப் படைப் போர் முறைகளில் கனரக வாகனங்களில் ஒன்றான "டாங்கிகள்" அரண்களை உடைத்து முன்னேறப் பயன்படுவது போன்று, பண்டைத் தமிழர் முறையில், பகை மன்னனின் மிக்க உறுதி வாய்ந்த கோட்டைக் கதவுகளை உடைத்து கோட்டையினுள் படைகள் புகுவதற்கு யானைப் படைகள் பெரிதும் பயன்படுத்தப்பட்டன. யானைக் கொம்புகளின் நுனிகளில் இரும்பு வளையங்கள் பொருத்தப்பட்டன. அன்றியும் பகை நாட்டு நீர்த்தேக்க அணைக்கட்டுக்களையும் யானைப் படை உடைத்ததாகவும் கூறப்படுகிறது. யானைகள் தம் வாயில் பெருங்கற்களைக் கவ்விச் சென்று தொலைவில் நிற்கும் எதிரிகளின் படையணி மீது துதிக்கையால் கற்களை எடுத்து வீசித் தாக்கும் போர் முறை பற்றியும் சங்க இலக்கியங்களில் பேசப்படுகின்றது. (புறம் 30)

"யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்று கணியன் பூங்குன்றனார் என்னும் புலவர் சங்க காலத்தில் அமைதிக் குரல் எழுப்பிய போதிலும், சங்ககால மன்னரின் ஆட்சியியலில் போர் முரசம் ஓயவில்லை. மக்களும் மன்னரும் போரை வெறுத்ததாகக் கூறப்படவில்லை. போரில் மறச் செயல் புரிந்தோரை மன்னரும் மக்களும் போற்றினர். போர் முறைகள் நன்கு திட்டமிடப்பட்டிருந்தன. வெட்சிப் போர், தும்பைப்போர், வாகைப்போர் எனப் போர் முறைகள் வகுக்கப்பட்டிருந்தன.

படை அமைப்பு, படைஎடுத்துச் செல்லும் முறைமை, போர் அறிவிப்பு, பாசறை அமைப்பு, போர், போர்க்கள உதவியாளர், வெற்றிக்களிப்பு முதலான விடயங்கள் திட்டமிட்டு வகுக்கப்பட்டிருந்தன. ஒவ்வொரு நாட்டிலும் தற்காப்புக் காவல் அரண்கள், கோட்டைகள், இயற்கை அரண்கள் என்பன பேணப்பட்டன. தாமே இயங்கும் படைக்கலப் பொறிகளும் காவல் அரண்களில் பொருத்தப்பட்டிருந்தன. இத்தகு போர் முறைகள் செம்மையடைவதற்குப் பல நூற்றாண்டுகள் எடுத்திருக்கலாம். இச் செய்திகள் தமிழர் பண்பாட்டின் வளர்ச்சிப் போக்கின் நுட்பங்களை எடுத்துக் காட்டும் ஒரு பகுதியாகும்.

## படையினர் தலைமறைவு

ஸ்ரீலங்கா அரசு மேற்கொண்ட சகல நடவடிக்கைகளும் தோல்வியடைந்துள்ளன. இனி மேல் என்ன நடவடிக்கை எடுப்பது என்று தெரியாமல் இருக்கிறார்கள். இதுவரைக்கும் 12 ஆயிரத்துக்கும் மேற்பட்ட இராணுவத்தினர் தமது வேலையை விட்டு ஓடியுள்ளனர். கட்டாயமாக பொலீஸ்காரர்களையும் வடபகுதிக்கு அனுப்பவேண்டிய சூழ்நிலை அரசாங்கத்திற்கு உள்ளது. கட்டாயமாக இராணுவத்திற்கு ஆள் சேர்க்கும் சூழ்நிலையும் தோன்றியுள்ளது. அவர்கள் ஆட்சேர்ப்புக்கு கூப்பிடும்போது 10 அல்லது 20 பேர்தான் வருகின்ற சூழ்நிலை தோன்றியுள்ளது. இப்படியான சூழ்நிலையால் ஸ்ரீலங்கா அரசு தன் நிலப்பகுதிகளின் எல்லைகளையே காப்பாற்ற முடியாத நிலை காலப் போக்கில் ஏற்படும் என அரசியல் அவதானிகள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# விழுதுகள்

கல்வயல் வே.குமாரசாமி

மந்தாரம் போட்டதால் மழை பெய்யும்
என்று இருந்தோம்.
வந்த சிறு தூற்றலோடு வானம் வெளிறிப் போய்
எந்த அசுமாத்தமும் இல்லாது
மண் மணக்கும் அந்திவரை;
மீண்டும் அடி நிலத்தில் வைக்கேலா(து)
வெந்து விடும் பாதம்.
வெளியில் நடந்தாலோ?

நேற்று வரை தோண்டி
நிலமடந்தை காட்டுகிற ஊற்றுக்கண் கொண்டே
உயிர்வாழ வைத்த பயிர்
நாற்றுப் பதியனிலும்
பாத்தியிலே பூப் பிஞ்சாய்
காற்றோடு சாய்ஞ்சு நிமிர்ந்த கதிர்
முற்றாப் பாற்பருவம்
எல்லாம் ஏன் பஞ்சடைச்சாற் போலிருக்கு?

கட்டுக் குலையாமல் காய் சுமந்த தென்னைகள்
ஏன் வட்டுதிர்ந்து
இன்றைக்கு வாழ்விழந்த பெண்களைப் போல்
மட்டை உரிந்து விழ வாடி மடிகிறது?
'நிலாவரை நீர்மட்டம் கீழிறங்கிப் போச்சாம்'
'பலாலி வரை பனையும் படத் தொடங்கிவிட்டதாம்'
என்ற கதைகள் அடிபடும்
என்றாலும்;
என்றும் உடம்பாலே குருதி மழை பொழிய
நின்றுழைப்போம்
ஈழத்தை நேசிக்கும், நாங்கள் எல்லாம்
அக்கரையில்
எம்மை அடிமைப் படுத்த வந்தோர்
தக்காளிக் கும்பியாய்
தலை கால் தசை சிதறக்
கொத்த வைத்தார் காகம்
நம் குஞ்சுப் பரம்பரைகள்.

கத்துகிறார் வாய்கிழிய ஏதோ?
கருணை வெள்ளம் அத்தனையும்
தம்மிடமே ஊற்றெடுப்பதாய் அந்தோ!
'மழலைப் பட்டாளம் மடைப் பெடியள்'
என்றவரேன் அழாக்குறையாய் இத்தனை நாள்
ஏனாம் அலட்டுறார்?

மந்தாரம் போட்டால்
மழைவரும் என்றிரோம்
சொந்தக் கரத்தாலே சொர்க்க சுதந்திரத்தை
இந்த தமிழீழ மண்ணிலே
மரமாக்க
வெந்து கரைவோம் விழுதுவிடும் வரைக்கும்
சந்ததியாய்ச் செய்வோம் சமர்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# ஆனையிறவு ஆழப்பதிந்ததொரு காலச்சுவடு



(சென்ற இதழ் தொடர்ச்சி)

— சதா —

விடுதலைப் புலிகளால் கொக்காவில் இராணுவ முகாம் வெற்றிகொள்ளப்பட்ட போது கிளிநொச்சியில் பொலிஸ் - இராணுவக் கூட்டு முகாமின் தலைவிதி கேள்விக்குரியதாகியது. முற்றுகைக்குள்ளான கிளிநொச்சி முகாமைவிட்டு வெளியேறிய இராணுவம் ஆனையிறவுக்கு வந்து உப்பளப் பகுதியில் குடிகொண்டது. உப்பு விளையும் தளம் யுத்தத்திற்கான களமாயிற்று. ஏறக்குறைய 35 ஏக்கரில் இரண்டு மைல் நீளத்திற்கு விஸ்தரிக்கப்பட்ட இந்த முகாம்களும் முற்றுகைக்குள்ளாகி அடிக்கடி புலிகளின் தாக்குதல்களுக்குள்ளாகி வந்தன.

இராணுவத்தின் ஒவ்வொரு அசைவையும் தடுக்க இலக்கு வைத்தபடி நின்றனர் போராளிகள். சிங்களப் படையை அகற்றுவதற்காக இரவும் பகலும் எந்நாளும் சோராது கடுமையாக உழைத்தனர். அமைக்கப்பட்ட காப்பரண்களும், தாக்குதல் நிலைகளும் மாரிமழையில் போராளிகளுக்கு இன்னும் வேலைப்பழுவைத் தந்தன. நீர் நிரம்பி இடிந்து விழ விழ புதிது புதிதாக நிலைகளை அமைக்க வேண்டியதாயிருந்தது.

போராளிகள் சிரமங்களுடன் கடுமையாகப் போராடினார்கள். இராணுவம் தாக்குதல் நடத்திக்கொண்டேயிருந்தது. இடையறாத முயற்சிகளினால் தரைமேல் அரண்களும், வேறு தயாரிப்பு நிலைகளும் போடப்பட்டு முற்றுகையை இன்னும் இறுக்கினர் போராளிகள்.

இராணுவம் அசைய முடியாத முற்றுகையில் சிக்குண்டு போயிருக்கையிலும் தனது இரும்புக் குழாய்களில் தீயைக் கக்கிக் கொண்டேயிருந்தது. இன்னல் புரிந்து வந்த இந்தச் சிங்களப் பேய்களை அழித்து, இந்த நிலத்தின் தடைப்பட்டிருந்த பகுதியை மீட்க, சூழலை அச்சமூட்டிக் கொண்டிருக்கும் பூதங்களை ஒழிப்பதற்காக முகாமை முற்றாகத் தகர்க்கும் தாக்குதல் இவ்வருடம் ஆடி மாதம் 10 திகதி ஆரம்பமானது.

விடுதலைப்புலிகளின் திறனாலும் உழைப்பாலும் உருவாக்கப்பட்ட கனரக வாகனங்கள் ஒரு யானைப்படைபோல முகாமைச் சூழ்ந்தன. பசிலன் தொடக்கம் சிறுரகப் பீரங்கிகள் வரை இடிபோல முழங்கிக் கொண்டிருந்தன. போராளிகள் முகாமைச் சூழவும் அணிவகுத்து நின்றனர். வெளியிலும் சதுப்பு நிலங்களிலும், சிறுமொண்டிப் பற்றைக் காடுகளிலும் தேசக் கடமை புரிந்தனர். முதல் நாள் போர் புலிகளுக்கு வெற்றியை கையில் தந்தது. முகாமின் சில பகுதிகள் போராளிகளினால் கைப்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பற்றப்பட்டன. சிங்கள இராணுவம் மூச்சுத்திணறியது. சிறீலங்கா அரசு முகாமைக் காத்துக் கொள்வதற்காக தனது முழுப்பலத்தைப் பாவித்தும் இராணுவம் ஈடாடத் தொடங்கியது. புலிகளின் விமான எதிர்ப்புப் பீரங்கிகள் முழங்கின. தீயை உமிழ்ந்து விமானங்களை எரித்துவிடத் துடித்தன அவை. 5000 அடிக்கப்பாலே அடையாளம் தெரியாமல் விமானங்கள் தடுமாறின. அரசின் விமானப் படையும் பலமிழந்து போய்விட்டதென சிறீலங்கா அரசின் மூத்த இராணுவ அதிகாரிகளே ஒப்புக்கொண்டனர்.

புலிகள் முகாமைத் தொடர்ந்து தாக்கிக் கொண்டிருந்தனர். இராணுவம் இறுகிப் போயிருந்தாலும் எதிர்த்துக் கொண்டேயிருந்தது. மழைபோல சன்னங்கள் பொழிந்தன. பீரங்கி ஏறிகணைகள் பூமியைப் பிளந்து கொண்டிருந்தன. விடுதலைப் புலிகள் சளைக்கவில்லை. சன்னங்களுக்கும் இடிபோன்ற வெடிகளுக்கும் பதில் கொடுத்துக்கொண்டே முன்னேறினார்கள். உவர் பிசுபிசுக்கும் நிலம் இரத்தத்தில் தோய்ந்து சிவந்தது.

மட்டுப்படுத்தப்பட்ட வளங்களோடு எதிரியை எதிர்கொண்ட புலிகளின் உறுதியான நடவடிக்கைகளின் விளைவாக பலமிழந்த சிங்கள இராணுவம், முகாமினுள்ளே சிக்குண்ட தனது சகாக்களை மீட்பதற்காக கடற்படையுடன் சேர்ந்து முயற்சித்தது. இதனால் கடற்படை மூலம் ஆனையிறவின் வடகிழக்குத் திசையிலுள்ள வெற்றிலைக்கேணி - கட்டைக்காட்டுக் கடற்கரைப் பிரதேசத்தில் இராணுவத்தை இறக்கி புலிகளின் பலத்த எதிர்ப்புகளின் மத்தியில் ஆனையிறவை நோக்கி நகர்த்த முற்பட்டது. இப்போது பிரதான யுத்த மையம் ஆனையிறவில் இருந்து கட்டைக்காடு வெற்றிலைக்கேணிப் பகுதிக்கு நகர்ந்தது.

விடுதலைப் புலிகள் தமிழ் மக்களின் பாதுகாப்பு படையாக இருக்கும் அதேவேளையில், தேசிய விடுதலை இராணுவமாகவும் இரு பரிமாணங்களையுடைய தமிழர் படையாக விளங்கி வருகிறார்கள். தமிழ் மக்களின் இந்தத் தேசிய விடுதலை இராணுவம் முதன் முறையாக ஒரு மரபுவழி இராணுவமாக மாற்றம் பெற்று சிங்கள ஆக்கிரமிப்பு இராணுவத்துடன் முதன் முதலாக நேருக்கு நேர் பெரும் யுத்தத்தில் இறங்கியது.

சுடும் மணலில் கடும் போர் மூண்டது. பாலைவனம் போன்ற மணல் வெளிப்பிரதேசத்தின் வெட்டவெளியெங்கும் துப்பாக்கி ரவைகளாலும், பீரங்கிக் குண்டுகளாலும் நிறைந்தது. அங்கு வீசிய காற்றின் ஒவ்வொரு அசைவிலும் கந்தக வெடியின் நெடியே கலந்திருந்தது. வானத்தில் வட்டமிட்ட இராட்சத சீனப் பறவைகள் பாரிய வெடிகுண்டுகளை வீசின. மாரிகாலத்து இதமான சுவாத்திய சூழலைச் சுவாசிப்பதற்காக ரஷ்யப் பறவைகள் வந்தமரும் அமைவிடங்கள் எல்லாம் சீனத்துப்பறவைகள் போட்ட சிறீலங்காவின் குண்டுகளால் சிதைந்து போயின. சிறுபற்றைக் காடுகள் தீயில் கருகின. யுத்த களத்தை அண்டிய பிரதேசத்து மக்கள் நிர்க்கதியாகினர்.

"வெற்றிலைக்கேணிப் பகுதியில் வந்திறங்கிய ஒப்பரேசன் பலவகேயவின் 2000 இராணுவம் 48 மணி

## உன்னி உன்னி..

உன்னி உன்னி உழக்குகிறாய்
ஊர் ஊராகச் சுற்றுகிறாய்
சின்னப் பெண்ணே உன்னால நம்
தேசம் நிமிரப் போகிறது!

உன்னைச் சுமந்து பெற்றாளை
உயிராய் கருதி வளர்த்தாளை
பின்னால் இருத்தி சைக்கிளிலே
பிய்த்துக்கொண்டு போகின்றாய்!

அண்ணன் அயல் நாடு அலைகின்றான்
அப்பன் ஷெல்லால் அடியுண்டான்.
பெண்ணே நீயோ இங்கிருந்து
பெரிய சுமைகள் சுமக்கின்றாய்.

என்ன என்ன அவசரமோ!
என்ன என்ன நெருக்கடியோ!
உன்னி உன்னி உழக்குகிறாய்
ஓ, பெண்ணே நீ வாழ்க!

சின்னக் காலின் வலுவெல்லாம்
சேர்த்து வலித்தே உழக்குகிற
உன்னைக் காணும் போதெல்லாம்
உள்ளம் பாகாய் உருகுதடி!

உன்னி உன்னி உழக்குகிறாய்
ஊர் ஊராகச் சுற்றுகிறாய்
உன்னைத் தெருவில் காண்கையில் - என்
உயிரே சிலித்துப் போகுதடி!

- சோ.பத்மநாதன். -

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நேரத்தில் ஆனையிறவு முகாமைச் சென்றடைந்துவிடும்" என யாழ் மாவட்ட சிறீலங்கா இராணுவத் தளபதி விஜயவிமலரட்ண கூறினார். புயல் வேகத்தில் புறப்படும் என்று கூறிய இராணுவ அணிநத்தை வேகத்தில் கூட நகரமுடியாமல் போயிற்று. இராணுவத்தின் நகர்வை முறியடிக்க விடுதலைப்புலிகள் மேற்கொண்ட கடும் தாக்குதலால் சிங்களப் படையணிகள் சிதறின. களத்தில் மாண்டோரையும் காயப்பட்டோரையும் மாற்றீடு செய்தால் மட்டும் போதாதென்று உளவியல் ரீதியாகப் பின்னடைந்துபோன ஒரு அணியையுமே மாற்றி அமைக்க வேண்டிய தேவை மாற்றான் படைத்தளபதிக்கு ஏற்பட்டது. இவற்றுடன் சிறீலங்கா இராணுவத் தளபதி ஹமில்டன் வணசிங்கா நேரடியாகக் களத்திற்கு வந்து திட்டம் வகுத்து, மேலும் படையணிகளையும் களத்திற்கு வரவழைத்து போரில் ஈடுபடுத்தினார். இந்தப் போர் நடத்தைக்கு 'ஒப்பரேசன் பலவேகய' என்ற பெயரும் சூட்டப்பட்டது. சிங்களப் படையணி வடபிராந்தியத் தளபதி கொப்பேகடுவவின் தலைமையில் போரிட்டது.

போரின் சூடு இரண்டு நாட்கள் சற்றுத் தணிந்த ஓய்வில் படையணிகளை இரு மடங்காக அதிகரித்துக்கொண்டு "போருக்கெல்லாம் தாய்ப்போர்" என முரசறைந்து முன்னேற முயன்ற எதிரி மூக்குடைந்தான்.

இதனால் கட்டைக்காடு எதிரிக்கு சுடுகாடானது. மேலும் இரண்டு படையணிகள் இறக்கப்பட்டன. இப்போது படையின் எண்ணிக்கை 8000 ஆகியது. பெருகிய துருப்புக்கள் மெல்ல மெல்ல புல்லாவெளிவரை நகர்ந்தன. இதன் போது எமது தேசிய விடுதலைப் போராட்டத்தின் முன்னோடிப் போராளியான லெப். சீலனின் நினைவுப் பெயரில் அமைக்கப்பட்ட 'சார்ள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணி' களத்தில் இறங்கியது. எதிரியை கலங்க அடித்தது.

சிங்கள இராணுவச் சங்கிலியின் இடையில் ஊடுருவிப் புகுந்து உக்கிரமாய்த் தாக்குதல் நடத்தியது. இராணுவம் சின்னாபின்னமாகச் சிதறியது. சகபாடிகளின் சடலங்களை அந்தந்த இடங்களிலேயே விட்டுச் சிங்களப்படை ஓடித்தப்பியது. எதிரி கொண்டு வந்த ஆயுதங்கள் பல எங்களுக்குச் சொந்தமாயின.

சீர்குலைந்த சிங்களப் படையணியை மீண்டும் புனரமைத்து நிமிர்த்தி நிறுத்த வேண்டிய தேவை இராணுவத்திற்கு ஏற்பட்டது. மீண்டும் கடும்போர் மூண்டது. அகோர விமானத் தாக்குதல் களினூடே கண்முன்னே "கங்கு" மட்டையால் காப்பரண்கள் அமைத்து எதிரியின் கடுமையான தாக்குதலுக்கு முகம் கொடுத்துப் போராளிகள் போராடினார்கள். இராணுவம் கடல்வழியாகத் தரையிறக்கிய கனரக வாகனங்கள் பல புலிகளால் நாசமாக்கப்பட்டன.

எங்கும் புகைமண்டலமும் வெடி அதிர்வோசையுமே பரவியிருந்தன. அந்தப் பிரதேசத்து நிலம் இரத்தத்தில் தோய்ந்தது. தாக்குதல்களில் சிதறிய தசைத் துண்டங்கள் இரத்தக் கட்டிகட்டியாக கண்டவரின் நெஞ்சை உருக்கியது. புலிகள் போரிட்டுக் கொண்டேயிருந்தார்கள். நாட்கணக்காக வாரக்கணக்காக ஓயாது போர் நிகழ்ந்துகொண்டிருந்தது. அந்தப் புழுதி மண்ணிலும் நம் புதல்வர்கள் விடுதலைப் பயிருக்கு இரத்தத்தால் ஈரம் பாய்ச்சிக் கொண்டேயிருந்தார்கள்.

இவைகளை அவதானித்த சிங்களப் போராசிரியர் ஒருவர் 'இப்போது இலங்கையில் இரண்டு இராணுவம் இருக்கின்றது' என்றார். இதற்குப் பதிலளித்த போராளிகள் "இரண்டு இராணுவம் உண்டு என்பது உண்மை தான். ஒரு இராணுவத்திற்கு நாடு உண்டு. மற்றையதற்கு நாடு

## குறுக்கெழுத்துப் போட்டி இல: 3 விடைகள்

**இடமிருந்து வலம்:**

1. செல்லக்கிளி
2. வோட்டர்ஜெற்
3. குமரப்பா
4. சாவகச்சேரி
5. நெல்சன்மண்டேலா
7. சகடை
8. பட்டினிச்சாவை
10. பாட்டாளி

**மேலிருந்து கீழ்:**

4. சார்ள்ஸ்அன்ரனி
5. நெய்தல்
6. கலாச்சார
9. பூநகரி
11. யாழ்கோட்டையில்

முதலாம் இடம்

S. சுதா
TALBODEN STR - 17,
3098, SCHLIERN - BERN,
SWISS.

இரண்டாம் இடம்

M. சுரேஷ்குமார்
HOCH STR - 12,
4176 SONSBECK,
GERMANY.

மூன்றாம் இடம்

திலீபன். செல்வகுமாரன்
MARIENBURGERWEG - 34,
7170 SCHWABISCHHALL,
GERMANY.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


இல்லை. அதற்காகப் போரிடுகிறது" என்று உண்மையை விளக்கினார்கள்.

போராட்டம் வெற்றி பெறுவதற்கு மக்கள் ஆதரவு நிறையத்தேவை. ஆனையிறவுப் போரில் மக்கள் ஆதரவு கிடைத்தது. அந்த ஆதரவு உணவு, மருத்துவ உதவி, போர்களத்து பின் பல உதவிகள் என்ற எல்லையுடன் நின்றுகொண்டது. ஒரு போராளி தனது அத்தியாவசிய தேவைகளையெல்லாம் நிறைவேற்ற, பிரதியீடு செய்ய ஆட்பலமில்லாமல் இருந்தது. இந்த நிலையால் தொடர்ச்சியாகப் பல போராளிகள் பல நாட்கள் குளிக்க முடியவில்லை. உண்பதற்குக் கூட நேரமில்லாமல் இருந்தது. ஓய்வதற்கும் நித்திரை செய்வதற்கும் ஓர் கணப்பொழுதும் இருக்கவில்லை. இந்த அசாதாரண சுமை போராளிகளைப் பெரும் சிரமங்களுக்குள்ளாக்கியது. அவர்கள் திடப்டுத்தி வைத்திருந்த மன உறுதியும், இலட்சிய வேட்கையும் தான் தாயகத்திற்கான இந்தப் பணியில் தளராமல் முனைப்படைய வைத்தன. ஒரு போராளி தனது அத்தியாவசிய தேவைக்காக போர்முனையில் இருந்து அகன்றால் அந்த இடத்தில் நின்று இராணுவத்தை எதிர்க்கக் கூடிய ஆட்பலத் தேவை பூர்த்திசெய்யப்படாது போனாடல பெரும் வெற்றிடம் உருவாகும். யுத்த முனையில், முன்னணிப்படையில், போராளிகளின் நிழலில், அருகில் மக்களும் நின்றிருந்தால் இன்று சரித்திரம் வேறாக இருந்திருக்கும். இதேவேளையில் எதிரியின் நிலைமை வேறாக இருந்தது. இத்தளத்தில் இருந்து நோக்கும் போது அவனுக்கு ஆட்பலத்திற்கு குறைவிருக்கவில்லை. உண்பதற்கும், உறங்குவதற்கும், ஓய்வதற்குமாக அவனுக்கு பிரதியீடாக மற்றைய அணிகள் இருந்தன.

காயம்பட்ட எதிரியின் இடத்தில் நிற்பதற்கு இன்னொருவன் இருந்தான். போதிய ஆட்பலம் இருந்ததால் அவனது துப்பாக்கி எந்த நேரமும் கனன்று கொண்டேயிருந்தது.

எங்கள் போர்க்களத்தில் எங்கு பார்த்தாலும் போரிடும் மக்கள் நின்றிருந்தால் வெற்றியின் தூரம் அதிகம் இல்லை. தாயகத்தின் மீட்பிற்காக, தமிழ்மக்களின் சுதந்திர வாழ்விற்காக இரத்தம் சிந்திய, இன்னுயிரை ஈந்த போராளிகளின் உணர்வுகளுடன் அனைவரும் போரிட எழுவோம். சுதந்திர பூமியில் வாழ்வதற்காகத் துணிவோம். ஆனையிறவு வெல்லப்படும். அதைப்போல் தமிழீழத்தின் அனைத்து எதிரிப்பாசறைகளும் தகர்த்தெறியப்படும்.

(முற்றும்)




செய்தி:— படையிலிருந்து ஓடியவர்கள், கொழும்பில் திரும்பவும் வந்து சேரலாம் என இராணுவ அதிகாரி ஒருவர் கூறியுள்ளார்.

# எல்லை நோக்கி......

காலத்தின் கடமையை
கருத்துடன் ஏற்று
கல்லறையில் துயில்வோரே!

தேசத்தின் விடிவுக்காய்
காலமெல்லாம் விழித்திருந்து
களப் பலி யானோரே!

நீர், நிலம், காற்றெங்கும்
எதிரிக்குப் பொறிவைத்து
நீறாகிப் போனோரே!

தன் இனத்தின் இடர் போக்க
இன்னல்கள் பல ஏற்று
தற் கொடையானோரே!

தமிழீழத்தின் தற்பெருமை
தரணியெங்கும் தழைத்தோங்க
தன் உடலை அழித்தோரே!

சமுதாயப் புரட்சிக்காய்
தங்களையே மெழுகாக்கி - தமிழ்
உலகெங்கும் ஒளிர்வோரே!

தங்கள் அடியொற்றி
தமிழீழப் படையணிகள் - விரைகின்றன
எதிரியின் எல்லை நோக்கி.

- மோகன் -

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

1941 ஆவணியில் பள்ளி வாழ்வு முடித்து ஈழகேசரி வாரப் பத்திரிகையின் ஆசிரியர் குழுவில் சேர்ந்தது முதலாக இவரது இலக்கியப்பணி ஆரம்பமாயிற்று.

அப்போது இவர் ஏறத்தாழ முப்பது சிறுகதைகள் எழுதியிருப்பார். அவற்றில் மிகப் புகழ்பெற்ற சிறுகதை "மனித மாடு". இக்கதை தமிழ்நாட்டுத் தேர்வுக் கதைத் தொகுப்பு ஒன்றில் இடம் பெற்றது.

ஈழகேசரியின் இலக்கியப் பணி ஊடாக இவர் இலக்கிய நண்பர்கள் பலருடன் பேனா உறவை வளர்த்துக்கொண்டார். புக்கு இடமாற்றம்பெற்றது. சுதந்திரன், வீரகேசரி, தினசரிப்பத்திரிகைகளில் அடுத்த ஆறு ஆண்டுகள் இலக்கியம் செழித்தது.

1963 இல் தாயகமான யாழ்ப்பாணத்திற்கு மீண்ட இவர் ஈழநாடு வாரமலர் பொறுப்பாசிரியர் பதவியில் அமர்ந்தார். இலக்கிய மறுமலர்ச்சிச் சேவையினை விட்ட குறையிலிருந்து தொடர வாய்ப்புக் கிட்டியது.

சுயமாக சுதந்திரமாகத் தனிக்காட்டு ராஜாவாகப் பணியாற்ற வாய்ப்புக் கிட்டியதால் இக்காலத்தில் சிறுகதை, தொடர் கதை, கட்டுரை, வாராந்த ஆஸ்த்மா நோயுடன் இன்று கொடிய போராட்டம் நடத்தும் இந்தப் பழம் பெரும் இலக்கிய நட்சத்திரம் தனது தாயாரின் நற்சிந்தனையே தனது இலக்கிய யாத்திரைக்குப் பக்க பலமாக அமைந்தது என்று இன்றும் மிகுந்த நன்றியுடன் நினைவு கூருகிறார்.

துறவறம் பூண்ட தன் யாத்திரைப் பாதையில் மனச்சோர்வும் பிணியும் எட்டிப் போக உதவிய விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழகத்தினரைத் தன் செடியில் பூத்த ரோஜா என்று வர்ணிக்கிறார்.

- அளவையூரான் -

# முதுபெரும் எழுத்தாளர் அ.செ.மு

இத்தொடர்பு பின்னர் மறுமலர்ச்சிச் சங்கம் உருவாகப் பெரிதும் துணை புரிந்தது. வளமான இலக்கிய ரசனையும் தரமான எழுத்தார்வமும் உள்ள மறுமலர்ச்சிக்காரரின் படைப்புக்கள் முதலில் சங்கத்தின் கையெழுத்துப் பத்திரிகையில் அரங்கேறிப் பின்னர் ஈழகேசரியில் வெளிவரும். வரதர் சு. வே. நாவற்குழியூர் நடராஜன், அ. ந. க, ச. வே. பஞ்சாட்சரம், மகாகவி ஆகியோர் குறிப்பிடக்கூடிய மறுமலர்ச்சிக்காரர்கள்.

இவர்கள் பின்பு "மறுமலர்ச்சி" என்ற இலக்கிய மாத வெளியீடு ஒன்றினையும் வெளியிடத் துணிந்தனர். இம்மாத சஞ்சிகையின் முதலாண்டு இணையாசிரியராக அ. செ. மு. பணி புரிந்தார். மறுமலர்ச்சிச் சங்கத்தின் தலைவராக இவர் பணியாற்றிய காலத்தில் அது கிராமம் கிராமமாகப் போய் இலக்கிய விழாக்களை நடத்தியது.

ஆறு ஆண்டு மட்டில் இவ்விதம் தொடர்ந்த பணி, கொழும் சுவையம்சம், இலக்கிய ஆய்வு என்றெல்லாம் நிறையவே எழுதினார். இவரின் புதிய இருபது சிறுகதைகளும் ஒரு முழுமையான நாவலும் இக்காலத்தில் தோன்றின.

'கல்கி' ஆசிரியரின் நல்லாசியுடன் சிலகாலம் 'எரிமலை' என்ற பெயரில், சுயமாக, மாதமிருமுறைப் பத்திரிகை ஒன்றினையும் வெளியிட்டார்.

ஈழநாடு வாரமலரில் பணியாற்றிய காலத்தில், பத்தாவது ஆண்டு நிறைவு இலக்கியப் போட்டி, சமூக ஏற்றத்தாழ்வு சிறுகதைப் போட்டி, இரத்ததானச் சிறுகதைப் போட்டி எனப் பல்வேறு போட்டிகளை நடத்திக் கொடுத்துப் போட்டி நடுவர்களில் முதன்மையானவராகவும் பணிபுரிந்திருக்கிறார். இதன் பயனாகப் புதிய எழுத்தாளர்கள் பலரின் ஆற்றல் வெளியாக உதவினார் எனலாம்.

சிறு பராயம் முதலாக இவரைப் பிடித்து வருத்தும்

முதுபெரும் எழுத்தாளர் அ. செ. முருகானந்தன் அவர்களுக்கும், கவிஞர் அல்லை ஆறுமுகம் அவர்களுக்கும், "வெளிச்சம்" முதலாவது இதழ் வெளியீட்டு விழாவின் போது, விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகத்தால் ஒவ்வொருவருக்கும் பத்தாயிரம் ரூபா பணத்தினை விடுதலைப் புலிகள் இயக்கத்தின் பிரதித் தலைவர் கோ. மகேந்திரராசா அவர்கள் வழங்கி கௌரவித்தார்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# அன்னை பூமியில்



## ஆடுவளர்ப்பு ஊக்குவிப்பு

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகம் யாழ். மாவட்டப் பகுதிகளில் நல்லின ஆடுகளை பெருக்கும் நோக்கில் பல செயற் திட்டங்களில் ஈடுபட்டு வருகின்றது.

தொல்புரம் பகுதியில் உள்ள 59 குடும்பங்களுக்கு இத் திட்டத்தின்கீழ் தலா ஒரு நல்லின ஆடு வீதம் வழங்கப்பட்டுள்ளது.

இவற்றினை சினைப்படுத்தவென சிறந்த இனத்தை சேர்ந்த ஆடுகள் மேலும் மூன்று குடும்பங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

இவ்வாறு வழங்கிய நல்லின ஆடுகளில் இருந்து பெருகிய 26 ஆடுகளை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகம் தற்போது பெற்றுள்ளது. இதனை தென்மராட்சி கோட்டத்தில் உள்ள கிராமமொன்றுக்கு வழங்கவும் திட்டமிட்டுள்ளது.

இத்திட்டமானது யாழ் மாவட்டத்தில் நல்லின ஆட்டை பெருக்கவும் மக்களை ஆடு வளர்ப்பில் ஊக்குவிப்பதன் மூலம் வேலை வாய்ப்பை பெருக்கவும் ஏதுவாகின்றது.

## யாழ். மாநகரசபை எல்லைக்குள்ளும் பனை நடுகைத்திட்டம்.

அருகிவரும் கற்பகச் செல்வத்தைக் காக்கவும் எதிர்காலச் சந்ததியின் ஆரோக்கியத்திற்கு உதவவும் நகரத்தின் சுற்றுப்புறச் சூழலைப் பேணவும் எம் மண்ணை வளம்படுத்தும் நோக்கத்துடன் ஒரு இலட்சம் பனம் விதைகளை நடும் திட்டமும் மேற்கொள்ளப்படுகின்றது.

## கைத்தறி நெசவு நிலையம்

கிளிநொச்சியிலுள்ள தர்மபுரத்தில் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகத்தினரால் கோணேஸ் நெசவு நிலையம் என்ற பெயரில் அமைந்த கைத்தறி நெசவு நிலையம் ஒன்று, மீள புனரமைக்கப்பட்டு இயங்கி வருகிறது. இங்கு 15 பேர் பயிற்சியினை முழுமையாக முடித்துள்ளதோடு புதிதாக மேலும் 15 பயிலுனர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டு வருகின்றது.

## வல்லைவெளியில் 1500 பனம் விதைகள் நாட்டப்பட்டன

பனை, தென்னை வள அபிவிருத்தி ஒன்றியத்தினரால் அண்மையில் வல்லைவெளி வீதி இரு மருங்கிலும் பனம் விதைகள் நாட்டப்பட்டன.

வல்லைவெளியின் காப்பரண்களாகவும், பயன்தரும் நிழல்தரும் மரங்களாகவும் பயன்படுத்தும் நோக்குடன் மேற்படி ஒன்றியத்தினர் அண்மைக்காலமாக பனை தென்னை வள அபிவிருத்தி ஒன்றியப் பொறுப்பாளர் தலைமையில் மேற்படி ஒன்றிய ஊழியர்கள் சுமார் ஆயிரத்து ஐந்நூறு விதைகளை நாட்டினார்கள்.

## கடற்புலிகளின் பாதுகாப்பு

அண்மைக்காலமாக கிளாரிக் கடலேரிப் பகுதியினூடான பொது மக்களின் போக்குவரத்துகளுக்கு கடற்புலிகள் பாதுகாப்பு வழங்கி வருகின்றனர். நவீன ஆயுதங்கள் பொருத்தப்பட்ட கடற்புலிகளின் படகுகள் ரோந்து நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதோடு; பொதுமக்களின் படகுகளைத் தாக்க முனைகின்ற ஸ்ரீலங்கா கடற்படைப் படகுகள் கடற்புலிகளினால் விரட்டிச் சென்று தாக்கப்படுகின்றது. இந் நிகள்வுகள்; தமிழீழ கடற்பரப்பிலும் ஸ்ரீலங்கா அரசின் ஆதிக்கம் வலுவிழந்து வருவதை பறைசாற்றி வருகின்றன.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



விடுதலைத் தீ ஓங்குக!

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்